# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No. 2 of 2013**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகை யில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியை யும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**

**Editor:** R. Bala
**Design:** M. James
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1644
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.me
(or) www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

*மறுபடியும் பத்திரிகை மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நேரத்திற்கு பத்திரிகையை நிறைவு செய்து அனுப்ப கர்த்தர் துணை செய்தார். இதில் பங்குகொண்டு உழைத்திருக்கின்ற அனைவருக்கும் நன்றி சொல்ல வேண்டும். பலருடைய உழைப்பில் மலர்ந்து வருகின்றது திருமறைத்தீபம். எழுதுகிறவர்கள், எழுத்துப்பிழைகளைத் திருத்துகிறவர்கள், மொழிபெயர்க்கிறவர்கள், இரு நாடுகளில் அச்சிடுகிறவர்கள், இதற்கெல்லாம் பண உதவி செய்கிறவர்கள், இந்தப் பணிக்காக ஊக்கங்கொடுத்து அயராது ஜெபிக்கிறவர்கள் என்று அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இத்தனை பேரின் உழைப்பில் உருவாகி உங்கள் கரத்தை இப்போது பத்திரிகை அடைந்திருக்கிறது. இதுவரை வந்த இதழ்களைப் போல இதுவும் உங்களுடைய ஆத்மீக வாழ்க்கைக்கு அளப்பரிய ஆசீர்வாதத்தை அளிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஜெபம். அநேகர் கணினியில் பத்திரிகையையும், வேத செய்திகளையும் பயன்படுத்திக் கொள்ளுகிறீர்கள். அதில், இதில் வராத செய்திகளும் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றது. அவையும் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.*

*இந்த இதழில் கர்த்தரின் பத்துக்கட்டளைகளைப்பற்றிய ஆக்கம் ஒன்று வந்திருக்கின்றது. இன்றைக்கு பத்துக்கட்டளைகளைப் பின்பற்றத் தேவையில்லை என்று ஒரு சாரார் சொல்லி வருகின்றார்கள். அந்தவிதமான எண்ணங்கள் எப்படித் தோன்ற ஆரம்பித்தன என்பதை அலசுகிறது அந்த ஆக்கம். அத்தோடு சுவிசேஷத்தை சொல்லுவதற்கு பத்துக்கட்டளைகள் எந்தளவுக்கு அவசியம் என்பதை விளக்கி 'சொல்ல வேண்டியவிதத்தில் சொல்லுவோம் சுவிசேஷம்' என்ற ஆக்கம் வந்திருக்கின்றது. சுவிசேஷத்தில் நாம் சொல்ல வேண்டிய முக்கியமான மூன்று அம்சங்களை இதில் விளக்கியிருக்கிறேன்.*

*வாலிபர்களுக்காக நீங்கள் ஒருபோதும் எழுதியதில்லையே என்று பலர் ஆதங்கத்தோடு கேட்டிருக்கிறார்கள். தனியாக அப்படி எழுத வேண்டிய அவசியம் நம்மினத்தில் இருக்கிறது என்பதை நான் உணர்ந்ததால் நம்மினத்து கிறிஸ்தவர்களுக்கும், வாலிபர்களுக்கும் பயனுள்ள விதத்தில் ஓர் ஆக்கம் இதில் வெளிவந்திருக்கின்றது. அதுவும் உங்களை சிந்தித்து செயல்பட வைக்கட்டும்.*

*வாசியுங்கள், பயனடையுங்கள், கர்த்தருக்காக வாழுங்கள். எங்களையும் உங்களுடைய ஜெபத்தில் மறக்காமல் நினைவுகூருங்கள். நன்றி! - ஆசிரியர்*

# காலத்தால் அழியாத கர்த்தரின் கட்டளைகள்


## - 21ம் நூற்றாண்டுக்கு இன்றியமையா கட்டளைகள் -

ஒரு காலத்தில் மேலை நாடுகளிலும் கீழைத் தேசங்களிலும் கடவுளின் பத்துக்கட்டளைகளுக்கு அதிக மரியாதையும் மதிப்பும் அளிக்கப்பட்டது. பத்துக்கட்டளைகளை மரப்பலகைகளிலோ அல்லது தகடுகளிலோ பெரிதாக எழுதி பொதுவாக சபையின் சுவர்களில் வைத்திருப்பார்கள். பத்துக்கட்டளைகளை ஓய்வு நாள் சிறுவர் பாடசாலைகளில் தவறாது சொல்லிக்கொடுப்பார்கள். சபை ஆராதனைகளிலும் அதை ஒவ்வொரு ஓய்வு நாளிலும் வாசிப்பார்கள். இன்றும் சில சமயப்பிரிவுகளில் அதை வாசிக்கும் வழக்கம் மேலை நாடுகளில் இருந்து வருகிறது. இதற்கெல்லாம் காரணம் அவர்கள் பத்துக்கட்டளைகளை சடங்கைப்போல எண்ணிப் பயன்படுத்தி வந்ததல்ல. பத்துக்கட்டளைகளின் உண்மைத் தன்மையை அவர்கள் அறிந்தும் உணர்ந்தும் வைத்திருந்ததுதான்.

இருந்தாலும் அன்றிருந்ததுபோல் இன்றைக்கு வெளிப்படையாக இந்தளவுக்கு பத்துக்கட்டளைகளில் மேலை நாட்டுக் கிறிஸ்தவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. பத்துக்கட்டளைகள் நல்ல கட்டளைகள்தான், அவை அவசியந்தான், நல்ல போதனைகளையும் அவை தருகின்றன என்றெல்லாம் கிறிஸ்தவர்கள் நிச்சயம் அவற்றைப் பாராட்டிப் பேசினாலும், பத்துக் கட்டளைகளின்படி நிச்சயம் ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழ வேண்டும் என்று சொல்லுகிற கூட்டம் வெகுவேகமாக குறைந்து வந்திருக்கின்றது. பத்துக்கட்டளைகளை சாதாரணமாக வெளிப்படையாக விளக்கிப் போதிக்கும் வழிமுறை சபைகளில் மாறி அது ஏன் அவசியம் என்று விளக்கிச் சொல்லி கிறிஸ்தவர்களை நம்ப வைக்கவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை தோன்றியிருக்கின்றது. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் பத்துக்கட்டளைகள் மியூசியத்தில் வைக்கப்படும் பொருளின் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. இதற்கெல்லாம் காரணங்கள் இல்லாமலில்லை.

### பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்கள்

என்னைப் பொறுத்தவரையில் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகு கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இதற்கு நிச்சயம் காரணமாக இருந்திருக்கின்றன. திருச்சபை வரலாறு இதைத் தெளிவாக விளக்குகிறது. இங்கிலாந்தில் பிறந்து வாழ்ந்த ஜோன் டார்பி (John Darby) உருக்கொடுத்த டிஸ்பென்சேஷனலிசம் (Dispensationalism)




இன்றைக்குப் பத்துக்கட்டளைகள் கிறிஸ்தவர்களால் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படாததற்குரிய காரணங்களில் முக்கியமானதாக இருந்திருக்கிறது. டார்பி தன்னுடைய போதனையை ஸ்கோபீல்ட் என்பவரின் துணையோடு அமெரிக்காவில் பெரிதும் பரப்பினார். அது பின்பு அமெரிக்காவில் இருந்து ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தப் போதனை வேதத்தில் காணப்படாததொன்று. இதற்கு வேதத்தில் எங்கும் ஆதாரம் தேடிக்கண்டுபிடிக்க முடியாது. மனிதனால் செயற்கையாக உருவாக்கப்பட்ட போதனை இது. இந்தப் போதனையை உருவாக்கிய டார்பி, கடவுள் ஏழுவித காலவரையிலான செயற்பாடுகளின் மூலம் தன்னுடைய நோக்கங்களை மானிடவர்க்கத்தில் இந்த உலகத்தில் நிறைவேற்றுவதோடு அதன்படி எதிர்காலத்தையும் நிர்ணயிக்கிறார் என்று விளக்கம் கொடுத்தார். இந்த ஏழு காலப்பிரிவுகளையும் பொறுத்தவரையில் ஒரு காலப்பகுதியில் நிகழ்வது அடுத்த காலப்பகுதியில் தொடராது என்றும், ஒரு காலப்பகுதியின் நிகழ்வுகள் அடுத்த காலப்பகுதியோடு சம்பந்த மற்றது என்றும் ஜோன் டார்பி விளக்கியதால் அவருடைய செயற்கையான விளக்கங்கள் வேதத்தைக் கூறுபோட்டு பழைய ஏற்பாட்டைப் புதிய ஏற்பாட்டில் இருந்து அடியோடு பிரித்து, பழைய ஏற்பாட்டின் அடிப்படைப் போதனைகள் இஸ்ரவேலருக்கு மட்டும் சொந்தமானவை என்று விளக்கும் நிலைக்கு அவரைத் தள்ளியது. வேதத்தைப் பிரித்துக்கூறுபோடும் இந்த செயற்கை முறையினால் பழைய ஏற்பாட்டில் திருச்சபைக்கான அடையாளம் இல்லை என்றும், பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை முற்றாக அழிக்கப்பட்டுவிட்ட, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு அவசியமில்லாத உடன்படிக்கை என்றும் அவரை விளக்க வைத்தது. இதெல்லாம் எக்காலத்துக்கும் உரியதாக அதுவரை விளக்கமளிக்கப்பட்டு வந்திருந்த பத்துக்கட்டளைகளை பழைய ஏற்பாட்டுக் காலத்துக்கு மட்டும் உரியதாக விளக்கும் நிலைக்கு டார்பியைத் தள்ளியது. டார்பியின்

*போதனைகளை ஸ்கோபீல்ட் 1901ல் வெளியிட்டார். இவை 1930க்குள்ளேயே அமெரிக்காவில் நிலைகொள்ள ஆரம்பித்துவிட்டன. இவை முதலில் இங்கிலாந்தில் 'பிலிமவுத் சகோதரர்களிடமும்' அதற்குப் பிறகு இங்கிலாந்து அமெரிக்க நாடுகளிலும், அந்நாடுகளுக்கு வெளியில் சகோதரத்துவ, பாப்திஸ்து சபைகளிலும் பரவலாகப் பரவி நிலைகொள்ள ஆரம்பித்தன. இன்றிருக்கும் மிஷனரி நிறுவனங்களில் பெரும்பாலானவை இந்த டிஸ்பென்சேஷனலிசக் கோட்பாட்டையே பின்பற்றி வருகின்றன. இதனால் பாதிக்கப்படாத இறையியல் கல்லூரிகள் மிகக் குறைவு. இந்தளவுக்கு ஜோன் டார்பி-ஸ்கோபீல்ட் கூட்டுமுயற்சியால் பரப்பப்பட்ட டிஸ்பென்சேஷனலிசம் பத்துக்கட்டளைகளின் அவசியத்தைப் பற்றிய நம்பிக்கைகளை கிறிஸ்தவர்களின் இருதயத்திலிருந்தும், சபை மேடைகளிலிருந்தும் பெருமளவுக்கு அகற்றிவிட்டன. இதனால்தான் நம்மினத்தில் நமக்கு இன்று நியாயப்பிரமாணம் தேவையில்லை என்ற உறுதியான எண்ணமும், பத்துக்கட்டளைகளை நாம் பெரியளவுக்கு வலியுறுத்துவது அவசியமில்லை என்ற எண்ணமும் பரவலாக இருந்து அந்த அடிப்படையிலான இறையியல் நம்பிக்கைகளோடு கூடிய சபைகளையும் உருவாக்கி வைத்திருக்கிறது. இது வரலாற்றின் அடிப்படையில் நான் விளக்குகின்ற இறையியல் உண்மை. வரலாற்றை மறுப்பதென்பது முடியாத காரியம்.*

## இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும்

*இதுவரை நாம் பார்த்த நிலைமை 19ம் நூற்றாண்டிற்கு முன்பாக இருந்ததில்லை. முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்களுடைய காலப்பகுதியை எடுத்துக்கொண்டால் அவர்கள் பத்துக்கட்டளைகளின் அவசியத்தை வெளிப்படையாகப் போதித்திருப்பதைப் புதிய ஏற்பாடு முழுவதும் நம்மால் வாசித்து அறிந்துகொள்ள முடிகிறது. இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியக் காலமெல்லாம் அதை வலியுறுத்தி வந்திருக்கிறார் என்பதற்கு மிகச் சிறந்த அடையாளமாக மலைப்பிரசங்கத்தை எடுத்துக்கொள்ளலாம், மலைப்பிரசங்கம் பத்துக்கட்டளைகளுக்கான விபரமான வியாக்கியானம். எல்லாக் கட்டளைகளுக்கும் இயேசு அதில் விளக்கந்தராவிட்டாலும் அவர் தந்திருக்கும் விளக்கங்கள் அனைத்தும் பத்துக்கட்டளைகளுக்கான விளக்கமே. அதைப் பின்பற்றியே பவுலும், பேதுருவும், யாக்கோபுவும், யோவானும் பத்துக்கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய ஏற்பாட்டுப் போதனைகளைத் தந்திருக்கிறார்கள். (இந்தக் கருத்தை நான் பின்பு விபரமாக விளக்கவிருக்கிறேன்.)*

## ஆதிசபையில் . . .

*அப்போஸ்தலர்களுடைய காலத்துக்குப் பிறகு பத்துக்கட்டளைகளின் அவசியத்தை திருச்சபை தொடர்ந்து போதித்து வந்திருக்கின்றது. ரோமன் கத்தோலிக்க மதம் உருவாகி 7ம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தை அனுபவித்த காலத்திலும் பத்துக்கட்டளைகளின் அவசியத்தை கிறிஸ்தவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆதிசபையில் 5ம்*

நூற்றாண்டில் பெரும் கிறிஸ்தவ தலைவராக இருந்த ஆகஸ்தீன் (Augustine), கர்த்தரின் கட்டளைகளைப் பற்றி எழுதும்போது, 'நியாயப்பிரமாணத்தின் (பத்துக்கட்டளைகள்) மூலம் கர்த்தர் மனிதனின் கண்களைத் திறந்து அவன் தன்னுடைய பரிதாபமான ஆவிக்குரிய நிலையை உணரவைத்து, விசுவாசத்தின் மூலம் கர்த்தரின் கிருபையில் தஞ்சமடைந்து குணப்படச் செய்கிறார். கிருபையை நாம் நாடவேண்டுமென்பதற்காகவே நியாயப் பிரமாணம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது; நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவேண்டுமென்பதற்காகவே கிருபை நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது' என்று விளக்கியிருக்கிறார்.

## 16ம் நூற்றாண்டில் . . .

*16ம் நூற்றாண்டில் கர்த்தர் மறுபடியும் வேதவழியிலான கிறிஸ்தவத்தை ஏற்படுத்த மார்டின் லூத்தர் போன்றவர்களைப் பயன்படுத்தி திருச்சபை சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தபோது பத்துக்கட்டளைகள் அலட்சியப் படுத்தப்படவோ, நிராகரிக்கப்படவோ இல்லை. அவற்றை லூத்தர், கல்வின் முதல் அத்தனை சீர்திருத்தவாதிகளும் விளக்கிப் போதித்திருக்கிறார்கள். இதற்கு இன்றும் எழுத்திலிருக்கும் அவர்களுடைய போதனைகளைக் கொண்ட நூல்களே சான்று. ஜோன் கல்வின் கிறிஸ்தவம் பற்றி எழுதி பிரான்சு மன்னனுக்கு அனுப்பிய பெரும் நூலைப் பெற்று வாசித்துப் பாருங்கள். பத்துக்கட்டளைகளின் அவசியத்தை அவர் அதில் உணர்த்தியிருக்கிறார். கர்த்தரின் கட்டளைகள் பற்றி மார்டின் லூத்தர் சொல்லுகிறார், 'நாம் எந்தளவுக்கு குற்றவுணர்வுள்ளவர்களென்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கும், எதைநோக்கி நாம் மீண்டும் திரும்பவேண்டுமென்பதற்காகவும் நமக்கு நியாயப் பிரமாணமும், சுவிசேஷமும் தேவை.' இதைப்பற்றி எழுதும் ஜோன் கல்வினோ, 'இஸ்ரவேலைப்போலவே நாமும் அதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். தன்னுடைய நியாயப்பிரமாணத்தைப் பூரணமானதாக இருக்கும்படிச் செய்திருக்கும் கடவுள் அது என்றைக்கும் நிலைத்திருக்கும்படிச் செய்திருக்கிறார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை' என்கிறார். அந்தளவுக்கு 16ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதம் பத்துக்கட்டளைகளுக்கு மதிப்புக் கொடுத்து அதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறது.*

## 17ம் நூற்றாண்டில் . . .

*அதற்குப் பிறகு வரும் 17ம் நூற்றாண்டை கிறிஸ்தவத்தின் ஒரு பொற்காலம் என்று சொல்லலாம். இந்த நூற்றாண்டில் பியூரிட்டன் (Puritan) பெரியவர்கள் திருச்சபை சீர்திருத்தத்தை இன்னொரு படிக்கு உயர்த்தினார்கள். இந்தக் காலப்பகுதி கண்டதுபோன்ற பிரசங்கிகளும், இறையியல் வல்லுனர்களும், இறையியல் நூல்களும் இன்றைக்கும் உருவாகவில்லை. ஜோன் பனியன் முதற் கொண்டு ஜோன் ஓவன் வரையுள்ள எத்தனை சிறப்பான கிறிஸ்தவப் பெரியோரைக் கர்த்தர் எழுப்பித் தன்னுடைய சபையை அலங்கரித்திருக்கிறார். இவர்களுடைய போதனைகள், பிரசங்கங்கள், எழுத்துக்கள் அனைத்தும் ஒன்று தவறாமல் பத்துக்கட்டளைகளின் அவசியத்தையும் கிறிஸ்தவர்கள் மத்தியில் அவற்றின் நிரந்தரமான இடத்தையும் வலியுறுத்துகின்றன. தோமஸ்*

வாட்சனின் (Thomas Watson) ‘பத்துக்கட்டளைகள்’ நூல் இன்றும் ஆங்கிலத்தில் பிரசுரத்தில் இருந்து வருகிறது. இதில் வாட்சன் அருமையாக கர்த்தரின் கட்டளைகளுக்கு முன்னுரையோடு தெளிவாக ஆணித்தரமான விளக்கமளித் திருகிறார். ஒவ்வொரு கட்டளைக்குள்ளும் ஆழமாகப் போய்ப்பார்த்து அவற்றின் பல்வேறு நடைமுறைப் பயன்பாடுகளையும் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து கண்டுபிடித்து நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார். வாட்சன் சொல்லுகிறார், ‘கர்த்தருடைய நீதிச்சட்டங்கள் கோவிலிலுள்ள திரைச்சீலை கட்டப்பட்டிருக்கும் சங்கிலியைப் போன்றது. அந்தத் திரைசீலை தங்கச்சங்கிலிகளால் இணைக்கப்பட்டு சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. மனச்சாட்சியுள்ள எந்த மனிதனும் திரைச்சீலையை இணைக்கும் அந்தச் சங்கிலியில் ஒரு வளையத்தையாவது உடைக்கமாட்டான். கர்த்தரின் நீதிகட்டளையான சங்கிலியில் ஒரு வளையத்தை உடைத்தால் முழுச் சங்கிலியையும் உடைத்ததுபோலாகும்.’ இதேமுறையில் தொமஸ் பொஸ்டன், சாமுவேல் பொஸ்டன், ஜோன் பிளேவல், ஜோன் பனியன், ஜோன் நியூட்டன், எட்வர்ட் பிசர், மெத்தியூ ஹென்றி போன் றோரும் பத்துக்கட்டளைகளுக்கு அதிகமாக விளக்கமளித்து எழுதியிருக் கிறார்கள். இதைப்பற்றி எழுதும் ஜோன் நியூட்டன் (John Newton), ‘நியாயப்பிரமாணத்துக்கும் கிருபைக்கும் இடையில் இருக்கும் ஒற்றுமையை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் நியாயப்பிரமாணத்தைப் பற்றியும், கிருபையைப்பற்றியும் எந்தவிதமான தவறான எண்ணங்களும் நமக்குள் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்’ என்று எழுதியிருக்கிறார். ஜோன் பனியன் (John Bunyan), ‘நியாயப்பிரமாணத்தின் தன்மையைப் பற்றி உணராத ஒருவன் பாவத்தைப் பற்றிய சரியான உணர்வைக் கொண்டிருக்க முடியாது. பாவத்தைப் பற்றிய சரியான அறிவையும், உணர்வையும் கொண்டிராதவன் இரட்சகரைப்பற்றிய சரியான அறிவைக் கொண்டிருக்க முடியாது’ என்று கூறுகிறார். பியூரிட்டன் பெரியவர்களின் காலத்தில் திருச்சபை பத்துக்கட்டளைகளுக்கு பெருமதிப்பளித்து கிறிஸ்தவர்களின் பரிசுத்தமாக்குதலாகிய கிருபையின் கடமைக்கு அவற்றின் இன்றியமையா அவசியத்தைத் துல்லியமாகப் போதித்து வந்திருக்கிறது.

## 18ம் நூற்றாண்டில் . . .

பதினெட்டாம் நூற்றாண்டைப் பார்க்கின்றபோது நமக்கு நினைவு வருவது அன்றைய காலப்பகுதியின் சிறப்பான எழுப்புதல்கள்தான். முதலாம் எழுப்புதலில் (First Great Awakening) சம்பந்தப்பட்டவர்களில் குறிப்பிடத் தகுந்தவர் அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற ஜொனத்தன் எட்வர்ட்ஸ். எட்வர்ட்ஸ் பத்துக்கட்டளைகள் நிரந்தரமானவை என்று விசுவாசித்தவர். அவருடைய போதனைகள் அதன் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. அக்காலத்தில் அதில் எவருக்கும் பெரிய சந்தேகம் இருக்கவில்லை. எட்வர்ட்ஸ் எழுதுகிறார், “பக்திவிருத்திக்குரிய கட்டளைகளை வைத்திருந்தும் அவற்றை அறியாமல் இருப்பதால் என்ன பயன்? கர்த்தருடைய மனதை நாம் அறிந்து கொள்ள எந்த அக்கறையும் காட்டாமலிருந்தால் அவர் தன் மனதை நமக்கு ஏன் வெளிப்படுத்த வேண்டும்? இருந்தபோதும் நாம் பாவம் செய்கிறோம்

*என்பதை தெரிந்துகொள்ளுவதற்காக இருக்கும் ஒரே வழி அவருடைய ஒழுக்க நீதிச்சட்டங்களை நாம் அறிந்துவைத்திருப்பதுதான்; 'பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது" (ரோமர் 3:20).*

எட்வர்ட்சின் வழியில் இந்த முதலாம் எழுப்புதலில் வேல்ஸிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவின் சில பகுதிகளிலும் கர்த்தரால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவர் ஜோர்ஜ் விட்பீல்ட். அத்தோடு வேல்ஸைச் சேர்ந்த ஹொவல் ஹெரிஸ், டேனியல் ரோலன்ட்ஸ் போன்றோருக்கும் இதில் பங்கிருந்தது. இவர்கள் பத்துக்கட்டளைகளின் அவசியத்தை உணர்ந்து பிரசங்கித்தவர்கள். இவர்களின் சுவிசேஷத்தில் அது காணப்பட்டது. விட்பீல்டும், எட்வர்ட்ஸும் கல்வினிஸ்டுகளாக இருந்தார்கள். அதற்கு மாறான கருத்தைக் கொண்டிருந்த ஜோன் வெஸ்லிகூட அந்தக் காலத்தில் பத்துக்கட்டளைகளின் நிரந்தரத்தன்மையை வலியுறுத்தியிருக்கிறார். வெஸ்லி, 'தீர்க்கதரிசிகளாலும் வலியுறுத்தப்பட்ட, பத்துக்கட்டளைகளான ஒழுக்கநீதிச் சட்டங்களை இயேசு கிறிஸ்து அகற்றிவிடவில்லை. அதன் எந்தப் பகுதியையும் அகற்றிவிடும் எண்ணம் கிறிஸ்துவுக்கு அவருடைய முதலாம் வருகையின்போது இருக்கவில்லை. இந்த நியாயப்பிரமாணம் ஒருபோதும் உடைக்கப்படாது . . . எல்லாக்காலங்களிலும் மனிதகுலம் பின்பற்றும்படியாக இது நிரந்தரக் கட்டளைகளாக இருக்கும்' என்கிறார். ஜொனத்தன் எட்வர்ட்ஸின் சீர்திருத்த போதனைகளின் அடிப்படையிலேயே பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. அதன் போதகர்களும், இறையியல் வல்லுனர்களும் கர்த்தரின் கட்டளைகளுக்கு அதிக மதிப்புக்கொடுத்து அதன் அடிப்படையில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தவர்கள். கிறிஸ்தவ வாழ்க்கைக்கு பத்துக்கட்டளைகள் நிரந்தரமாகத் தேவை என்பதை உணர்ந்து போதித்தவர்கள்.

இந்தக் காலத்திலேயே வேறு மாற்றங்களும் ஏற்பட ஆரம்பித்தன. ஜெர்மனியில் பக்தி இயக்கம் எழுந்தது. குவேக்கர்களும் இந்தக் காலப்பகுதியில் உருவானார்கள். பக்தியில் அதிக ஆர்வம்காட்டிய இவர்கள் கிறிஸ்தவம் பாரம்பரியச் சடங்காக இல்லாமல் ஆவிக்குரிய துடிப்போடு இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு உணர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததால் ஒருவித 'உள்ளுணர்வு' (Mysticism - மிஸ்டிஸிசம்) போக்கில் போக ஆரம்பித்தார்கள். கர்த்தரின் கட்டளைகளைப் பின்பற்றுவதால் பரிசுத்த மாகுதல் உண்டாகும் என்பதைவிட்டு விலகி சடுதியானதொரு அனுபவத் தினால் வெறும் உணர்ச்சிகளின் எல்லைகளை அடைவதால் அதை அனுபவிக்கலாம் என்ற நிலைமைக்கு கிறிஸ்தவம் போக ஆரம்பித்தது. இந்த இயக்கங்களே பின்னால் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் பிரிவுகள் ஏற்பட வழியேற்படுத்தின. பரவசக்குழுக்கள் மத்தியில் பத்துக்கட்டளைகளின் நிரந்தரத்தன்மையையும், பரிசுத்தமாக்குதலுக்கான அதன் அவசியத்தையும் போதிப்பவர்கள் மிகக் குறைவு.

## 19ம் நூற்றாண்டு . . .

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜோன் டார்பியின் டிஸ்பென்சேஷனலிசம்

எவ்வாறு உருவானது என்று ஆரம்பத்திலேயே விளக்கினேன். இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய இன்னொரு மனிதரே சார்ள்ஸ் பினி (Charles Finney). மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியும் என்று போதித்த பினியின் பரிசுத்தமாக்குதல் பற்றிய போதனைகள் வேதபூர்வமாக இருக்கவில்லை. கர்த்தரின் கட்டளைகளின் அவசியத்தை பினி ஏற்றுக்கொண்டபோதும் இந்த உலகத்தில் கிறிஸ்தவன் நிரந்தர பூரணத்துவத்தை அடைய முடியும் என்றும், பாவம் செய்கிற கிறிஸ்தவன் பாவியாக இருக்கிறவனைப்போலவே கர்த்தரின் நியாயத்தீர்ப்பை சந்திக்கிறான் என்றும் போதித்தார். சார்ள்ஸ் பினியின் போதனைகள் பரிசுத்தமாக்குதலைப் பற்றிய வேதத்துக்கு முரணான கெஸ்சிக் மற்றும் 'இரண்டாம் ஆசீர்வாதப்' போதனைகளுக்கு மூலகாரணமாக அமைந்தன. 18ம் நூற்றாண்டுவரை இருந்துவந்த கிறிஸ்தவத்தையே மாற்றி அமைத்ததில் டார்பியோடு சேர்த்து பினிக்கும் பெரும் பங்கிருந்தது.

ஜோன் டார்பியும், ஸ்கோபீல்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டை அதுவரை இருந்துவந்திருந்த இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களும், சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் போதித்த ஆணித்தரமான பத்துக்கட்டளைகள் பற்றிய போதனைகளில் இருந்து திசைமாற்றினர். வேதம் மற்றும் விசுவாச அறிக்கைகள், வினாவிடைப் போதனைகள் மூலம் பாதுகாக்கப்பட்டு பிரசங்கித்து போதிக்கப்பட்டு வந்திருந்த சீர்திருத்தப் போதனைகளின் அடிப்படையிலான உடன்படிக்கை பற்றிய விளக்கங்களுக்கு மாறான விளக்கங்களை இவர்கள் தந்து கிறிஸ்தவர்களில் பத்துக்கட்டளைகளின் நடைமுறைப் பயன்பாட்டை அலட்சியம் செய்து பரிசுத்தமாகுதலாகிய கிருபையின் கடமையை வேறுவழிகளில் விளக்க ஆரம்பித்தனர். அதனால்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டு, கிறிஸ்தவத்தை அதுவரை இருந்து வந்திருந்த பாதையில் இருந்து திசைதிருப்பி பத்துக்கட்டளைகளின் நிரந்தரத்தன்மை பற்றிய போதனையில் மண்ணை வாரிப்போட்டு கிறிஸ்தவர்களுக்கு அவற்றால் இன்றைக்குப் பெரிய பயன்களெதுவும் இல்லை என்ற எண்ணம் எல்லோர் மத்தியிலும் ஏற்பட வழியேற்படுத்தியது என்று சொன்னேன்.

இந்த நூற்றாண்டில் இருந்தவர்கள்தான் பெயர் பெற்ற பிரசங்கிகளான ஸ்பர்ஜனும் (Spurgeon), ஜே.சீ. ரைலும் (J. C. Ryle). ஒருவர் பாப்திஸ்து மற்றவர் சுவிசேஷ ஆங்கிலிக்கன் பிரிவைச் சேர்ந்தவர். இருந்தபோதும் இருவருமே சீர்திருத்தவாத போதனைகளைப் பின்பற்றியவர்கள். இவர்கள் பத்துக்கட்டளைகளின் நிரந்தரத்தன்மையைப் பிரசங்கங்களிலும், தங்களுடைய எழுத்துக்களிலும் வலியுறுத்தியிருக்கிறார்கள். ரைல் சொல்லுகிறார், 'நியாயப்பிரமாணத்தையும், பத்துக்கட்டளைகளையும் அவசியமற்றவை என்று ஒதுக்குகின்ற தவறான மனப்பான்மையைக்குறித்து எச்சரிக்கையாக இருங்கள். சுவிசேஷம் அவற்றை இல்லாமலாக்கிவிட்டது என்றோ அல்லது அவற்றிற்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்ற எண்ணத்திற்கோ இடங்கொடுத்துவிடாதீர்கள். கிறிஸ்துவின் வருகை பத்துக்கட்டளைகளின் அவசியத்தை மயிரளவுக்குக்கூட மாற்றியமைத்துவிடவில்லை. கிறிஸ்துவின் வருகை அதன் அதிகாரத்தை மேலும் உயர்த்தி

*மகிமைப்படுத்தவே செய்திருக்கிறது' (ரோமர் 3:31). இதேபோல் ஸ்பர்ஜனும் 1882, மே மாதத்தில் 'நியாயப்பிரமாணத்தின் நிரந்தரத்தன்மை' என்ற தலைப்பில் பத்துக்கட்டளைகளின் நிரந்தரத்தன்மையை வலியுறுத்திப் பிரசங்கம் செய்திருக்கிறார். அந்தப் பிரசங்கத்தில் அவருடைய முதலாவது தலைப்பே, 'கர்த்தரின் நியாயப்பிரமாணம் நிச்சயம் நிரந்தரமானதாகத்தான் இருக்கவேண்டும்' என்றிருந்தது. 'நியாயப்பிரமாணம் (பத்துக்கட்டளைகள்) அகற்றப்படவில்லை; எந்த மாற்றங்களுக்கும் உள்ளாகவில்லை. நம்முடைய வீழ்ச்சியடைந்திருக்கும் மானிடத்துக்கேற்றவிதத்தில் அதனை நாம் எந்த விதத்திலும் மாற்றியமைக்கப் பார்க்கக்கூடாது. கர்த்தரின் ஒவ்வொரு நீதியான கட்டளைகளும் எப்போதைக்கும் நிரந்தரமானவை' என்கிறார் ஸ்பர்ஜன்.*

*இதே காலப்பகுதியைச் சேர்ந்த ஆக்டேவியஸ் வின்ஸ்லோ* (Octavius Winslow) *என்ற அருமைப் போதகரும், 'தன்னுடைய மக்கள் நியாயப் பிரமாணமற்ற வாழ்க்கை வாழ்வதற்காக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவில்லை. நாம் அவற்றை நிராகரிப்பதற்காக அவர் அவற்றை மதிக்கவில்லை. அவற்றை நாம் கீழ்ப்படிவோடு பின்பற்றாமலிருப்பதற்காக அவர் அவற்றிற்குக் கீழ்ப்படியவில்லை. கிறிஸ்து அவற்றை நிறைவேற்றியது பரிசுத்தமாக நாம் வாழ்வதற்காகவே தவிர, அவற்றை நாம் நிறைவேற்றவேண்டிய கடமைப்பொறுப்பிலிருந்து நமக்கு விடுதலை தருவதற்காக அல்ல. நமது விசுவாசம் நியாயப்பிரமாணத்தை இல்லாமலாக்கிவிடவில்லை மாறாக அவற்றின் அவசியத்தை நிலைநாட்டுகின்றது' என்று விளக்கியிருக்கிறார்*

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தபோதும் ஸ்பர்ஜனும், ரைலும், வின்ஸ்லோ போன்ற பேரறிஞர்களும் தொடர்ந்து பத்துக்கட்டளைகளின் நிரந்தரத்தன்மையை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அவற்றைப் பின்பற்றாமல் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாகுதலாகிய கிருபையின் கடமைகளைச் செய்ய வழியில்லை என்று ஆணித்தரமாகப் போதித்திருக்கிறார்கள்.*

## 20ம் நூற்றாண்டு . . .

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் டார்பியிசத்தினால் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையிலேயே பெருமளவுக்கு கிறிஸ்தவம் 20ம் நூற்றாண்டில் தொடர்ந்தது. இருந்தபோதும் இந்தக் காலப்பகுதியில் பத்துக்கட்டளைகளின் நிரந்தரத் தன்மை சீர்திருத்த கிறிஸ்தவ சபைகளாலும், ஏனையோராலும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. இந்தக் காலப்பகுதி சந்தித்த ஒரு புதிய போதனைக்குப் பெயர் 'புதிய உடன்பாட்டு இறையியல்' என்பது. இதை விளக்கியவர்களில் முக்கியமானவர் ஜோன் ரைசிங்கர்* (John Reisinger) *என்ற அமெரிக்க பாப்திஸ்து பிரசங்கி. இந்தப் போதனை பாப்திஸ்துகளின் மத்தியில் குறுகிய காலத்துக்கு மட்டும் வலிமைபெற்று பின்பு அடங்க ஆரம்பித்தது. இதன் போதனையின்படி கிறிஸ்தவர்களுக்கு பத்துக்கட்டளைகள் அவசியமானபோதிலும் அவற்றின் அடிப்படையில் வாழ்ந்தால் மட்டுமே பரிசுத்தமாகுதல் நிகழும் என்பது அர்த்தமற்றது என்பதாகும். இதைப் பின்பற்றியவர்கள் முக்கியமாக பத்துக்கட்டளைகளில்*

நான்காவது கட்டளையான ஓய்வுநாளை நாம் இன்றைக்கு பின்பற்றத் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். பத்துக்கட்டளைகளை இன்றைக்கு பின்பற்ற அவசியமில்லை என்று சொல்லுகிற கூட்டத்துக்கு ஓய்வுநாளைப் பின்பற்றுவதே எப்போதும் பெரும் சங்கடமாக இருந்து வந்திருக்கிறது. இந்த எண்ணம் இன்றைக்கு பாப்திஸ்து, சகோதர சபைகளைச் சேர்ந்தவர்களிடம் அதிகம் காணப்படுகிறது. நாம் வாழும் நூற்றாண்டு பத்துக்கட்டளைக்கும் ஓய்வுநாளுக்கும் என்றும் இல்லாதவகையில் மதிப்புக்கொடுக்காமல் இருக்கும் ஒருகாலம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தக் காலப்பகுதியில் வாழ்ந்த சீர்திருத்த கிறிஸ்தவரும் பாப்திஸ்துமான ஏ.டபிள்யூ. பின்க் (A.W. Pink), 'புதிய ஏற்பாடு பத்துக்கட்டளைகளுக்கான வேதவியாக்கியானமாக இருக்கிறது; அவை பத்துக்கட்டளைகளைப் பின்பற்றும்படி நம்மை ஊக்குவிப்பதற்கான காரணங்களைத் தந்தும், வாக்குத்தத்தங்களை நமக்கு நினைவூட்டியும், பாவத்தைச் செய்துவிடுவதில் இருந்து நம்மைக் கட்டுப்படுத்தும்விதமாக பயமுறுத்தும் போதனைகளாக இருக்கின்றன. புதிய ஏற்பாட்டை உண்மையில் புரிந்துகொள்ளுவோமானால் அவை பத்துக்கட்டளைகளை மேலும் ஆழமாக விளக்குவதாகவும், அவற்றின் உள்ளர்த்தங்களை வெளிப்படுத்துவதாகவும், அவற்றின் பயன்பாடுகளை அள்ளித்தருகின்றதாகவும் இருப்பதை நாம் கண்டுகொள்ளுவோம்' என்கிறார். இதேபோல் இந்த நூற்றாண்டின் பெரும் பிரசங்கியாக இருந்த மார்டின் லொயிட் ஜோன்ஸ் தன்னுடைய பிரசங்கத் தொகுப்பான மலைப்பிரசங்கத்தில், 'நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கும் கிருபை உங்களை நியாயப்பிரமாணத்திற்குக் (பத்துக்கட்டளைகளுக்கு) கட்டுப்பட்டு வாழும்படிச் செய்யவில்லையானால், நீங்கள் கிருபையை அடையவில்லை என்றுதான் அர்த்தம்' என்று ஆணித்தரமாக எழுதியிருக்கிறார். பின்க்கையும், லொயிட் ஜோன்ஸையும் பொறுத்தவரையில் பத்துக்கட்டளைகளில் அனைத்துக்கட்டளைகளையும் நாம் பின்பற்ற வேண்டும். அதில் எதையும் அகற்றவோ அல்லது மாற்றவோ நமக்கு உரிமையில்லை.

இத்தனைக்கும் மத்தியில் மேலைத்தேய நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் அப்போஸ்தலர் காலத்து கிறிஸ்தவ நம்பிக்கைகள் குறைவடைந்து நியாயப்பிரமாணமற்ற (கீழ்ப்படிவுக்கு அவசியமில்லாத) ஒருவித கிறிஸ்தவத்தை நாடிப்போகும் கிறிஸ்தவர்களே இன்று அதிகமாக வளர்ந்து வருவது துக்கத்துக்குரிய காரியமே. மேலைத்தேய கிறிஸ்தவத்தை அதிகம் பாதித்திருக்கும் அன்டிநோமியனிச ஆவியைப் பற்றி எழுதுகின்ற கிறிஸ்தவ பிரசங்கிகளில் ஒருவரான ஆர்.சி. ஸ்பிரவுல் (R. C. Sproul), 'நியாயப்பிரமாணத்தின் மூலம் நாம் இரட்சிக்கப்பட வில்லை, சுவிசேஷத்தின் மூலமே இரட்சிக்கப்பட்டோம். நம்முடைய நீதியாலல்ல கிருபையால், கிரியைகளினால் அல்ல விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டோம். ஆகவே, விசுவாசிக்கு நியாயப்பிரமாணம் அவசியமில்லை, கீழ்ப்படிவுக்கும் அவசியமில்லை என்று சொல்லுகிற போதனை தான் அன்டிநோமியனிசம்' என்று விளக்குகிறார். இந்த அன்டிநோமியனிச எண்ணப்போக்குத்தான் இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் பத்துக்கட்டளை களின் நிரந்தரத் தன்மையை உதாசீனம் செய்யும்படி வைத்திருக்கிறது. இருந்த

போதும் மெய்யான கர்த்தரின் திருச்சபை இன்றைக்கும் பத்துக்கட்டளைகளின் அவசியத்தைத் தொடர்ந்து அங்குமிங்குமாக அதிரடியாகப் பிரசங்கித்தும் போதித்தும் வருவது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

## நம்மினத்துக் கிறிஸ்தவத்தில் . . .

மேலைத்தேய நாடுகளில் கிறிஸ்தவத்தில் எந்தவித மாற்றங்கள் ஏற்பட்டு புதிய ஏற்பாட்டு ஆரம்ப காலத்தில் பத்துக்கட்டளைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முக்கிய இடம் இல்லாமல் போய், அதைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை, கிறிஸ்தவ வாழ்வில் அதைக் கட்டாயம் கடைப்பிடித்து வாழ வேண்டியதில்லை என்ற நிலை எப்படி உருவானது என்று ஆராய்ந்திருக்கிறோம். இந்த எண்ணப்போக்கு நம்மினத்துக்குள் எப்படிப் புகுந்தது? 16, 17ம் நூற்றாண்டுக்கால கிறிஸ்தவத்தை நம்மினத்தில் அறிமுகப்படுத்தியவர்கள் என்று பார்த்தால் அதற்கு இருவர் மட்டுமே காரணமானவர்களாக இருந்திருக்கிறார்கள். டேனிஷ் மிஷனரியாக தமிழ்நாட்டின் தரங்கம்பாடிக்கு வந்து பணிபுரிந்த சீகன்பால்கும் (Ziegenbalg), கல்கத்தாவுக்கு வந்த வில்லியம் கேரியுமே (William Carey) அவர்கள். இந்த இருவரும் சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றியவர்கள், பத்துக்கட்டளைகளின் நிரந்தத் தன்மையையும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவற்றின் இன்றியமையா தன்மையையும் பெரிதும் உணர்ந்து போதித்தவர்கள். இந்த சத்தியங்களை பிள்ளைக்காலப் பருவத்திலேயே வீட்டிலும் சபையிலும் கற்று வளர்ந்து கிறிஸ்துவை அடைந்தபின் வாழ்க்கையில் பின்பற்றி வந்திருந்தவர்கள். நிச்சயம் அவர்கள் இந்த அடிப்படையில்தான் தங்களுடைய போதனைகளை இந்தியாவிலும் தந்திருந்திருப்பார்கள். இவர்கள் இருவருடைய பணிகளின் பலாபலன்களும் நம்மினத்தில் தொடர்ந்து நிலைக்காமல் போய்விட்டன. இன்று அவர்களுடைய பெயர்கள் நமக்குத் தெரிந்திருக்கின்ற அளவுக்கு அவர்களுடைய நம்பிக்கைகளையும், போதனைகளையும் நாம் அறிந்துவைத்திருக்கவில்லை. ஹீரோக்களைப் போல அவர்களை நம்மால் பார்க்கவும் நடத்தவும் மட்டுமே முடிகிறதே தவிர அவர்கள் விசுவாசித்தவற்றை நாம் அறிந்து பின்பற்றுவதுமில்லை, அவர்களைப் போல வாழ்ந்தும் வருவதில்லை.

இவர்களுக்குப் பின்னால் நம்மத்தியில் கிறிஸ்தவப் பணிபுரிய வந்தவர்கள் இவர்களைப்போல சீர்திருத்த கிறிஸ்தவர்களாக இருந்ததில்லை. கிறிஸ்தவத்தின் பல சமயப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் நம்மினத்துக்கு வந்து பணிபுரிந்திருந்தாலும் நூற்றுக்குத் தொன்னூறுவீதமான ஊழியங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவத்தைப் பிரதிபலிப்பவையாகவே இருந்திருக்கின்றன. முக்கியமாக பத்துக்கட்டளைகள் நமக்கு அவசியமில்லை என்று சொல்லுகின்ற டிஸ்பென்சேஷனலிசப் போதனையைப் பின்பற்று கின்றவர்களாகவே பெரும்பாலும் இருந்திருக்கின்றனர். ஜோன் டார்பியினுடையதும், சார்ள்ஸ் பினியினுடையதும், மூடியினுடையதும் போதனைகளை அறிந்து வைத்திருக்கின்றளவுக்கு நம்மினத்துக் கிறிஸ்தவர்களுக்கு கர்த்தரின் வேதசத்தியங்கள் தெரியாமலிருக்கின்றது. அந்தளவுக்கு இவர்களுடைய போதனைகளின் ஆளுமையை மட்டுமே

நம்மினத்துக் கிறிஸ்தவத்தில் பார்க்கிறோம். அமெரிக்காவைச் சேர்ந்த மூடியின் போதனைகளின் ஆளுமையால் அப்போஸ்தல, சீர்திருத்தவாத, பியூரிட்டன் காலத்தைப் பிரதிபலிக்காத ஒருவகை ஆர்மீனியனிச கிறிஸ்தவம் நம்மினத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, காலூன்றி இன்றும் நம்மக்களை அந்தவிதமாகவே சிந்திக்க வைத்துக்கொண்டிருக்கிறது. இவற்றால் பாதிக்கப்படாத கிறிஸ்தவ டினோமினேஷனோ, நிறுவனமோ நம்மினத்தில் இல்லை. இயேசு கிறிஸ்து தந்திருக்கும் வேதத்தைவிட இவர்களுடைய ஆளுகைக்குக் கீழேயே நம்மினத்துக் கிறிஸ்தவம் இருந்து வருகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அப்போஸ்தல, சீர்திருத்தவாத, பியூரிட்டன் காலக் கிறிஸ்தவத்தைப் பிரதிபலித்த தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்களாக இருந்த இங்கிலாந்தின் சார்ள்ஸ் ஸ்பர்ஜன், ஜே.சீ. ரைல் போன்றவர்களையோ, அவர்களுடைய கிறிஸ்தவ நம்பிக்கைகளையோ, போதனைகளையோ நாம் அறிந்து வைத்திருக்கவில்லை. பிரசங்கிகளுக்கெல்லாம் பீரங்கியாக இருந்த, கிறிஸ்தவ போதனைகளை அப்போஸ்தலர்களைப்போல பிரசங்கித்துப் போதித்து அறிமுகப்படுத்திய ஸ்பர்ஜனைப் பற்றிப் பெரிதும் அறிந்து வைத்திருக்காமலும், அவருடைய வேத விசுவாசங்களைக் கொண்டிராமலும் வாழ்ந்து வருகிறது நம்மினத்துக் கிறிஸ்தவம். ஸ்பர்ஜனும், ரைலும் பத்துக்கட்டளைகளின் நிரந்தரத் தன்மையை ஆணித்தரமாக விசுவாசித்துப் போதித்து அதன்படி வாழ்ந்து வந்தவர்கள். கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் பத்துக்கட்டளைகள் நிரந்தரமாக இருக்க வேண்டியதைப் பற்றி எத்தனை பிரசங்கங்களையும், போதனைகளையும் ஸ்பர்ஜன் அளித்திருக்கிறார். அது பற்றி ஜே.சீ. ரைல் எத்தனை தடவை எழுதியிருக்கிறார். இதெல்லாம் தெரியாமல் தடுமாறுகின்ற இறையியல் நம்பிக்கைகளை மட்டும் கொண்டு கிறிஸ்துவின் பெயரில் இருந்து வருகிறதே நம்மினம்.

நான் இதுவரை விளக்கிய வரலாற்று இறையியல் அம்சங்களே பத்துக்கட்டளைகளின் அவசியத்தையும், இன்றியமையாத தன்மையையும் அறிந்துகொள்ளாமல் கிறிஸ்தவர்கள் நம்மினத்தில் வாழ்ந்து வருவதற்குக் காரணம். எது நீதி, எது பாவம் என்று நாமறிந்துகொள்ளுவதற்காக நமக்குத் தரப்பட்டிருக்கும் ஒரே கருவியான பத்துக்கட்டளைகளை அலட்சியம் செய்து கிறிஸ்தவ வேடம்போட்டு வாழ்ந்து வருவதாலேயே நம்மினத்தில் புறஜாதிப் பண்பாடுகளும், பாரம்பரியமும் சிலந்தி வலையைப் போல நம்மைச் சுற்றி இன்றும் ஆவிக்குரிய வலிமையில்லாதவர்களாக நம்மை இருந்துவரச் செய்கிறது. இந்துப் பண்பாட்டில் இருந்துவருகின்ற சமூகப் போலித்தனங்களை நாம் இன்றும் தொடர்கிறோமே என்ற உணர்வுகூட இல்லாமல் அவற்றை கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கருதி நம்மவர்கள் வாழ்ந்து வருவதற்கு என்ன காரணம்? கிறிஸ்தவ வேதத்தைப் பயன்படுத்தி அவற்றைத் தோலுரித்து இனங்கண்டு வெறுத்துத் தூக்கியெறியக்கூடிய இருதயமும் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இதற்கெல்லாம் வழிகாட்டக்கூடியதாக நமக்குக் கர்த்தர் தந்திருக்கும் பத்துக்கட்டளைகளை நாம் அலட்சியப்படுத்தி வாழ்ந்துவருவதால்தான்.

‘பத்துக்கட்டளைகள் இல்லாவிட்டால் பாவம் என்று ஒன்று இல்லை’

என்று பவுல் ரோமரில் சொல்லியிருப்பதன் அர்த்தம் உங்களுக்குப் புரிகிறதா? எக்காலத்துக்கும் பாவத்தைப் பாவமாகக் காட்டக்கூடியது பத்துக்கட்டளைகள் மட்டுமே. அதற்கு நாம் இடங்கொடுக்காவிட்டால் பாவ உணர்வே இல்லாமல் தான் நாம் வாழ்ந்து வரமுடியும்? பாவத்தைப் பாவமாகப் பார்க்க நமக்கு உதவும் மூக்குக் கண்ணாடி பத்துக்கட்டளைகள். கிறிஸ்தவனுக்கு அது எப்படி அவசியமில்லாமல் போகும்? ஆதாமால் ஏதேன் தோட்டத்தில் பாவமில்லாமல் பத்துக்கட்டளைகளை நிறைவேற்றி வாழமுடிந்தது. அவன் பாவத்தில் விழுந்தபிறகு பாவத்தை அடையாளம் காணவும், அதிலிருந்து விலகிக் கடவுளை இரட்சிப்புக்காக நாடி ஓடவும் அவனுக்கு பத்துக்கட்டளைகள் தேவையாக இருந்தது. கிருபையை அவன் அடைந்தபிறகு மறுபடியும் நீதியோடு (பூரணமில்லாமல்) பாவமற்ற வாழ்க்கையை வாழவும் அவனுக்கு பத்துக் கட்டளைகள் அவசியமாக இருந்தது. பரலோகத்தில் மட்டுந்தான் நமக்குப் பத்துக்கட்டளைகள் அவசியமில்லை. ஏன் தெரியுமா? அங்கே நாம் பாவத்தின் சாயலே இல்லாமல் நிரந்தரமாக எக்காலத்துக்கும் பூரணமாகப் பத்துக் கட்டளைகளை மட்டுமே நம்மில் கொண்டிருந்து வாழப்போவதால்தான்.

இதுவரை பத்துக்கட்டளைகளுக்கு உங்கள் வாழ்க்கையில் அக்கறை காட்டாமல் வாழ்ந்திருக்கின்றீர்களா? அதை இன்றே விட்டுவிடுங்கள். பாவியான மனிதன் இயேசுவிடம் வர அவனுக்கு சொல்ல வேண்டிய சுவிசேஷத்தை பத்துக்கட்டளைகள் இல்லாமல் விளக்க முடியாது. பாவத்தை அதுமட்டுமே விளக்குகின்றது. நீங்கள் பாவத்தை செய்யாமல் நீதியாக வாழ அது இல்லாமல் ஒருபோதும் முடியாது. கிறிஸ்துவை நாம் விசுவாசித்தபோதும் நாம் அவரைப்போல நீதியானவர்களாக மாறிவிடவில்லை. நாம் பரிசுத்தமாகுவதற்காக இரட்சிக்கப்பட்ட பாவிகளே. நாம் பத்துக்கட்டளைகளை வாழ்க்கையில் பின்பற்றினால் மட்டுமே பரிசுத்தமாக முடியும். வெறும் அல்லேலூயாக்களும், ஸ்தோத்திரங்களும் நம்மைப் பரிசுத்தமாக்கிவிடாது. பத்துக்கட்டளைகளை நம்மில் நாம் நிறைவேற்றுகிறபோதே பாவம் போய் பரிசுத்தம் ஏற்படுகின்றது. காலை சுற்றியிருக்கும் பாம்பைப் பார்த்து 'நீ போ' என்றால் அது போய்விடுமா? அதைப் போகவைக்க வேண்டியது நம் கடமையில்லையா? அது போவதற்கு நாம் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்தால் மட்டுமே அது போகும். அதேபோல்தான் நம்மில் இருக்கும், நாம் செய்து வரும் பாவங்களும். அவற்றை ஒவ்வொரு நாளும் நினைவிலும், செயலிலும் இருந்து போக்க நமக்கு பத்துக்கட்டளைகள் தேவையாக இருக்கிறது. பத்துக்கட்டளைகளைக்கொண்டு பாவங்களை அடையாளங்கண்டு கிருபையினதும், ஆவியினுடையதும் துணையால் நாம் பாவங்களை நம் வாழ்க்கையில் இருந்து அகற்றி பத்துக்கட்டளைகள் விளக்கும் நீதியான காரியங்களை நாம் செய்து வரவேண்டும். இப்போதாவது பத்துக்கட்டளைகளின் அவசியத்தை உணர்கிறீர்களா? இன்றே அவற்றை சிந்தனையோடு வாசிக்க ஆரம்பியுங்கள். அதுபற்றி விளக்கி 'பத்துக்கட்டளைகள்' என்ற தலைப்பில் நான் தமிழில் வெளியிட்டுள்ள நூலை வாங்கி வாசியுங்கள். பத்துக்கட்டளைகள் பற்றி நான் இனியும் அடுத்த இதழில் தொடர்ந்து எழுதவிருக்கிறேன். அப்போது மறுபடியும் சந்திப்போம்.

# சொல்ல வேண்டியவிதத்தில் சொல்லுவோம் சுவிசேஷம்

நீங்கள் யாரோடாவது கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவோ அல்லது பிரசங்கம் செய்யவோ முயற்சிப்பீர்களாயின் அந்தச் செய்தியை நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் விளக்காவிட்டால் அது மெய்யான சுவிசேஷ செய்தியாக இருக்கமுடியாது. இன்னொரு வகையில் சொல்லப்போனால் நியாயப்பிரமாணம் இல்லாமல் நீங்கள் சுவிசேஷ செய்தியை சொல்லமுடியாது. சுவிசேஷத்தின் அடித்தளம் நியாயப்பிரமாணம் அல்ல; கிறிஸ்து மட்டுமே. இருந்தபோதும் ஒரு தனி மனிதன் கிறிஸ்துவிடம் நிச்சயம் வரவேண்டும் என்று அவனைப் பார்த்து நீங்கள் சொல்லுவதற்கு நியாயப்பிரமாணம் நிச்சயம் அவசியம். இதை நான் தெளிவாக விளக்குவது அவசியம்.

பிரசங்க இளவரசன் என்று அழைக்கப்பட்ட ஸ்பர்ஜன் இதுபற்றி சொல்லியிருப்பதைக் கவனியுங்கள், 'எந்த மனிதனும் நியாயப்பிரமாணத்தைப் பிரசங்கம் செய்யாமல் சுவிசேஷம் சொல்ல முடியும் என்று நான் நம்பவில்லை. நியாயப் பிரமாணம் தான் ஊசி; ஒரு மனிதனுடைய இருதயத்தில் சுவிசேஷமாகிய பட்டுநூலைத் தைக்கவேண்டுமானால் நியாயப்பிரமாணமாகிய ஊசியை முதலில் அவனுடைய இருதயத்துக்குள் நுழைக்காமல் அதைச் செய்ய முடியாது. நியாயப்பிரமாணத்தை ஒரு மனிதன் புரிந்துகொள்ளவில்லையென்றால் அவன் தான் பாவியென்பதை உணரமாட்டான். அவர்கள் மனப்பூர்வமாக இருதயத்தில் பாவிகளாக உணராவிட்டால் பாவங்களுக்காக செலுத்தப் பட்ட பலியின் மகத்துவத்தை உணர மாட்டார்கள். நியாயப்பிரமாணத்தால் முதலில் காயப்படாதவனுக்கு குணமாவதற்கு வழியில்லை. நியாயப்பிரமாணம் அவனைக் கொல்லாவிட்டால் அவன் உயிர்ப்பிக்கப்படுவதற்கு இடமில்லை.' ஸ்பர்ஜனின் வார்த்தைகள் பொன்னானவை.

அதேபோல் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரசங்கியும், வேதத்திற்கு வியாக்கி யானம் எழுதியவருமான மத்தியூ ஹென்றி, 'கடவுளால் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கும் சாதனத்தைத் தவிர (நியாயப்பிரமாணம்) வேறு எந்த சாதனமும் மனிதனுடைய பாவத்தை அவனுக்கு உணர்த்தும் என்று நினைக்கிறவன் வெறும் முட்டாள்' என்று எழுதியிருக்கிறார். 'நியாயப்பிரமாணத்தின் (பத்துக்கட்டளைகள்) தன்மையை அறியாதவன் பாவத்தின் தன்மையை அறியமாட்டான். பாவத்தின் தன்மையை அறியாதவன் இரட்சகரை அறிய வழியில்லை' என்று சொல்லியிருக்கிறார் மோட்ச பிராயாணத்தை எழுதிய ஜோன் பனியன். அமெரிக்க இந்தியர்களுக்கு சுவிசேஷம் சொல்லச் சென்ற ஜோன் எலியட் என்ற பியூரிட்டன் மிஷனரி யோவான் 3:16ஐ அவர்களுக்கு முதலில் மொழிபெயர்த்து சொல்லாமல் பத்துக்கட்டளைகளையே மொழிபெயர்த்தார். ஏன் தெரியுமா? எல்லா

*மனிதர்களுக்குமான நீதிச் சட்டத்தைத் தந்திருக்கும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை அவர்கள் முதலில் உணர்ந்தாலேயே யோவான் 3:16ன் பொருளை அவர்களால் புரிந்துகொள்ள முடியும் என்பதால்தான். அதேமாதிரிதான் நியூஹெப்பிரிதீஸ் என்ற பகுதியில் வாழ்ந்த, மனிதர்களை சாப்பிடும் மக்கள் மத்தியில் சுவிசேஷப் பணி செய்யச்சென்ற ஜோன் பேட்டனும் பத்துக்கட்டளைகளையே அவர்களுக்கு முதலில் போதித்தார். ஏன் தெரியுமா? இயேசு கிறிஸ்துவோடு ஒரு மனிதன் உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமானால் முதலில் அவன் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் இருக்கும் உறவில் ஏற்பட்டிருக்கும் பெரும் பிரிவை உணர வேண்டும் என்பதற்காகத்தான்.*

*சுவிசேஷம் சொல்லுவதற்கு அவசியமான ஒரு அற்புத வழி இருக்கிறதா? என்று நீங்கள் என்னைப் பார்த்துக்கேட்டால் அப்படியொரு வழியிருப்ப தாக எனக்குத் தெரியவில்லை என்றுதான் நான் பதிலளிப்பேன். உண்மையில் அத்தகைய வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சுவிசேஷத்தை அறிவிக்கின்ற காரியத்தைப் பற்றி நாம் அலசிப் பேச ஆரம்பிக்கின்றபோது நாம் அதற்கான வழிமுறைகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடாது. அதை செய்வதற்கான வழிமுறைகளைவிட அந்த செய்தியின் உள்ளடக்கத்தைப் பற்றி முதலில் முக்கியமாக சிந்திக்க வேண்டும்.*

*கடவுளை அறியாமல் இருக்கும் தனிமனிதனொருவனுக்கு நாம் எத்தகைய செய்தியை அறிவிக்க வேண்டும்? இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்தியாக அது இருக்க வேண்டும் என்று நீங்கள் நிச்சயம் சொல்லுவீர்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவை அவனுக்கு நாம் எப்படி அறிமுகப்படுத்துவது? அவனுக்கு கிறிஸ்துவைப் பற்றி நாம் என்ன விஷயங்களை சொல்ல வேண்டும். எப்படி, எங்கே நாம் ஆரம்பிப்பது? சமீபத்தில் நமது பத்திரிகையை நீண்ட காலமாக வாசிக்கும் கேரளத்து வாசகர் ஒருவர் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தார்.*

*கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் சகல அம்சங்களைப் பற்றி விபரமாக எழுதுவதல்ல என்னுடைய நோக்கம். என்னுடைய நோக்கமெல்லாம் சுவிசேஷம் சுவிசேஷமாகத் தனிமனிதனொருவனுக்கோ அல்லது மனித குலத்துக்கோ பயன்பட வேண்டுமானால் நியாயப்பிரமாணமில்லாமல் அதைப் பிரசங்கிக்கவோ அறிவிக்கவோ முடியாது என்பதை சுட்டிக்காட்டுவதுதான். ஆகவே, நாம் அறிவிக்கின்ற கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் காணப்பட வேண்டிய மூன்று முக்கிய அம்சங்களை இந்த ஆக்கத்தில் நான் உங்களுக்கு விளக்கிக்காட்ட விரும்புகிறேன்.*

*அந்த மூன்று அம்சங்களையும் விளக்குவதற்கு முன்பாக நியாயப் பிரமாணம் என்றால் என்ன என்பதை நான் விளக்காமல் இருக்க முடியாது. இதை வாசிக்கின்ற எல்லோருமே அது என்ன என்பதை அறிந்து உணர்ந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. வேதத்தில் நான்கு விதத்தில் நியாயப்பிரமாணம்* (Law) *என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.*

1. *அது முழு பழைய ஏற்பாட்டு நூல்களையும் குறிக்கும் பதமாக விளக்கப்படுகிறது.*

2. சில சமயங்களில் முழு வேதத்தையும் குறிக்கும் விதத்தில் இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
3. மோசேக்கு கர்த்தர் தந்த கட்டளைகள் அனைத்தையும் குறிக்கும் பதமாக விளக்கப்பட்டிருக்கின்றது.
4. பத்துக்கட்டளைகளை மட்டும் குறிக்கும் பதமாக விளக்கப் பட்டிருக்கின்றது.

நியாயப்பிரமாணம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் வேதப்பகுதியை அதன் சந்தர்ப்ப சூழ்நிலையின் அடிப்படையில் படிக்கின்றபோது அந்த வார்த்தை எந்த அர்த்தத்தில் அந்தப் பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

நியாயப்பிரமாணம் வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற நான்கு விதங்களில் நான்காவது அர்த்தத்தில் மட்டுமே நான் நியாயப்பிரமாணம் என்ற பதத்தை இந்த ஆக்கம் முழுவதிலும் விளக்கப் போகிறேன். அதாவது, சுவிசேஷத்தில் காணப்பட வேண்டிய முக்கிய அம்சமான கர்த்தரின் நீதிச் சட்டங்களான, ஒழுக்க நியதிகளான பத்துக்கட்டளைகளையே இங்கே நியாயப்பிரமாணம் என்ற பதத்தின் மூலம் நான் குறிப்பிடுகிறேன். பத்துக்கட்டளைகளின் அடிப்படையில் சுவிசேஷத்தில் காணப்பட வேண்டிய மூன்று அம்சங்கள் யாவை?

## 1. கடவுள்

சுவிசேஷம் சொல்லும்போது கடவுளைப் பற்றி விளக்க வேண்டும். இது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? இருக்கக்கூடாது. கடவுளின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி நீங்கள் சுவிசேஷத்தில் விளக்குவதாக இருந்தால் அதைக் கேட்கிறவர்களுக்கு கடவுளைப் பற்றி எப்படி விளக்காமல் இருக்கமுடியும்? வேதம் போதிக்கும் சுவிசேஷம் (கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி) கடவுளைப் பற்றியது. அந்தச் சுவிசேஷம் கடவுள் யார் என்பதையும், அவருடைய குணாதிசயங்கள் யாவை என்பதையும், அவருடைய படைப்புயிர்களான நமக்காக அவர் ஏற்படுத்தியிருக்கும் வாழ்க்கை முறை எது என்பதையும், நம்மிடம் அவர் எதை எதிர்பார்க்கிறார் என்பதையும் விளக்குகின்றது. சகல வல்லவரான, உலகைப் படைத்தவரான, சகலத்தையும் ஆளுகின்றவரான கடவுளைப் பற்றிப் பேசாத சுவிசேஷம் கிறிஸ்துவின் சுவிசேஷமாக இருக்க முடியாது.

நாம் வாழ்வதற்கே கடவுள்தான் காரணம் என்பதை சுவிசேஷம் விளக்குகிறது. நாம் அனுபவிக்கும் அனைத்தும் அவருக்கே சொந்தம் என்பதை அது சுட்டிக்காட்டுகிறது. நம்மை அவர் படைத்தார் என்பதையும், அவரை ஆராதித்து அவருடைய மகிமைக்காக வாழ்வதற்காகவே அவர் நம்மைப் படைத்தார் என்பதையும் சுவிசேஷம் சொல்லுகிறது. அப்போஸ் 13:16ஐ வாசித்துப் பாருங்கள். அங்கே பவுல் அந்தியோகியா ஜெப ஆலயத்தில் செய்தி கொடுக்கிறார். அங்கே யூத மக்களுக்கு முன்பாக அவர் செய்தி கொடுப்பதைப் பார்க்கிறோம். இந்த யூதர்களுக்கு பழைய ஏற்பாடு நன்றாகத்

*தெரிந்திருந்தது. அவர்களுக்கு கடவுளைப் பற்றியும் நியாயப்பிரமாணத்தைப் பற்றியும் தெரிந்திருந்தது. ஆகவே, பவுல் அவர்களுக்கு கடவுளைப் பற்றி அதிகம் விளக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை. இருந்தாலும் அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கின்ற பவுல் அவர்கள் அறிந்திருந்த கடவுளை அவர்களுக்கு நினைப்பூட்டியே அந்த சுவிசேஷத்தை விளக்கினார். அவர்கள் நம்பிய கடவுளின் அடிப்படையிலேயே அங்கு சுவிசேஷம் அன்று அறிவிக்கப்பட்டது. பவுல் தன் செய்தியை ஆரம்பித்த விதத்தைக் கவனியுங்கள், 'இஸ்ரவேலரே, தேவனுக்கு பயந்து நடக்கிற சகல ஜனங்களே கேளுங்கள்' என்றார் பவுல். அதற்குப் பிறகு 17-22ம் வசனங்கள்வரை அவர்களுக்கு கடவுள் அவர்கள் மத்தியில் செய்திருக்கின்ற செயல்களை விளக்குகிறார். பவுல் தான் இதுவரை விளக்கிய கடவுளின் செயல்களின் அடிப்படையில் 23ம் வசனத்தில் இயேசு கிறிஸ்துவை பின்வருமாறு அறிமுகப்படுத்துகிறார், 'தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலருக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார்'. கடவுளை, யேகோவா தேவனை நம்பிய யூதர்களுக்கு மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்ற பவுல், அவர்களுக்கு கடவுளைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கிறதுதானே என்ற அலட்சிய நோக்கில் அவரைப்பற்றி அறிவிப்பதை நிறுத்திக்கொள்ளவில்லை. எந்தக் கடவுளை அவர்கள் அறிந்திருந்தார்களோ, எந்தக் கடவுளை அவர்கள் நம்பினார்களோ அந்தக்கடவுளைப் பற்றி அவர்களுக்கு சொல்லி இயேசுவை அறிமுகப்படுத்தினார்.*

*அதேவேளை பவுல் புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்போது (அப்போஸ்தலர் 17) கடவுளைப் பற்றி சொல்லாமல் அதை அறிவிக்கவில்லை. யூதர்கள் மத்தியில் அவர்கள் அறிந்திருந்த கடவுளைப்பற்றி அறிவித்து பவுல் சுவிசேஷத்தை ஆரம்பித்தார். புறஜாதியார் மத்தியில் அவர்கள் அறிந்திராத கடவுளைப்பற்றி விளக்கி பவுல் சுவிசேஷத்தை ஆரம்பிக்கிறார். புறஜாதியார் மத்தியில் பவுல் சுவிசேஷத்தை ஆரம்பிக்கும் விதத்தைக் கவனியுங்கள், 'எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்கள் என்று காண்கிறேன்' என்று ஆரம்பித்தார் பவுல். அப்படி அவர் சொன்னதற்குக் காரணமென்ன? சிலை வணக்கத்தில் ஈடுபட்டிருந்த அந்த அத்தேனே பட்டண மக்கள் வாழ்ந்த நகரத்தில் 'அறியப்படாத தேவனுக்கு' என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தை அவர் கண்டதுதான் அதற்குக் காரணம். அது பவுலை சிந்திக்க வைத்தது. சிலைகளைக் கடவுள் என்று நம்பி இந்த மக்கள் வாழ்ந்தபோதும் அந்த சிலைகளையும் மீறிக் கடவுள் இருந்துவிட முடியும் என்ற சந்தேகத்தில் அவர்கள் 'அறிந்திராத' அந்தக் கடவுளுக்காகவும் ஒரு பலிபீடத்தை அவர்கள் வைத்திருந்தார்கள். நம் நம்பிக்கைகளை மீறியும் ஒரு கடவுள் இருந்துவிட்டால் அவருடைய துணையும் நமக்குத் தேவை என்ற எண்ணத்தில் அவர்கள் அதைச் செய்திருந்தார்கள். அதைப் பயன்படுத்திக்கொண்ட பவுல் அவர்களுக்கு 'அவர்கள் அறியாமல் ஆராதிக்கின்ற' அந்தக் கடவுளைப்பற்றி அவர் அறிவித்தார். பவுல் அத்தேனேயருக்கு சுவிசேஷத்தை சொல்லும்போது கடவுளைப்பற்றித் தெளிவாக விளக்கியே ஆரம்பித்திருப்பதைக் காண்கிறோம். அதற்குப் பிறகுதான் அவர்கள் அறியாமலிருக்கின்ற அந்தக் கடவுளே ஒரு நாளைக்*

குறித்து அந்த நாளிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு (இயேசு கிறிஸ்து) பூலோகத்தை நியாயந்தீர்ப்பார் என்றும் அதனால் அவர்கள் உடனடியாக மனந்திரும்ப வேண்டும் என்றும் அறிவித்தார்.

பவுல் யூத ஜெபஆலயத்திலும், அத்தேனே மக்களுக்கு முன்னும் பிரசங்கித்த சுவிசேஷத்தில் கடவுளின் நீதிச் சட்டமான பத்துக்கட்டளைகள் இருப்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? பத்துக்கட்டளைகள் இல்லாமல் பவுலால் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருக்க முடியாது தெரியுமா? பத்துக்கட்டளைகளான நியாயப்பிரமாணமே கடவுளைப் பற்றித் தெளிவாக விளக்கும் கடவுளின் வெளிப்படுத்தலாக இருக்கிறது. இந்தக் கட்டளைகளைக் கடவுள் மோசேக்கு சீனாய் மலையில் கற்பலகைகளில் தன் கையாலேயே எழுதி எழுத்தில் கொடுத்தார். அது மோசேயின் கையில் கொடுக்கப்படுவதற்கு முன் ஆதாமின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்தது. இந்தக் கட்டளைகள் இல்லாமல் கடவுளை அறிந்துகொள்ள வழியில்லை. இந்தக் கட்டளைகளே கடவுளைப் பற்றி நமக்குத் தெளிவாக வெளிப்படுத்தும் கடவுளின் ஒரே வெளிப்படுத்தலாக இருக்கின்றன. கடவுளைப் பற்றி அறிந்துகொள்ள நமக்கு வேறு சாதனங்கள் இல்லை. பத்துக்கட்டளைகள் கடவுளைப்பற்றி எப்படி விளக்குகின்றன என்பதைக் கவனியுங்கள்.

முதலாம் கட்டளை கடவுள் இருக்கிறார் என்பதை விவாதிக்காமல் அவர் இருக்கிறார் என்று ஆணித்தரமாக அறிவிக்கின்றன. தான் 'இருக்கிறவராக' இருக்கிறேன் என்கிறார் கடவுள். கடவுள் இருக்கிறாரா, இல்லையா? என்ற மனிதனின் ஆணவ விவாதங்களுக்கு இந்தக் கட்டளை முடிவுகட்டுகிறது. அதை விவாதிக்கின்ற எந்த உரிமையும் படைக்கப்பட்டவனான மனிதனுக்கு இல்லை. படைக்கப்பட்டவன் படைத்தவருடைய 'இருக்கும் தன்மையை' விவாதிப்பது எத்தனை முட்டாள்தனம். கடவுள் காலங்களுக்கு அப்பாற்பட்டவர் காலம் அவரைக் கட்டுப்படுத்த முடியாது. காலங்களை உருவாக்கியவர் கடவுளே. நாம் சுவாசிப்பதும், புசிப்பதும், வாழ்வதும் அவராலேயே. மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாதபடி கடவுள் இருக்கிறார். அப்படி 'இருக்கிறவரான' கடவுள் தம்மை மனிதர்களுக்கு வரலாற்றில் வெளிப்படுத்தினார். இங்கேதான் பத்துக்கட்டளைகளின் (நியாயப்பிரமாணம்) அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் காண்கிறோம். பத்துக்கட்டளைகள் நமக்கு கடவுள் யார் என்பதைத் தெரிவிக்கின்றன. அவை கடவுள் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார் என்று தெரிவிக்கின்றன. பத்துக்கட்டளைகளே கடவுளுடைய குணாதிசயங்களையும் அவருடைய ஒழுக்க நீதியையும் நமக்கு விளக்குகின்றன. அதனால்தான் பத்துக்கட்டளைகள் மனிதனுக்கு அவன் வாழ்க்கையில் தவறாது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நீதியை விளக்கும் ஒரே சாதனமாக இருக்கிறது. இது முழு மனித குலத்துக்கும் கொடுக்கப்பட்டது; சொந்தமானது. ஒழுக்க நீதிச் சட்டங்களான பத்துக் கட்டளைகள் விளக்கும் ஒழுக்க நீதிகள் கடவுளின் நீதியான குணாதிசயங் களின் அடிப்படையில் அமைந்தவை. கடவுளை அவருடைய நீதிச்சட்டங்களி லிருந்து பிரிக்க முடியாது. அவருடைய நீதிச்சட்டங்கள் இல்லாமல் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாது. அவருடைய நீதிச்சட்டங்களான பத்துக்

கட்டளைகளை நிராகரிப்பது அவரையே நிராகரிப்பதற்கு சமமானதாகும். பத்துக்கட்டளைகள் இல்லாமல் எப்படி அவரை நாம் அறிந்துகொள்ள முடியும். அது இல்லாமல் சுவிசேஷத்தை எப்படிச் சொல்ல முடியும்?

இரண்டாம் கட்டளையைக் கவனியுங்கள். அது சகலவிதமான சிலை வழிபாட்டையும் நிராகரிக்கின்றது. வானத்துக்கு கீழேயும், பூமியிலேயும், பூமிக்கு கீழேயும், தண்ணீரிலும், தண்ணீருக்குக் கீழேயும் இருக்கும் எதைக்கொண்டும் கடவுளை உருவமாகப் பார்த்து வழிபடுவதை இந்தக் கட்டளை தடைசெய்கிறது. சிலை வழிபாட்டை அது எந்த ரூபத்திலிருந்தாலும் கடவுள் வெறுக்கிறார்; நிராகரிக்கிறார். கடவுளை ஒரு பொருளின் மூலம் பார்ப்பதை அவர் விரும்பவில்லை. அவர் படைத்த பொருட்களை வைத்து அதற்குள் அவரை அடக்கப்பார்ப்பது (சிலுவை, படம் முதற்கொண்டு) அவரது நீதியான குணாதிசயங்களுக்கெல்லாம் எதிரானது. அவருடைய குணாதிசயங்களையும், வல்லமையையும், நீதியையும் கல்லிலோ, மரத்திலோ, படத்திலோ அடக்க முடியுமா? எங்கும் இருக்கும், காலங்களையெல்லாம் மீறியவரான, ஜீவனும், ஆவியானவருமான கடவுளை நாம் எப்படி உயிரற்ற பொருட்களில் அடக்கி வைக்கமுடியும். உருவ வழிபாடு கடவுளுக்கெதிரானது.

இந்த இரண்டாம் கட்டளை கடவுளை நாம் எப்படி வழிபடக்கூடாது என்பதைத் தீர்க்கமாக அறிவிக்கிறதைப் பார்க்கிறீர்கள் அல்லவா? இதேபோல் தான் மனிதநேயத்தை கடவுளைபோல வழிபடுவதும். இன்றைக்கு மனிதநேயம் (Humanism) அநேகருக்கு கடவுளாகிவிட்டது. மனிதநேயத்துக்குக் காரணமே கடவுள் மனிதனை மனிதனாகப் படைத்ததுதான் என்பது மனிதனுக்குப் புரியவில்லை. படைத்தவரை விட்டுவிட்டு படைத்தவர் ஏற்படுத்திய குணாதிசயத்தைக் கடவுளாகப் பார்க்கலாமா? அன்பு அநேகருக்கு கடவுளாகிவிட்டது. அதான் அன்பே சிவம் என்கிறான் மனிதன். இதிலிருந்து என்ன தெரிகிறது? கடவுளைத்தவிர மனிதன் வேறு எதையும் வழிபடத் தயாராக இருக்கிறான்; தன்னையேகூட. கடவுளுடைய பேச்சைக் கேட்டு அவர் வழியில் அவரை வழிபடுவது அவனுக்குப் பிடிக்காததாக இருக்கிறது. இந்த சமுதாயம் அநேக விஷயங்களை வழிபட்டு வருகிறது; கடவுளைத் தவிர. இரண்டாம் கட்டளை அதைத் தடைசெய்கிறது. கடவுளை அவரது கட்டளையைப் பின்பற்றி மட்டுமே வழிபட வேண்டும் என்று அது ஆணித்தரமாக சொல்லுகிறது.

மனிதனுக்கு கடவுளைப் பற்றித் தெரியவில்லை. தெரியாதவனாக இருந்தும் கேடான இருதயத்தை அவன் கொண்டிருப்பதால் அவர் இருப்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறான். அவரை அவனுடைய இருதயம் எதிர்க்கிறது. அவருடைய இடத்தில் அவன் வேறெதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறான்; அவரைத் தவிர. பார்த்தீர்களா! பத்துக்கட்டளைகள் இல்லாமல் கடவுளைப்பற்றி மனிதனுக்கு எதை வைத்து சொல்வீர்கள்? நீங்கள் அவனுக்கு காட்டப்போகும் இயேசு கிறிஸ்துவை எப்படி பத்துக்கட்டளைகள் இல்லாமல் அவனுக்கு அறிமுகப்படுத்த முடியும்? கடவுளைப்பற்றி பவுலைப்போல விளக்கிய பிறகுதான் அவருடைய ஒரே மகனான, அவர்

அனுப்பிய கிறிஸ்துவைப்பற்றிச் சொல்ல முடியும். பத்துக்கட்டளைகள் இல்லாவிட்டால் நமக்கு சுவிசேஷம் சொல்லுவதற்கு வழியில்லை தெரியுமா? பத்துக்கட்டளைகளே கடவுளைப்பற்றித் தெளிவாக விளக்குகின்ற ஒரே சாதனம். பத்துக்கட்டளைகள் இல்லாத சுவிசேஷம் கிறிஸ்துவின் சுவிசேஷம் இல்லை. இதற்காக நான் பத்துக்கட்டளைகளை சுவிசேஷத்தில் ஒவ்வொரு முறையும் விளக்குங்கள் என்று சொல்ல வரவில்லை. சுவிசேஷத்தில் அதைக் கொண்டுவராமல் கடவுளைப்பற்றி விளக்குவதற்கு வழியே இல்லை என்பதை நீங்கள் உணரவேண்டும் என்றுதான் அழுத்தமாக சொல்ல விரும்புகிறேன். சுவிசேஷத்தில் கடவுளைப்பற்றி நாம் சொல்ல முனைகிறபோது பத்துக் கட்டளைகளைத்தான் நாம் நாடி ஓடவேண்டியிருக்கிறது. கடவுளில்லாத சுவிசேஷம் சுவிசேஷமல்ல; பத்துக்கட்டளைகளை விளக்காமல் கடவுளைப் பற்றி விளக்க வழியில்லை; கடவுளைப் பற்றி விளக்காமல் கிறிஸ்துவை அறிமுகப்படுத்த வழியில்லை. நீங்கள் சொல்லுகின்ற சுவிசேஷத்தில் கடவுளைப் பற்றி பத்துக்கட்டளைகளைப் பயன்படுத்தி விளக்குகிறீர்களா? இதுவரையும் இல்லாவிட்டால் இனியாவது ஆரம்பியுங்கள். உங்கள் முன்னால் நிற்கும் கடவுளை அறியாத மனிதனுக்கு கடவுள் தேவையாயிருக்கிறார். அவனுக்கு அவரைப்பற்றி முதலில் சொல்லி கிறிஸ்துவிடம் அழைத்துப் போங்கள்.

## 2. பாவம்

உங்கள் முன்னால் நிற்கின்ற கடவுளை அறியாத மனிதனுக்கு கடவுளைப் பற்றி சொல்லி விட்டீர்கள். இனி நாம் எங்கே போகவேண்டும்? கடவுளைப் பற்றி விளக்கிவிடுவதோடு சுவிசேஷம் நின்றுவிடுவதில்லை. அடுத்து நான் விளக்கப்போகிற காரியம் மனதுக்கு இதமாக இருக்காது. உங்கள் முன்னால் நிற்கிறவன் உங்கள் நண்பனாக இருக்கலாம், உறவினராக இருக்கலாம். அவனை இப்போது சுவிசேஷம் கேட்கிற நிலைக்கு கொண்டுவர நீங்கள் பலகாலம் ஜெபித்திருக்கலாம். கடவுளைப் பற்றி அவனுக்கு விளக்கி விட்டீர்கள். இனிக் கடவுளின் ஒரே குமாரனான இயேசுவைப்பற்றியும் அவர் மட்டுமே கொடுக்கக்கூடிய நித்திய வாழ்வைப்பற்றியும் சொல்ல வேண்டும் இல்லையா? உங்கள் முன்னால் நிற்கிறவன் உங்களோடு நட்புரீதியில் தொடர்ந்து பழக வேண்டும் என்பது உங்கள் விருப்பம். அவன் சந்தோஷத்தோடு சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும் என்பது உங்கள் விருப்பம். அவனுடைய பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு, தேவைகள் சந்திக்கப்பட்டு கிறிஸ்துவிடம் அவன் வரவேண்டும் என்பதும் உங்களுடைய விருப்பம். இப்படியெல்லாம் நீங்கள் யோசிப்பது இயற்கையானதுதான். இதிலெல்லாம் தப்பில்லை.

ஆனால், சுவிசேஷத்தில் அடுத்ததாக அவனுக்கு நீங்கள் சொல்ல வேண்டிய விஷயத்தை யோசித்துப் பார்க்கும்போது அந்த விஷயம் அவனுக்கு சந்தோஷத்தைத் தராது என்பதை உணருகிறீர்கள். அந்த விஷயம் இருதயத்தைத் தாக்குகின்ற விஷயம். அந்த விஷயம் நிச்சயம் உங்கள் முன்னால் நிற்பவனுடைய தேவையைக் கர்த்தரைப் பொறுத்தவரையில் சந்திக்கும். ஆனால், அதுதான் தன்னுடைய தேவையைத் தீர்க்கும் என்பதை அவன் ஒத்துக்கொள்ள மாட்டான். கடவுளை அறியாத எவனுமே மாம்சத்தில் அதை ஒத்துக்கொள்ள மாட்டான். நீங்கள்

*சொல்லப்போவதைக் கேட்டு அவன் பனிபோல் உறைந்துபோகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்குமேல் அவன் உங்களோடு பேசாமலும், உங்களைவிட்டு விலகியோடவும் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், உங்களுடைய இருதயத்தில் உங்களுக்கு நிச்சயம் தெரிகிறது அந்த விஷயத்தை சுவிசேஷத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. அந்தப் பெரிய விஷயம் என்ன என்பதை உணர்ந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் முன்னால் நிற்பவரைப் பார்த்து, 'நண்பா! நீ கடவுள் யார், எப்படிப் பட்டவர் என்று தெரிந்திருப்பது அவசியம், ஆனால் அந்தக் கடவுளை நீ அறியாமல் இருப்பதற்குக் காரணமான உன் பாவங்களில் இருந்து நீ மனந்திரும்ப வேண்டும்' என்று நீங்கள் சொல்லாமலிருக்க முடியாது. உங்களுடைய மனநிலை எப்படியிருந்தபோதும் இந்த விஷயத்தை, அந்த மனிதன் தான் பாவி என்பதை உணர்ந்து அதிலிருந்து விலகியோட வேண்டும் என்பதை நீங்கள் சொல்லியே தீர வேண்டும். இதை நீங்கள் சொல்லாமல் போனால் அந்த மனிதனுக்கு நீங்கள் சொல்லவேண்டிய சுவிசேஷம் உங்களிடம் இல்லை என்றுதான் அர்த்தம். நீங்கள் அந்த மனிதன் தன் பாவத்தை உணர்ந்து அதிலிருந்து விலகியோடாவிட்டால் அந்த மனிதனோடு நீங்கள் பகிர்ந்துகொள்ள நினைத்திருக்கும் கிறிஸ்து அவனை இரட்சிக்கப் போவதில்லை. பாவத்தில் இருந்து மனந்திரும்புதல் இல்லாவிட்டால் இரட்சிப்புக்கு வழியில்லை. பாவத்தை உணராமலும் அதிலிருந்து மனந்திரும்பாமலும் இருக்கிறவனை கிறிஸ்து இரட்சித்ததாக வரலாறில்லை.*

*பாவத்தைப்பற்றி வேதத்தில் எது நமக்கு விளக்கந்தருகிறது? பத்துக் கட்டளைகள்தான். அந்த நீதிச் சட்டங்களே முழு மனுக்குலத்துக்கும் நீதிச் சட்டங்களாக இருக்கின்றன. எது நீதியானது, எது பாவம்? என்பதை நமக்கு உணர்த்துகின்ற கர்த்தருடைய ஒரே நியாயப்பிரமாணமாக இருக்கின்றது. இந்த நீதிச் சட்டங்களைத்தான் ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் மீறினார்கள். அந்தச் சட்டங்கள் அவர்களுடைய இருதயங்களில் எழுதப் பட்டிருந்தன. அவர்களுக்கு கர்த்தருக்கு முன் எது நீதியானது, எது பாவமானது? என்பது தெரிந்திருந்தது. அவர்கள் நீதியைச் செய்யாமல் பாவத்தைச் செய்தார்கள். இந்தப் பத்துக்கட்டளைகளைத்தான் நாம் ஆதாமோடிருந்து மீறினோம். இந்தக் கட்டளைகளைத்தான் இன்றைக்கு சிறுவர்கள் பெரியவர்கள் என்ற பேதமில்லாமல் உலக மக்கள் அனைவரும் தங்களுடைய வாழ்க்கை யில் அன்றாடம் மீறி வருகிறார்கள். இந்தப் பத்துக்கட்டளைகள் ஒவ்வொரு மனிதனையும் கர்த்தருக்கு முன்பாக 'நீ, பாவி' என்று குற்றம் சுமத்துகிறது. அதனால்தான் மனிதர்கள் எல்லோருமே கர்த்தருக்கு முன்னால் நியாயப் பிரமாணத்தை மீறுகின்ற குற்றவாளிகளாக நிற்கிறார்கள். இந்த நியாயப் பிரமாணத்தை நாம் மீறுவதனாலேயே பவுல் ரோமர் 3:23ல், 'எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி' நிற்கிறோம் என்கிறார்.*

*பாவம் என்றால் என்ன? நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம் என்கிறது வினாவிடை முறையில் தரப்பட்டிருக்கும் இறையியல் நூல். பத்துக்கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம். அந்தவகையில் தான் பாவத்தை கர்த்தர் விளக்குகிறார். நாம் நினைப்பதெல்லாம் பாவமாகிவிடாது. பாவத்திற்கான விளக்கத்தைக்*

*கர்த்தரே தந்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் அவருடைய கட்டளைகளை மீறுவதே பாவம். ரோமர் 7:7ல் பவுல், 'பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை' என்கிறார். ரோமர் 3:20ல் பவுல், 'பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது' என்கிறார்.*

*நமக்கு முன்னால் நிற்கும் மனிதரிடம் எப்படி இதைச் சொல்லுவது என்று உங்கள் மனம் சஞ்சலப்பட்டாலும் அந்த மனிதர் கடவுளுக்கு வெகுதூரத்தில் இருப்பதற்கு ஒரே காரணம் அவருடைய பாவந்தான் என்பதை நீங்கள் சொல்லாமலிருக்க முடியாது. அந்த மனிதன் கர்த்தரின் பத்துக்கட்டளைகளை அறியாதவனாயிருந்தபோதும் ஒவ்வொரு நாளும் அதைத்தான் மீறிக்கொண்டிருக்கிறான். வேறு எதையும்விட கர்த்தரின் கட்டளைகளை அவன் மீறிக்கொண்டிருப்பதே அவனை நியாயப்பிரமாணத்தை மீறுகிறவனாகவும், நியாயத்தீர்ப்பை சந்திக்கவேண்டியவனாகவும் கர்த்தர் முன் நிறுத்திவைக்கிறது. கடவுளுக்கு முன் அந்த மனிதன் நீதியற்றவராக, குற்றவாளியாக, கண்டனத்துக்குரியவனாக, நியாயத்தீர்ப்பை சந்திக்க வேண்டியவனாக நிற்கிறார். இந்த இடத்தில் இன்னொரு முக்கிய விஷயத்தையும் சொல்லியாக வேண்டும். ரோமர் 3:20ல் இருப்பதைப் போல அந்த மனிதன் எல்லா மனிதர்களையும் போல பாவம் செய்து தேவ மகிமையை இழந்தவனாக நிற்கிறான் என்று அறியும்படிச் செய்வது அவசியம். அதைக் கேட்கிற அந்த மனிதன் ஒருவேளை அது உண்மைதான் என்று கூறி உங்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கலாம். ஏன், எல்லோருந்தான் பாவஞ் செய்திருக்கிறார்கள். நான் மட்டும் இல்லையே என்று சமாதானம் சொல்லி பெரிய கூட்டத்தின் நடுவில் தன்னை மறைத்துக்கொள்ளப் பார்க்கலாம். பாவத்தைப்பற்றி நீங்கள் சொன்ன உண்மை அவன் இருதயத்தைத் தாக்காது, நீ மட்டுமல்ல, எல்லோருக்கும் உன்நிலைதான் என்று அவனை சமாதானப்படுத்துவதாக இருந்துவிடலாம். அதனால்தான் ரோமர் 3:23ல் சொல்லப்பட்டிருக்கும் உண்மை மட்டும் அந்த மனிதனுடைய பாவத்தை உணர்த்தப் போதாது. அதற்கும் மேலாக நீங்கள் போகவேண்டியிருக்கிறது. ரோமர் 3:23 மூலம் அந்த மனிதருடைய மேற்தோலை நீங்கள் உரசியிருக்கலாம். ஆனால், தோலுக்கு கீழ் ஆழமாக நீங்கள் குத்த வேண்டியிருக்கிறது.*

*இந்த சந்தர்ப்பத்தில்தான் அநேக கிறிஸ்தவர்கள் சங்கடப்பட்டு சொல்ல வேண்டிய உண்மைகளை சொல்லாமலிருந்து விடுகிறார்கள். சுவிசேஷம் சொல்லுவதில் நாம் விசுவாசத்தோடு நடந்துகொள்ளுவதாயிருந்தால் அதன் முக்கிய அம்சங்களை நாம் மனிதர்களுக்கு, அவர்கள் உறவினராக, நண்பர்களாக இருந்தாலும் நம்மால் சொல்லாமலிருந்துவிட முடியாது. உங்கள் முன்னால் நிற்கும் அந்த மனிதனுக்கு நீங்கள் சொல்ல வேண்டியதென்ன? 'நீ, (எல்லோரும் மட்டுமல்ல), நீ கடவுளுக்கெதிராக பாவஞ்செய்து அவர் முன் குற்றவாளியாக நிற்கிறாய்' என்று நீங்கள் சொல்லியே ஆக வேண்டும். அவன் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்து, தொடர்ந்து அதைச் செய்து கொண்டிருக்கிறான். பிறந்ததில் இருந்தே அவன் பாவி மட்டுமல்ல, பிறந்த பின்பு நினைவு தெரிந்த நாளில் இருந்தே*

*கர்த்தரின் கட்டளைகளை மீறிக்கொண்டிருக்கிறான். அவன் கடவுளுக்கு முன் தனிப்பட்ட முறையில் பாவியாக நிற்கிறான். கடவுளுடைய பார்வையில் அவன் அவருக்கு நீதியுள்ளவனாகத் தென்படவில்லை. குற்றம் சுமத்தப்பட்டவனாக, நியாயத்தீர்ப்பை சந்திக்கவேண்டியவனாக நிற்கிறான். அவன் தான் குற்றவாளி என்பதை ஒத்துக்கொள்ளாதவரையில் அவனுக்கு விடுதலை கிடைக்காது. அவன் வேறு எவர் மேலும் பழிபோட முடியாது. அவனுடைய பிறப்பும், வளர்ப்புமல்ல அவனைப் பாவியாக்கியது. அவன் தானே பாவத்தை சுயநினைவோடு செய்து கர்த்தரின் முன் பாவியாக நிற்கிறான். அவனுடைய பாவங்கள் கடவுளின் சந்நிதானத்தில் சத்தமாய்க் கேட்டுக்கொண்டிருக்கின்றன. அவன் இரட்சிப்பை அடைய வேண்டுமானால் தன்னுடைய பாவங்களை அவன் உணர்ந்து அவற்றிற்காக கடவுளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். தன்னுடைய பாவங்களைக் கடவுள் முன் அறிக்கையிட வேண்டும். மூல பாவத்திற்காக மட்டும் அவன் மன்னிப்புக் கேட்பதால் எந்தப்பயனுமில்லை. 'நான் பிறந்ததிலிருந்தே பாவிதான்' என்று சொல்லி மனதைத் தேற்றிக்கொள்ள முடியாது. அது உண்மைதான். ஆனால் அதற்கும் ஒருபடி மேலேபோய் 'நான் சிந்தனையாலும், செயலாலும் அன்றாடம் பாவத்தைத்தான் செய்திருக்கிறேன், செய்துவருகிறேன்' என்று சொல்லி அத்தனை பாவங்களையும் கடவுள் முன் அறிக்கை செய்து அந்தப் பாவங்களுக்காக வருந்தி மன்னிப்பு கேட்க வேண்டும். பவுல் ரோமர் 10:9ல், 'கர்த்தராகிய இயேசுவை உன் வாயினாலே அறிக்கையிட வேண்டுமென்கிறார்'. பாவங்களுக்காக வருந்தி அவற்றிற்கு புறமுதுகு காட்டி அவற்றை அறிக்கைசெய்வதே கிறிஸ்துவை அறிக்கை செய்வதற்கான முதற்படி.*

*லூக்கா 18ல் நாம் வாசிக்கின்ற ஆயக்காரன் ஆலயத்தில் என்ன செய்தான்? 'தேவனே பாவியான என்மேல் கிருபையாயிரும்' என்றான். உண்மையிலேயே அவன் தன்னுடைய சுய பாவங்களுக்காக வருந்தினான் என்பதற்கு அடையாளமாகத்தான் அவன் தன் மார்பில் அடித்துக்கொள்வதையும், கர்த்தரை நோக்கித் தலையை உயர்த்திப் பார்ப்பதற்கு கூசுவதையும் பார்க்கிறோம். இதுதான் மெய்யான மனந்திரும்புதலுக்கான அடையாளம். இது இருதயத்தில் ஏற்பட்டிருக்கும் ஆவிக்குரிய மாற்றத்திற்கு அடையாளம். அவனைப் பார்த்து அன்று இயேசு சொன்னார், 'இவனே நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன், ஏனெனில் தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' என்றார்.*

*உங்களுக்கு கெட்டகுமாரனின் உவமை தெரியுமல்லவா? கெட்டகுமாரன் என்ன செய்தான்? லூக்கா 15:17-20, 'அவனுக்குப் புத்திதெளிந்தபோது அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உமது குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய*

கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான்.' இதில் எதைப் பார்க்கிறோம். மெய்யான மனந்திரும்புதலுக்கான அடையாளங்களைப் பார்க்கிறோம். மனந்திரும்பிய அந்தக் கெட்டகுமாரன் தான் பாவி என்பதை ஒத்துக்கொள்ளுகிறான். மூல பாவத்தை மட்டுமல்ல, தான் செய்த பாவங்களை, தான் செய்து வருகின்ற பாவங்களை ஒத்துக்கொள்ளுகிறான். அவற்றை வெளிப்படையாக அறிக்கை செய்கிறான். அவனில் அதற்கான மெய்யான வருந்துதலைப் பார்க்கிறோம். அவனுடைய பாவங்கள் அவனைக் கூச்சமடைய வைக்கின்றன. தன் தகப்பனுடைய அன்புக்கான எந்தத் தகுதியும் இல்லாதவனாகத் தான் இருப்பதை அவன் காண்கிறான். கிருபையை அடையத் தகுதியில்லாதவனாகத் தன்னைக் காண்கிறான். கடவுளின் அன்பு மட்டுமே தன்னைக் கரை சேர்க்கமுடியும் என்பதை உணர்கிறான். இதுதான் பாவத்திற்காக வருந்தி மனந்திரும்புதல் என்பது.

உங்களுடைய பாவங்களுக்காக நீங்கள் வருந்தியிருக்கிறீர்களா? அவை உங்களைக் கூச்சமடைய வைத்து கடவுளுக்கு முன் வருந்தியிருக்கிறீர்களா? அந்தப் பாவங்களின் பாரம் உங்களை கர்த்தருக்கு முன் கதற வைத்திருக்கிறதா? அவற்றைக் கர்த்தரிடத்தில் சொல்லி வருந்தி அவருடைய உதவியை நாடியிருக்கிறீர்களா? ஏதோவொருவிதத்தில் உங்களுடைய பாவங்களை உணர்ந்து, வருந்தி அவற்றின் பாரத்தால் பாதிக்கப்பட்டு கிறித்துவிடம் நீங்கள் திரும்பியிருக்காவிட்டால் உங்கள் இரட்சிப்பு எப்படி மெய்யானதாக இருக்க முடியும்? மெய்யான விசுவாசத்தின் இன்னொரு பகுதியான மனந்திரும்புதலைப் பற்றித்தான் இத்தனை நேரமும் நாம் பார்த்து வந்திருக்கிறோம். மனந்திரும்புதலும், விசுவாசமும் பிரிக்க முடியாதபடி சேர்ந்து வருகின்றன. மெய்யான மனந்திரும்புதல் இல்லாத இடத்தில் விசுவாசம் இருக்க முடியாது. இயேசுவைக் காட்டிக்கொடுத்ததற்காக யூதாசு மனவருத்தப்பட்டான்; உயிரை மாய்த்துக்கொண்டான். அவன் மனந்திரும்பவில்லை; இயேசுவை விசுவாசிக்கவில்லை.

## 3. இயேசு கிறிஸ்து

பாவத்தைப் பற்றிப் பேசுவதோடு சுவிசேஷம் நின்றுவிடுவதில்லை. கடவுளைப்பற்றியும், பாவத்தைப்பற்றியும் விளக்கியாகி விட்டது. அடுத்து செய்ய வேண்டியது என்ன? உங்கள் முன்னால் நிற்பவருக்கு கிறிஸ்துவைப் பற்றி விளக்குவதுதான். அவனுடைய பாவத்தில் இருந்து அவனுக்கு விடுதலை கொடுக்கக்கூடியவர் கிறிஸ்து மட்டுமே. கிறிஸ்து யார் என்பதையும், அந்தக் கிறிஸ்து மனிதருடைய பாவங்கள் போவதற்காக சிலுவையில் செய்திருக்கின்ற பரிகாரப்பலியையும் அந்த மனிதருக்கு விளக்க வேண்டியது அவசியம். நீதியில்லாத மனிதனுக்காக பாவமேயில்லாத நீதிபரரான இயேசு கிறிஸ்து பாவியாகி சிலுவையில் மரித்தார் என்பதை அந்த மனிதர் உணரவேண்டும். பாவிகளுக்காக கிறிஸ்து தன்னையே பலியாகக் கொடுத்து நீதியை சம்பாதித்தார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பாவங்களுக்காக வருந்தி அவற்றை அறிக்கை செய்த மனிதன் தன்னுடைய பாவ நிவாரணத்துக்காக சகலத்தையும் செய்திருக்கின்ற

*கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். இதனால்தான் வேதம், மனந்திரும்பி விசுவாசி என்று பாவிகளைப் பார்த்து அழைக்கின்றது. பாவத்துக்காக வருந்துவதோடு இருந்துவிடாமல் கிறிஸ்து மட்டுமே இரட்சகர், ஒரே கடவுள், தேவன் என்பதை அந்த மனிதர் தன் வாழ்க்கையில் விசுவாசிக்க வேண்டும். தனக்காக, தன்னுடைய பாவத்தைப் போக்குவதற்காக கிறிஸ்து, வாழ்ந்து, மரித்து, உயிர்த்தெழுந்திருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் கிறிஸ்து மட்டுமே மத்தியஸ்தராக இருக்கிறார் என்பதையும் அவராலேயன்றி இரட்சிப்பு வேறு எவர் மூலமும் கிடைக்காதென்பதையும் முழுமனத்தோடும் விசுவாசிக்க வேண்டும் (1 தீமோத்தேயு 2:5).*

**கடைசியாக . . .**

*(1) சுவிசேஷத்தின் வல்லமையை உணர பத்துக்கட்டளைகளை அடிக்கடி வாசியுங்கள். அதனை ஆழமாகப் படியுங்கள். இயேசு மலைப்பிரசங்கத்தில் எத்தனை ஆழமாக அதற்கான விளக்கங்களைத் தருகிறார் இல்லையா? அந்தளவுக்கு ஆழமாகப் போய்ப் படியுங்கள். மேலெழுந்தவாரியாகப் படிக்காதீர்கள். அடிக்கடி வீட்டிலும் வெளியிலும் அதுபற்றிப் பேசுங்கள். சபைகளில் அது அடிக்கடி பிரசங்கிக்கப்பட வேண்டும், போதிக்கப்பட வேண்டும். ஏன் தெரியுமா? அப்போதுதான் கர்த்தர் எத்தனை நீதியானவர் என்றும், நீதி எத்தனைப் பெரியது என்றும், பாவம் எத்தனை பொல்லாதது என்றும் தெரியவரும். பத்துக்கட்டளை களில் நீங்கள் இன்றைக்கு அக்கறை காட்டாததினால்தான் பாவம் சபை, சபையாக மலிந்து நிற்கிறது. கிறிஸ்தவர்கள் பாவத்தை வெகுசாதாரணமாக எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். பிரசங்கத்திலும், போதனைகளிலும் அதைக் காணமுடியவில்லை. பத்துக்கட்டளைகள் மறுபடியும் நம் வாழ்க்கையிலும் சபையிலும் ஆள ஆரம்பிக்க வேண்டும். பத்துக்கட்டளைகள் இல்லாமல் எது சரி, எது தவறு என்றே நம்மால் தீர்மானிக்க முடியாது. கர்த்தரின் வழியில் நிலைத்திருக்க முடியாது. பத்துக்கட்டளைகளை நாம் சரளமாகப் படித்துப் பேசி, சிந்தித்து, ஆராய்ந்து பின்பற்றுகிறபோது உண்மையான தேவ பயம் நம்மத்தியில் நிச்சயம் இருக்கும்.*

*(2) சுவிசேஷத்தில் பத்துக்கட்டளைகள் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள். அதாவது கடவுளைப் பற்றியும், பாவத்தைப் பற்றியும் அதைப் பயன்படுத்தி விளக்குங்கள். பாவியான மனிதனின் காயம் எத்தனை பெரியது என்று அவன் உணர வேண்டும். அதை உணராமல் அவன் மருந்தை நாடமாட்டான். பத்துக்கட்டளைகளால் மட்டுமே அவனுடைய காயத்தின் தன்மையை நாம் அவனுக்கு உணர்த்த முடியும். காயத்தை அவன் உணர்ந்து இதயத்தில் காயப்பட்ட பிறகே அதற்கு மருந்தாக இயேசு கிறிஸ்துவின் கிருபையை அவனுக்குத் தடவவேண்டும். அவனுடைய பாவக்காயத்துக்கு கிறிஸ்து மட்டுமே மருந்து. நீங்கள் சொல்லும், பிரசங்கிக்கும் சுவிசேஷத்தில் இதெல்லாம் இருக்கும்படிப் பார்த்துக்கொண்டால் நிச்சயம் பாவிகள் கர்த்தரின் சத்தத்தை ஆவிக்குள்ளாக கேட்கின்ற நிலைமை நம்மினத்திலும் ஏற்படும்.*

# வாலிப நாட்களை அலட்சியம் செய்யாதீர்கள்!

அடிக்கடி வாலிபர்களுக்காக எதையும் தனிப்பட்ட முறையில் எழுத மாட்டீர்களா என்று அநேகர் கேட்டிருக்கிறார்கள். சிறுவர்களுக்கு, பெரியவர்களுக்கு, வாலிபர்களுக்கு என்றெல்லாம் தனித்தனியாக நான் பிரித்து எழுதுவதில்லை. வேதபோதனைகள் எல்லாமே எல்லோருக்கும் உரியவை. அந்தப் போதனைகளை அந்தந்த வயதைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்றமுறையில் விளக்கிப் போதிப்பதே போதகனின் கடமை. இருந்தாலும் நம்மினத்துப் பண்பாட்டைப் பொறுத்தவரையில் அது மேலை நாட்டுப் பண்பாட்டைப்போலல்லாமல் வேறுபட்டு மேலை நாட்டவர்கள் புரிந்துகொள்ள முடியாத நிலையில் பலவிதமான புறஜாதிப் பாரம்பரியங்களாலும், சடங்குகளாலும் பாதிக்கப்பட்டு, சில வேளைகளில் எது சரி, எது தவறானது என்று பிரித்துப் பார்க்கவும் கஷ்டமான நிலையில் இருப்பதால், அதில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகின்ற நம்மினத்து வாலிபர்களுக்கு தனியாக அந்த விஷயங்களைப் பற்றி எழுதி உணர வைக்க வேண்டிய அவசியத்தை நான் உணர்கிறேன்.

நானும் தமிழனாகப் பிறந்து, வளர்ந்திருப்பதாலும் நம்மினத்து இந்துப் பாரம்பரிய, சடங்குகள், பண்பாட்டுச் சீரழிவுகளை அக்குவேறு ஆணிவேறாக அறிந்தும் உணர்ந்துமிருப்பதாலும், அதற்கெதிராகவெல்லாம் கிறிஸ்துவுக்குள்ளாக கிருபையை அடைந்த நாளிலிருந்தே எதிர்த்து நின்று வேத சட்டம் மட்டுமே கிறிஸ்தவனுக்கு சட்டமாக இருக்க வேண்டும் என்ற உறுதியோடு எல்லா சந்தர்ப்பங்களையும் சந்தித்து வந்திருப்பதாலும், நம்மினத்து வாலிபர்களுக்கு அவர்கள் வாழ வேண்டிய முறையைப் பற்றியும், வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய அனுபவங்களைப் பற்றியும் விளக்குவது எனக்கு கடினமான காரியமல்ல.

வாலிபர்களுக்காக இப்படி எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, நான் சமீபத்தில் பேசிய ஒரு குடும்ப மாநாடு எனக்கு இந்த எண்ணத்தைத் தந்தது. இரண்டு, ஒரு சபை உதவிக்காரர் தன்னுடைய சபை வாலிபர்களுக்காக இது பற்றி எழுதி உதவுமாறு கேட்டுக்கொண்டது. நம்மினத்து வாலிபர்கள் கிறிஸ்துவை விசுவாசித்து வாழுவது என்பது லேசான காரியமல்ல. மேலை நாடுகளில் பிறந்து வளர்ந்து வருகின்ற வாலிபர்களைவிட பெரிய இக்கட்டுகளை இவர்கள் சந்திக்கிறார்கள். இந்த இக்கட்டுக்களையெல்லாம் எதிர்நோக்கி கிறிஸ்துவை வாழ்க்கையில் மகிமைப்படுத்துவதென்பது இமயமலை ஏறுவதுபோல்தான். வாலிபர்கள் இதை வாசித்து மனந்தளர்ந்து போக வேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை; அவர்கள்

*சிந்தனைபூர்வமாக தங்களுக்கிருக்கும் பிரச்சனைகளை அனுகவேண்டும் என்பதற்காகத்தான்.*

*முதலில் வாலிபர்களுக்கு நம்மினத்தில் இருக்கும் பிரச்சனைகளை விளக்கிவிட்டு அவற்றிற்கு என்ன பரிகாரம் என்று சொல்லுகிறேன்.*

## வளர்ப்பு முறை

*சமீபத்தில் குடும்ப மகாநாடொன்றில் பேசியபோது உண்மையிலேயே எனக்கு ஒரு நிமிடம் தடுமாற்றம் ஏற்பட்டது. நான் பேச வேண்டியிருந்த செய்தி பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிவது பற்றி. நம்மினத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் அதை எப்படி விளக்குவது என்பது எனக்கு முதலில் பெரிய பிரச்சனையாகவே இருந்தது. அதையும் நான் மறைக்காமல் அவர்களிடம் கூட்டத்திலேயே சொல்லிவிட்டேன். ஏன், என்று கேட்கிறீர்களா? கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு முறைகளே நம்மினத்தில் சபையிலும், வீட்டிலும் தெளிவாக வேதபூர்வமாக போதிக்கப்படுவதில்லையே. எந்த சபையில் சமீபத்தில் இதைப்பற்றிய செய்திகளைக் கேட்டிருக்கிறீர்கள்? யாத்திராகமம் 20; உபாகமம் 5; சங்கீதம், நீதிமொழிகள், உன்னதப்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டில் எபேசியர் 6; கொலோசெயர் 3 என்று வேதம் பூராவும் ஒரு இடத்தில் என்றில்லாமல் பிள்ளை வளர்ப்பு முறைகளை ஆரம்பத்தில் இருந்தே தெளிவாக விளக்கியிருக்கும்போது அவற்றைக் கருத்தோடு போதித்து சபை மக்களை ஊக்குவித்து குடும்பங்களில் பிள்ளை வளர்ப்பு முறை சரியாக இருக்கும் அளவுக்கு குடும்ப வாழ்க்கை அமைந்திருக்க வேண்டுமென்பதை விளக்கிப் போதித்து ஊழியம் செய்கிற போதகன் நம்மினத்தில் யார்?*

*இதுவரை நான் விளக்கியவிதத்தில் குடும்பங்கள் அமைந்து குடும்பத் தலைவர்கள் உதாரணபுருஷர்களாக வாழ்ந்து பிள்ளைகளைத் தொட்டிலில் இருந்தே வேதஅடிப்படையில் வளர்த்து வருவதைப் பார்த்திருக்கிறீர்களா? வீட்டில் அனுபவித்திருக்கிறீர்களா? வேதம் ஒன்று சொல்ல நாம் ஒருவிதத்தில் குடும்ப வாழ்க்கை நடத்தி பிள்ளை வளர்ப்பென்றாலே என்னவென்று தெரியாமல்தானே வாழ்ந்தும், பிள்ளைகளை வளர்த்தும் வருகிறோம். இந்த நிலைமையில் நான் எப்படி இந்தப் பெற்றோர்களுக்கு முன் 'பிள்ளைகளே உங்கள் பெற்றோர்களுக்கு (கர்த்தருக்குள்) கீழ்ப்படியுங்கள் என்று சொல்லுவது?' பிள்ளை வளர்ப்பு வேதபூர்வமாக இருப்பதற்கு அவசியமானவிதத்தில் குடும்ப வாழ்க்கை அமைந்திருக்காவிட்டால் வேதபூர்வமான பிள்ளை வளர்ப்புக்கு ஒரு குடும்பத்தில் இடமிருக்க வழியேயில்லை. 'பிள்ளைகளே பெற்றோருக்கு (கர்த்தருக்குள்) கீழ்ப்படியுங்கள்' என்று கர்த்தர் கட்டளையிடுகிறபோது, அந்தக் கட்டளையைப் பிள்ளைகள் நிறைவேற்ற உதவும் விதத்தில் வீட்டில் பெற்றோர்கள் வேதபூர்வமான குடும்பவாழ்க்கையை அமைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற உண்மை அந்த வார்த்தைகளில் அடங்கியிருக்கின்றது. குடும்ப வாழ்க்கை ஒழுங்காக இல்லாத கிறிஸ்தவ பெற்றோர்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கும், அவர்கள் கர்த்தரில் வளரவும்*

பெரும் தடையாக இருப்பார்கள். இதை நம்மினம் உணர்வதில்லை. அல்லேலூயா பாடி ஆராதிப்பது மட்டுந்தான் கிறிஸ்தவம் என்ற நினைப்பில் கர்த்தரின் வார்த்தையையும், கட்டளைகளையும் அன்றாடம் மீறி குடும்ப வாழ்க்கை, பிள்ளை வளர்ப்பு என்பது பற்றியெல்லாம் ஒரு சிந்தனையுமில்லாது வாழ்ந்து வருகிறது தமிழ் கிறிஸ்தவம்.

இதையெல்லாம் நான் விளக்குவதற்குக் காரணம் நம்மினத்து வாலிபர்கள் வீட்டில் ஒழுங்கான வளர்ப்பு முறையும் பயிற்சியும் இல்லாமலேயே இன்றும் வளர்ந்து வருவதுதான். இரண்டுவித நிலைமைகளை வாலிபர்கள் நம்மினத்தில் சந்திக்கிறார்கள்.

1. புறஜாதிக் குடும்பங்களில் இருந்து வளர்கிறவர்கள் இயேசுவை விசுவாசித்து புறஜாதிப் பெற்றொருக்குக் கீழ் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பெற்றோர்களின் எதிர்ப்பின் மத்தியில் அவர்கள் கிறிஸ்துவில் வளர வேண்டியிருக்கிறது. இங்கே அவர்களுக்கு பத்துக்கட்டளைகள் போதிக்கும் ஒழுக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் அந்தப் பெற்றோர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆகவே, கிறிஸ்தவ வாலிபர்களாக அவர்கள் இருந்தபோதும் வாழ்க்கையில் ஒழுங்கைக் கடைப்பிடிக்கத் தெரியாமலும், வயதுக்கேற்ற வேத அறிவு, உலக அறிவு, அனுபவம், முதிர்ச்சி இல்லாமலும் வளர்ந்துவிடுகிறார்கள். வயது போயிருந்தும் கிறிஸ்தவ ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்க வேண்டிய கிறிஸ்தவ ஞானமும், முதிர்ச்சியும் அவர்களில் காணப்படுவதில்லை.

2. கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்தவர்கள் வளர்ந்து வருகிறபோது கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். ஆனால், பெரும்பாலான கிறிஸ்தவ குடும்பங்கள் வேதபூர்வமான குடும்ப வாழ்க்கை பற்றியும், பிள்ளை வளர்ப்புபற்றியும் அறியாமல் இருப்பதால் வாலிபர்கள் வருங்காலத்தில் ஆவிக்குரிய மனிதர்களாக வருவதற்கேற்றவிதத்தில் வீட்டில் வளருவதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. பிள்ளைகளுக்கு இதைக்கொடுக்க வேண்டிய பெற்றோர்கள் அந்த முறையில் வளர்க்கப்படாததாலும், திருச்சபையில் போதனைகளைக் கேட்டு வளராததாலும், புறமதங்களை விட்டுவிட்டாலும் அம்மதங்களோடொட்டிய பண்பாட்டைத் தொடருவதாலும் அவர்களால் பிள்ளைகளை வேதபூர்வமாக எல்லா விஷயங்களிலும் வளர்க்க முடியாமலிருக்கிறது.

இந்த இரண்டு சூழ்நிலைகளிலும் இருந்து வளருகின்ற கிறிஸ்தவ வாலிபர்களையே இன்று நாம் தமிழ் சபைகளில் பெரும்பாலும் எங்கும் சந்திக்கிறோம். இவர்கள் சமுதாயத்திலும் வீட்டிலும் சந்திக்கின்ற பிரச்சனைகளுக்கு எல்லையில்லை. உதாரணத்துக்கு உண்மையில் நடக்கிற

ஒரு விஷயத்தை கற்பனையாக, கதையாக உதாரணத்துக்கு சொல்கிறேன். ஒரு பெற்றோர் தங்களுடைய மகனுக்கு எப்படியாவது திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்று துடியாய் இருக்கிறார்கள். மகனோ உண்மைக் கிறிஸ்தவன். அவனுடைய ஆசா பாசங்களிலும் கிறிஸ்தவ நம்பிக்கைகளிலும் அவர்கள் அக்கறை காட்டாமல் தங்களுடைய எண்ணப்படி திருமணம் செய்துவைக்க முயல்கிறார்கள். அந்தப் பெற்றோர்கள் பெயரளவிலான கிறிஸ்தவர்கள் (மனந்திரும்பாதவர்கள்) மட்டுமே. வளர்ந்திருக்கும், கிறிஸ்தவனாக இருக்கும் மகனை அவர்கள் துணிவுள்ளவனாக, கிறிஸ்துவை மட்டுமே எல்லாக் காரியங்களிலும் மகிமைப்படுத்தும் விதத்தில் அவர்கள் வளர அனுமதிப்பதில்லை. தங்கள் பேச்சைக் கேட்டு எதையும் செய்பவனாக இருக்க வேண்டும் என்பதில் மட்டுமே அவர்கள் கருத்தாக இருக்கிறார்கள். இப்படி வளர்ந்த வாலிபன் கிறிஸ்து தன் சபையை நேசிப்பதுபோல் தன் மனைவிக்கு தலைவனாக இருந்து குடும்ப வாழ்க்கை நடத்துவான் என்று நம்புகிறீர்களா? அவன் ஒரு பெண்ணின் கழுத்தில் கட்டும் தாலி மட்டும் அவனை தன்னம்பிக்கையுள்ள வேதபூர்வமாக வாழ்க்கை நடத்தும் கணவனாக மாற்றிவிடும் என்கிறீர்களா? ஒருக்காலும் நடக்காது. இதுவே புறஜாதிக் குடும்பத்தில் வளரும் கிறிஸ்தவனுக்கு நிகழும்போது அவன் இதையும்விடப் பேரிடையூறுகளைத் தன் வாழ்வில் சந்திக்க நேரிடுகிறது.

நம்மினத்து வாலிப ஆண்களும் பெண்களும் வீட்டில் சந்திக்கும் பிரச்சனைகளைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்தவ குடும்பங்களிலும்கூட பெற்றோர் பிள்ளைகளை தன்னம்பிக்கையோடு சிந்தித்து செயலாற்றும்படி வளர்ப்பதில்லை. வாழ்க்கையில் ஒழுங்கைக் கற்றுக்கொடுப்பதில்லை. நேரத்துக்கு படுக்கைக்குப் போவதும், எழுந்திருப்பது பற்றிய அக்கறையே ஒருவருக்கும் இருப்பதில்லை. உண்மையை மட்டுமே பேச வேண்டும் அதன்படியே நடக்க வேண்டும் என்று சிறுவயதில் இருந்தே கற்றுக்கொடுப்பதில்லை. தவறு செய்தால் மட்டும் உடனடியாக அடித்தோ, திட்டியோ விடுகிறோம். எதையும் சிந்தித்து முடிவு எடுக்க விடுவதில்லை. பெற்றோர் வைத்ததுதான் சட்டம் என்ற உணர்வை மட்டும் ஊட்டி வளர்க்கிறோம். பெற்றோர் முடிவுக்கு எதிரானது எல்லாமே தவறு என்ற எண்ணத்தோடு அவர்களை வளர்க்கிறோம். எது சரி, எது தவறு என்ற உணர்வோடு அவர்கள் வளரும்படி அன்றாடம் வேதத்தை சொல்லிக்கொடுத்து வளர்ப்பதில்லை. எப்படியாவது வளர்ந்துவிடுவான் என்று அவனுடைய அறிவுக்கும், அனுபவத்துக்கும் பாடசாலைகளும், கல்லூரிகளுமே தஞ்சம் என்று அவற்றில் மட்டுமே தங்கியிருக்கிறோம். பொருளாதார உயர்வு அடைய வேண்டும் என்ற எண்ணத்தை மட்டுமே பாலாக வார்த்து, வார்த்து வளர்க்கிறோம். அவர்களுடைய கல்வியும், தொழிலையும் பணத்தையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டிருப்பதால் உலக அறிவுக்கும், வாழ்க்கை அனுபவத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்காத கல்வியாக அது அமைந்துவிடுகிறது. தொழிலையும், பணத்தையும் அவர்கள் அடைய எதையும், ஏன் சபையையும், கிறிஸ்தவ நம்பிக்கைகளையுமே பலிக்கடாக்களாக்க நாம் தயாராக இருக்கிறோம். நாம் தொலைத்துவிடாத,

வாழ்க்கையில் தொடர்ந்து ஒட்டிக்கொண்டிருக்கும் புறஜாதிப் பண்பாடுகளையும் அவர்களுக்கு ஊட்டி வளர்க்கிறோம். பிள்ளைகளுக்கு பெற்றோரே வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்வது, குலம் கோத்திரம் பார்த்து அதைச் செய்வது (கிறிஸ்தவர்களிலும் இது தொடர்ந்திருக்கிறது), கூட்டுக்குடும்பம் நடத்துவது, வீட்டுக்கு மாப்பிள்ளையாய் ஆண் இருக்கும்படி எதிர்பார்ப்பது, பத்துக்கட்டளைகளில் போதிக்கப்பட்டிருக்கும் தனிக்குடித்தன எண்ணமே வராமல் பார்த்துக்கொள்ளுவது ஆகியனவும் அதுபோல் இன்னும் ஆயிரமாயிரம் போலிப் பண்பாட்டு வழக்கங்களையும் தொடரும்படி பிள்ளைகளை வளர்ப்பதே அநேகர் தொடர்ந்து செய்துவருகிற காரியம்.

பிள்ளை வளர்ப்பென்பது பாரமான செயல், அதைப் பற்றி வேதம் மட்டுமே விளக்குகிறது என்ற உணர்வோடு வேதத்தை ஆராய்ந்து பார்த்து படித்து அதன்படி பிள்ளைகளை அவர்களுக்கு முன்னுதாரணமாக இருந்து வளர்க்கின்ற பெற்றோர்களை நம்மினத்தில் விரல்விட்டு எண்ணிவிடலாம்.

இத்தகைய சமுதாய சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்ற நம்மினத்து ஆணும் பெண்ணுமாகிய வாலிபர்கள் இவற்றிற்கு முகங்கொடுத்து, எதிர்ப்புகளைக் கிறிஸ்துவின் துணையோடு எதிர்கொண்டு அவரை எல்லாக்காரியங்களிலும் மகிமைப்படுத்துவதெப்படி? நம்மினத்து வாலிபர்களுக்கு இருக்கின்ற பிரச்சனைகளைப் பார்த்தீர்களா? தன்னம்பிக்கையில்லாமல், வெளியில் போய் ஒரு காரியத்தை செய்யத் தைரியமில்லாமல், வாய் திறந்து சரளமாக ஒரு விஷயத்தை விவாதிக்கும் சமூகப் பழக்கம் இல்லாமல், வயதாகியும் வீட்டுக்கு வெளியில் தனியாக வாழ தைரியமில்லாமல், தொழிலையும், பணம் சம்பாதிப்பதையும் தவிர வாழ்க்கையில் வேறு எதையும் சிந்திக்க முடியாமல், முக்கியமாக எதிர்காலத்தில் குடும்பத்தலைவனாக இருக்க வேண்டிய நிலை ஏற்படுமே அதற்குத் தயாராக இருக்க வேண்டுமே என்ற எண்ணமே இல்லாமல், வயதாகியும் வளர்ச்சியில்லாத நிலையில் இருக்கும் கிறிஸ்தவ வாலிபர்கள் எத்தனை ஆயிரம் பேர். தொழில் நுட்பத்திலும், வாழ்க்கைத் தரத்திலும் வளர்ச்சியடைந்த பெரிய நகரங்களில் வாழுகின்ற வாலிபர்கள் வேண்டுமானால் ஒரு விதிவிலக்காக இருக்கலாம். ஆனால், பெரும்பாலான கிறிஸ்தவ வாலிபர்கள் இப்படி வளர்ந்திருக்கவில்லை என்று யாராவது வாதாட முடியுமா? இந்த நிலைமையில் இருக்கும் வாலிபர்கள் கிறிஸ்துவை எப்படி தங்களுடைய வாழ்க்கையில் மகிமைப்படுத்த முடியும்?

தானியேலைப்போல, யோசேப்பைப்போல, தாவீதைப்போல, சாலமோனைப்போல, தீமோத்தேயுவைப்போல, வேதத்தில் நாம் வாசிக்கும் இன்னும் எத்தனையோ வாலிபர்களைப்போல தன்னம்பிக்கையோடும், கிறிஸ்தவ வைராக்கியத்தோடும், ஞானத்தோடும் சமூக வாழ்க்கைக்குத் தங்களைத் தயார்படுத்திக்கொண்டு அதை எதிர்நோக்கும் வாலிபர்கள் நம்மினத்தில் எத்தனைபேர்? வாலிபர்கள் என்றாலே அவர்களுக்கு வயது வரவில்லை, எதையும் தப்பாகத்தான் பேசுவார்கள், தப்பாகத்தான் செய்வார்கள், தப்பாக நடக்க மட்டுமே அவர்களால் முடியும் என்ற

எண்ணத்தில் அவர்களோடு சேர்ந்து பழகாமலும், அடிக்கடி பேசி வழிநடத்தாமலும் ஒதுக்கிவைத்தே இன்றைக்கும் வளர அனுமதிக்கிறது நம் சமுதாயம், ஏன் கிறிஸ்தவ சமுதாயமும்கூட என்பதை எவரால் தைரியமாக நெஞ்சில் கைவைத்து மறுக்க முடியும்? இருபத்தேழு வயதான வாலிபனைக்கூட திருமணமாவதற்குமுன், அவனுக்கு இன்னும் வளர்ச்சி யில்லை என்பதுபோலவே பேசி நடத்துகிற கொடுமை நம்மினத்தில் இல்லை என்று எவராவது சொல்லமுடியுமா? நான் என்ன நடக்காததொன்றையா இத்தனை நேரம் எழுதிக்கொண்டிருக்கிறேன்? நடந்துவந்திருப்பதை, நடப்பதை, காதால் கேட்டு, கண்களால் சமுதாயத்தில் பார்த்ததையல்லவா எழுதிக்கொண்டிருக்கிறேன்.

இந்த நிலைமையில் இருக்கும் வாலிபர்கள் எப்படி கர்த்தருக்கு மகிமையளிக்கும்படி வளர்வது, அதற்கு வேத பார்வையோடு நம் பெற்றோர்களும், சபையும் செய்து தர வேண்டிய வசதிகள் என்ன என்பதை நாம் ஆராயாமல் இருக்க முடியுமா?

## கிறிஸ்தவ பெற்றோர்களின் கடமை

நான் கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு மட்டுமே இங்கே அறிவுரை சொல்ல முடியும். கிறிஸ்தவர்களாக அல்லாத பெற்றோர்களுக்கும், பெயரளவில் கிறிஸ்தவர்கள் போலிருப்பவர்களுக்கும் அவர்கள் சபைக்குப் போய்வந்தாலும் என்னால் இங்கே அறிவுரை சொல்ல முடியாது. வேதபோதனைகளை உணரக்கூடியவர்களாக கிறிஸ்தவர்கள் மட்டுமே இருப்பதால் அவர்களுக்கு மட்டுமே, அவர்கள் கேட்பார்கள், சிந்திப்பார்கள் என்ற எண்ணத்தில் என்னால் அறிவுரை சொல்ல முடியும்.

கிறிஸ்தவ பெற்றோர்கள் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதை மனதில் வைத்து, குடும்பத்தின் ஆவிக்குரிய எதிர்காலத்திற்கும், பிள்ளைகளின் ஆவிக்குரிய எதிர்காலத்திற்கும் வழி செய்யும் வகையில் நல்ல சபையொன்றிற்கு வாழ்க்கையில் இடம்கொடுக்க வேண்டும். நம்மில் பெரும்பாலானோர் மற்ற மதத்தவர்கள் கோயிலுக்கு போய் வருவதுபோலவே சபைக்குப் போய் வருகிறோம். சபை வாழ்க்கை பற்றி சிந்தித்துப் பார்ப்பதேயில்லை. அங்கு நடக்கின்ற ஆராதனை, போதிக்கப்படும் போதனைகள் வேதபூர்வமானதாக இருக்கின்றதா என்றே எண்ணிப் பார்ப்பதில்லை. சபைக்குப் போய் காணிக்கை கொடுத்துவிட்டால் கடமை முடிந்துவிட்டது என்று வாழ்ந்து வருகிறோம். அதற்காகவல்ல கிறிஸ்து தன் சபையை நிறுவியிருப்பது. கிறிஸ்தவர்கள் சமூக வாழ்க்கையை சபையில் இருந்து தன்னுடைய மகிமைக்காக வாழவேண்டும் என்பதற்காகவே கிறிஸ்து சபையை உருவாக்கியிருக்கிறார். பிள்ளைகள் வேத சத்தியங்களை வீட்டிலும், சபையிலும் இருந்து கேட்டு வளரவேண்டுமென்பதற்காக சபையை உருவாக்கியிருக்கிறார். புறஜாதி பழக்க வழக்கங்கள், பண்பாட்டுப் பாவங்களையெல்லாம் சிந்தனையிலிருந்தும், செயலிலிருந்தும் கருத்தோடு அகற்றி கர்த்தரின் வேத ஒழுக்கவிதிகளை மட்டும் பின்பற்றி கிறிஸ்தவ குடும்பங்களாக அவர்கள் வாழ சபையை

*அமைத்திருக்கிறார். அதற்கு உதவும் வகையில் வேதபோதனைகளை மட்டுமே தருவது சபையின் கடமையாக இருக்கிறது. போதகர்களும் இந்த விஷயத்தில் சபையிலுள்ள குடும்பங்களுக்கு வேதபோதனைகளைத் தந்து பெற்றோரும், பிள்ளைகளும் புறஜாதிப்பண்பாட்டை ஒழித்துக்கட்டி, வேதப்பண்பாட்டின்படி வாழத் துணை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதையெல்லாம் செய்கின்ற சபைகள் நம்மத்தியில் எண்ணிக்கையில் குறைவு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இத்தகைய சபைகள் இல்லாமலிருப்பதும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக குடும்பத்தோடு கர்த்தரை மகிமைப்படுத்தாமலிருப்பதற்கு ஒரு காரணம் என்பதை யாரால் மறுக்கமுடியும்? கிறிஸ்தவ வாலிபர்கள் தலைநிமிர்ந்து தைரியத்தோடு தானியேலைப்போல இல்லாமலிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்பதை யாரால் மறுக்க முடியும்?*

*பிள்ளைகளை பெற்றெடுப்பதோடும், ஒரு தொழிலைத் தேடி பணம் சேர்ப்பதற்கான படிப்பைக் கொடுத்துதவுவதோடும், அதற்குப் பிறகு திருமணத்தை செய்துவைத்துவிடுவதோடும் கடமை முடிந்துவிடுவதாக கிறிஸ்தவ பெற்றோர் எண்ணி வாழமுடியாது. அதுவல்ல வேதம் போதிக்கும் பிள்ளை வளர்ப்பு. பிள்ளைகள் கிறிஸ்துவை விசுவாசிக்க துணைசெய்யும் வகையில் ஆரம்ப வேதக் கல்வியை அவர்களுக்கு கொடுத்து, வேதப் பண்பாட்டை அவர்களுக்கு உதாரணமாக இருந்து வழிகாட்டி சொல்லித்தந்து சபை வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் தன்னம்பிக்கையுள்ளவர்களாக தங்களைத் தயார்செய்து கொள்ளும்படி வளர்ப்பதே பெற்றோர்களின் தவிர்க்க முடியாத வேதப்பணி. பிள்ளைகள் வளர்ந்து, தொழில் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்குக் தேவையான பணத்தை சம்பாதிப்பதும் அவசியம். அதையெல்லாம் தானியேலைப் போல விசுவாசமும், ஆண்மையும் உள்ள வாலிபனாக வளர்ந்து செய்வது மிகவும் அவசியம். பெண்ணாக இருந்தால் நீதிமொழிகள் 31ல் நாம் வாசிக்கும் பெண்ணைப் போல வளர்வது எல்லாவற்றிற்கும் மேலாக அவசியம். இதை மனதில் வைத்து பிள்ளைகளை வளர்க்காத கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்களுடைய கிறிஸ்தவ கடமைகளில் இருந்து தவறியவர்களாகிறார்கள். பெற்றோர் இந்த முறையில் பிள்ளைகளை வளர்க்காமல் இருப்பதால்தான் ஆவியில் முடமாகவும், சமுக வாழ்க்கை வாழ்வதில் திறனும், பொறுப்புமில்லாதவர்களாகவும் இன்றைய வாலிபர்கள் இருந்து வருகிறார்கள். வளர்ந்த பிறகும் ஆவிக்குரியதொரு துணையை ஜெபத்தோடு தேடிக்கொள்ளுவதில் எந்தப் பங்கும் வகிக்காமல் தலையாட்டி பொம்மையாக யார் பேச்சோ கேட்டு திருமணம் செய்யும் வாலிபர்களாக இருந்து வரும் கிறிஸ்தவ வாலிபர்கள் எங்கே, தானியேலும், தாவீதும், யோசேப்பும் எங்கே? பெற்றோர்கள் செய்யும் பெருந்தவறுகள் எதிர்காலத்தில் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் விதத்தில் வாலிபர்கள் வளரவும், உயரவும் முடியாதபடி செய்துவிடுகின்றன. அது மாறுமா?*

*நம்மினத்துப் பாரம்பரியமும், போலிப்பண்பாடும் வாலிபர்களை உதவாக்கறைகளாகத்தான் நம்மைப் பார்க்க வைக்கிறது. அவர்கள்*

*தன்னம்பிக்கையில்லாமலும், வயதுக்கேற்ற அறிவும், ஆவிக்குரிய முதிர்ச்சியும், திறமையுமில்லாதவர்களாக இருப்பதற்கு பெற்றோர்கள்தான் காரணம் என்பதை நீங்கள் உணராமல் இருக்கிறீர்கள். வயதான பெரியவர்கள் என்பதாலேயே நீங்கள் முதிர்ச்சியுள்ளவர்கள் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். பண்பாட்டின் காரணமாக எல்லோரும் பெரியவர்களான உங்களை மதிப்பதால் உங்களுக்கு அறிவும், முதிர்ச்சியும் இல்லை என்ற உண்மை மாறிவிடுமா என்ன? இதை வாசித்து ஆத்திரப்படாதீர்கள். சிந்தித்துப் பாருங்கள். உங்கள் தவறுகளை உணருங்கள். மகனும், மகளும் நீங்கள் இல்லாமல் சரியான முடிவெடுக்க முடியாதென்று எண்ணி வாழ்ந்துகொண்டிருக்கும் உங்களுக்கு எல்லாத் தவறான முடிவுகளையும் கிறிஸ்துவுக்கெதிராக எடுப்பது நீங்கள்தான் என்பது ஏன் தெரியாமல் இருக்கிறது? வயதானவர்கள் என்பதற்கு உண்மையில் என்ன அர்த்தம் தெரியுமா? தாழ்மையுள்ளவர்கள் என்பதுதான். தாழ்மையுள்ளவர்கள் மட்டுமே தவறை உடனடியாக உணர்ந்து தங்களைத் திருத்திக்கொள்ளுவார்கள். இனியாவது உங்கள் தவறுகளை உணர்ந்து மகனையும், மகளையும் பொறுப்போடும், மரியாதையோடும் நடத்தி அவர்கள் உங்களை உண்மையிலேயே மதிக்கும்படி நடந்துகொள்ளுங்கள். போலித்தனமாக உங்களுக்கு மரியாதையை மட்டும் கொடுத்துவிட்டு உள்ளுக்குள் நீங்கள் அவர்களுக்குப் பெற்றோர்களாக இருப்பதற்காக அவர்கள் வருந்தும்படி செய்துவிடாதீர்கள். வாலிபர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் தவறு செய்துவிடுவதில் ஆச்சரியமில்லை. அவர்கள் திருந்தவும், திருத்தமாக வாழவும் நாம்தான் கர்த்தரின் வழிகளை அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். போலிப்பண்பாட்டை அல்ல, தேவனின் கட்டளைகளை அவர்களுக்கு சொல்லி வளர்க்க வேண்டும்.*

## சபையின் பொறுப்பு

*நம்மினத்து வாலிபர்களுக்கு உதவுவதில் சபைக்குப் பெரிய பங்குண்டு. ஆனால், ஒரு சபை வேத அடிப்படையில் அமைந்திருந்து நல்ல போதகர்களைக் கொண்டிருந்தால் மட்டுமே அது நடக்க முடியும். எல்லாச் சபைகளிலுமே இன்றைக்கு வாலிபர்கள் கூட்டம் உண்டு. அது இல்லாத சபை இருக்க முடியாது. இது எதற்காக இருக்கிறது என்பதுதான் அநேகம் பேருக்குத் தெரிவதில்லை. தொடர்ந்து வாலிபர்களை ஈர்த்து சபைக்கு வரும்படி செய்ய வேண்டும் என்பதற்காக அவர்களுடைய இச்சைக்கேற்றதைக் கொடுக்கும் ஒரு தளமாகத்தான் இது இன்றைக்கு பொதுவாக அநேக சபைகளில் இருந்து வருகிறது. இந்தக் கூட்டங்களில் அவர்கள் நல்ல முறையில் வளர்ந்து ஆவிக்குரிய எதிர்காலக் குடும்பத்தலைவர்களாகவும், தலைவிகளாகவும் வளர்வதற்கு உதவும் கருவியாக இது இருப்பதில்லை. போதனைகளைத் தருவதைவிட, அவர்களை சிந்திக்க வைக்கும் ஆவிக்குரிய காரியங்களைச் செய்வதைவிட இசையும், பாட்டும் வேறெதெல்லாமோ கொடிகட்டிப் பறக்கும் ஒரு தளமாக இது பெரும்பாலான இடங்களில் இருந்து வருகிறது. என்னைப் பொறுத்தவரையில் இது வாலிபர்களைக் கொச்சைப்படுத்துகின்ற*



தளம்தான். இந்தளவுக்கு மோசமான இச்சைகொண்டவர்களா வாலிபர்கள்? இதற்கு மேல் போகமுடியாதவர்களா வாலிபர்கள்? தாவீது உயிரோடிருந்தாலோ, சாலமோன் உயிரோடிருந்தாலோ இந்தக்கூட்டங்களில் சந்தோஷத்தோடு கலந்துகொள்ளுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நிச்சயமாக இல்லை!

வாலிபர்கள் நல்ல குடும்பத் தலைவர்களாக, தலைவிகளாக வர சபை என்ன செய்ய வேண்டும்? அவர்கள் மீது அக்கறைகாட்டி நல்ல போதனைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள வழி செய்ய வேண்டும். அவர்களை உதாசீனப்படுத்தக்கூடாது. சின்னப் பையன்கள், சின்னப் பையன்கள் என்று சொல்லி சொல்லியே அநேக வாலிபர்களை சபைகள் கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர முடியாமல் செய்திருக்கின்றன. வாலிபர்கள் நிச்சயம் நம்மினத்தில் அடிக்கடி தவறு செய்வார்கள்; ஒரு வேலையை பொறுப்போடு செய்யாமல் போவார்கள். ஏன்? அந்தப்படி அவர்கள் வளர்க்கப்படவில்லை. அதுதான் காரணம். பெற்றோர்கள் பொறுப்போடு நடந்து அவர்களுக்கு வழிகாட்டி அந்த முறையைக் கற்றுக்கொடுக்கவில்லை. அதுதான் காரணம். அது நமக்குத் தெரிந்திருந்தால் வாலிபர்கள் தவறு செய்யும்போது அவர்களைத் திட்டுவதாலோ அல்லது திறமையாய் ஒரு காரியத்தை செய்யவில்லை என்பதற்காக எதையும் செய்யவிடாமல் இருப்பதாலோ அவர்களை நல்லமுறையில் வளர்க்க முடியுமா? அநாவசியத்துக்கு அவர்களை ஒதுக்கி வைப்பதுபோல் பேசி நடந்துகொள்ளும்போது வாலிபர்களை நாம் பவுல் சொல்லுவதுபோல் 'கோபப்படுத்துகிறோம்' (எபேசி. 6:4). வாலிப வயதில்தான் ரௌத்திரம் அதிகமாக இருக்கும். அதை அவர்களில் வளர்ப்பதுபோல் நாம் நடந்துகொள்ளலாமா? அவர்கள் திடனற்றுப் போகும்படி அவர்களைக் கோபப்படுத்துவதா நமது வேலை? இதைத்தான் நம் சமுதாயத்தில் நாம் தொடர்ந்து செய்துவருகிறோம். திருமணமான பிறகுகூட அவர்கள் எதையும் சரியாக செய்ய மாட்டார்கள் என்று முடிவெடுத்து தொடர்ந்து ஆலோசனை கொடுக்க துடிக்கிறோம் இல்லையா? இதெல்லாம் நம்முடைய போலிப்பண்பாடு நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கும் காரியங்கள். அதை நாம் இன்னும் ஒதுக்கிவைத்து

வாழக் கற்றுக்கொள்ளவில்லை. சபை சபையாக இன்று நடந்துவரும் காரியத்தைத்தான் நான் சொல்லிக்கொண்டு வருகிறேன்.

வாலிபர்களை பெரியவர்கள் சபையில் ஒதுக்கி வைக்கக்கூடாது. வாலிபர்களோடு அதிகம் உறவு வைத்துக்கொள்ளக்கூடாது; அவர்களை அதிகம் பேசவிடக்கூடாது, இடங்கொடுத்துவிட்டால் அவர்கள் நம் தலை மேல் ஏறி உட்கார்ந்து நம்மை மதிக்காமல் போய்விடுவார்கள் என்று நாம் தொடர்ந்து நினைத்து வருகிறோம். அவர்களுக்கு பொறுப்புக் கொடுக்கத் தயங்குகிறோம். அவர்களை ஒதுக்கி வைத்து வளரமுடியாமல் செய்து விடுகிறோம். அநேக வாலிபர்கள் இதனால் ஒன்றுக்கும் உதவாமலேயே போய்விடுகிறார்கள். பெற்றோர்களும் அவர்களைப் பொறுப்போடு வளர்ப்பதில்லை. அவர்கள் கிறிஸ்தவர்களாக வந்த பிறகும் சபைகள் அவர்களை நடத்த வேண்டிய விதத்தில் நடத்துவதில்லை. எங்கே போகமுடியும் இந்த வாலிபர்களால்?

போதகர்களே, பெரியவர்களே! உங்கள் சபை வாலிபர்களோடு நேரம் கொடுத்து பழக ஆரம்பியுங்கள். உங்கள் குடியரசுத்தலைவராக இருந்த அப்துல் கலாம் வாலிபர்களோடு பழகுவதில்லையா? சோனியா காந்தி ராகுலை மட்டம் தட்டிக்கொண்டேயா இருக்கிறார்? பிரியங்காவைத்தான் அடுப்படியில் இருக்கும்படி செய்கிறாரா? அவிசுவாசிகளான இவர்களுக்கே வாலிபர்களை எப்படி நடத்தவேண்டும் என்று தெரிந்திருக்கும்போது கர்த்தரை விசுவாசிக்கும் நமக்கு இது தெரியாமல் போயிருப்பது எப்படி? நம்முடைய அசட்டுக் கௌரவம்தான் நம்மை இப்படி நடந்துகொள்ளும்படி வைக்கிறது. தாவீது சாலமோனைத் திட்டித் திட்டியே வளர்த்திருந்தால் சாலமோன் எதிர்காலத்தில் நாட்டை ஆளும் நிலைக்கு வந்திருப்பானா? பவுல் தீமோத்தேயுவுக்கு நேரம் கொடுத்துப் பழகாமலும், வழிநடத்தாமலும் இருந்திருந்தால் தீமோத்தேயு நல்ல போதகனாக வளர்ந்திருக்க முடியுமா? இவர்கள் எல்லோருமே போலிப்பண்பாட்டின்படி வாலிபர்களை வளர்க்கவில்லையே. வாலிபர்களைப் பற்றி தமிழக் கவிஞன் பாரதி எத்தனை பெரிதாக எண்ணியிருந்தார் தெரியுமா? அவருக்குத் தெரிந்திருந்தது வாலிபர்களின் அருமையும், பெருமையும். நம்முடைய போலிப்பண்பாட்டை அவர் எப்படியெல்லாம் சாடியிருக்கிறார் தெரியுமா? 'நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்' என்று பாடியிருக்கிறார் பாரதி. வாலிபர்களை பாரதி ஒளிபடைத்த கண்களுடையவர்களாக, உறுதிகொண்ட நெஞ்சுடையவர்களாகப் பார்க்கிறார். கடவுளை அறிந்திராத பாரதி கண்ட கனவும், சமுதாயமும் உருவாகவில்லை. கடவுளை அறிந்துகொண்ட நம்மால் மட்டுமே அத்தகைய சமுதாயத்தை உருவாக்க முடியும்; அதை வாலிபர்களைக் கொண்டுதான் உருவாக்கவும் முடியும். இதற்காகத்தான் கிறிஸ்துவில் இரட்சிப்பை நாம் அடைந்திருக்கிறோம். ஆனால் அந்த வாலிபர்களைத்தான் நாம் வளரவிடாமல் செய்துவருகிறோமே. இனியாவது வாலிபர்களை நல்லவிதத்தில் நடத்தப் பாருங்கள். அவர்களோடு பேசிப் பழகுங்கள். அவர்களை மதித்து நடந்துகொள்ளுங்கள். அவர்களுக்கு நல்வழி

காட்டுங்கள். எப்போதும் குறைகூறாதீர்கள். அவர்கள் வாழ, உயர நல்வழி காட்டுங்கள். இதை சபை செய்யாமல் யார் செய்வது?

## கிறிஸ்தவ வாலிபர்களின் கடமை

கடைசியாக கிறிஸ்தவ வாலிபர்களுடைய கடமையை விளக்க விரும்புகிறேன். நீங்கள் வளர்ந்த முறை, வாழும் முறை எல்லாமே உங்களை நல்ல முறையில் அதாவது வேத அடிப்படையில் வாழ முடியாதபடி செய்திருக்கிறது. இருந்தாலும் அதையே சாக்குப்போக்காக வைத்து நீங்கள் வேதம் எதிர்பார்க்கும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. கிறிஸ்து உங்களுக்கு விடுதலை தந்திருக்கிறார். அதுவே பெரிய ஆசீர்வாதம். அடைந்திருக்கும் அந்த ஆசீர்வாதத்திற்கு ஏற்றமுறையில் நீங்கள் வாழவேண்டியது உங்களுடைய கடமை. ஒழுங்கோடு கூடிய வாழ்க்கையை நீங்கள் வாழாமலிருந்துவிட்டு கிறிஸ்துவிடம் சாக்குப்போக்குச் சொல்ல வழியில்லை. அவர் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார். உண்மையிலேயே கிறிஸ்துவை ஒருவர் விசுவாசித்திருந்தால் கிறிஸ்து எதிர்பார்க்கும்படி வாழ்வதற்கு அவசியமான புதிய இருதயத்தையும், ஆவிக்குரிய பெலத்தையும் நிச்சயம் கிறிஸ்து அவருக்கு தந்திருக்கிறார் என்றுதான் அர்த்தம். அந்த அர்த்தத்தில்தான் பவுல் கொலோசெயர் 3ல், 'நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால் . . . மேலானவைகளைத் தேடுங்கள் . . . மேலானவைகளை நாடுங்கள்' என்று எழுதுகிறார். கிறிஸ்து உயிர்ப்பித்திருக்கும் ஒருவரால்தான் மேலானவைகளைத் தேட முடியும்; நாட முடியும். கிறிஸ்துவை விசுவாசிக்கும் வாலிபன் அப்படி என்னால் முடியவில்லை என்று சொல்ல முடியாது. கிறிஸ்துவைத் தன் வாழ்வில் கொண்டிராத ஒருவனால்தான் அப்படி வாழ முடியாது.

நீங்கள் வாழ வேண்டிய மேலான வாழ்க்கை என்ன என்பதை பவுல் தொடர்ந்து கொலோசெயர் 3ல் விளக்குகிறார்.

(1) உங்களுடைய வாழ்க்கையில் மாம்சத்துக்குரிய அனைத்தையும் அழித்துப் போடவேண்டும். கிறிஸ்துக்கு உடன்பாடில்லாத போலி வாழ்க்கை அழிய வேண்டும். பாவங்கள் ஒழிய வேண்டும். கிறிஸ்து இருக்கும் இடத்தில் அதற்கு இடமிருக்க முடியாது. பாவங்களை வாழ்க்கையில் செய்யாமலிருந்து, பரிசுத்தமாக வாழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். அதற்கான ஆவியையும், புதிய இருதயத்தையும் கிறிஸ்து உங்களுக்குத் தந்திருக்கிறார். அதை மறந்துவிடாதீர்கள். பாவத்தை உணர்ந்து அதிலிருந்து விலகி வாழவேண்டியது உங்கள் கடமை. அதை சொந்த ஜெபத்தாலோ, முழுநேர ஜெபத்தாலோ போக்க முடியாது. நீங்கள் அக்கறையோடும், வைராக்கியத்தோடும் அதை உங்களில் இருந்து அழிக்க வேண்டும். வேதம் 'அழிக்க' என்ற வார்த்தையையே பயன்படுத்துகிறது. பவுல், 'விட்டுவிடுங்கள்' (3:8), 'களைந்து போடுங்கள்' (3:9), என்கிறார். இதெல்லாம் ஆவியானவருக்கு சொல்லப்பட்ட வார்த்தைகளல்ல. உங்களுக்கு, நமக்கு சொல்லப்பட்ட வார்த்தைகள். அதை அசட்டை செய்து, 'என்னால் முடியவில்லை' என்ற

*பாட்டைப் பாடிக்கொண்டிருக்க முடியாது. கிறிஸ்தவன் போல் நீங்கள் சிந்திக்கவும், பேசவும், நடந்துகொள்ளவும் வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது.*

*கிறிஸ்தவன்போல், பேசுகிறீர்களா, சிந்திக்கிறீர்களா? வாலிபர்கள் என்றாலே எல்லோருக்கும் விளையாட்டுப் பசங்க என்ற எண்ணம் இருப்பதற்குக் காரணம் என்ன? உங்களுடைய பேச்சும் நடத்தையும்தான் அதற்குக் காரணம். கேளிப்பேச்சு கிறிஸ்தவனுக்கு இருக்கலாமா? வாலிபர்களாக இருப்பதற்காக உலகத்து வாலிபனைப்போல கிறிஸ்தவ வாலிபன் பேசலாமா, நடந்துகொள்ளலாமா? பேச்சு மொழி, பேச்சு முறை, வயது கூடியவர்கள் இருக்குமிடத்தில் பேசும் முறை, வாலிபப் பெண்கள் இருக்கும் இடத்தில் பேசும்முறை என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் கல்லூரி பையன்களோடு பேசும் பேச்சைத் தொடர்கின்ற கிறிஸ்தவ வாலிபன் சபையில் பெரியவர்களிடமும், பெற்றோர்களிடமும் நம் சமுதாயத்தில் மதிப்பைப் பெற முடியுமா? உங்கள் பேச்சு எப்படி இருக்கிறது என்பதை முதலில் நீங்கள் சிந்தித்து ஆராய்ந்து பார்த்து கிறிஸ்துவுக்கு ஏற்றமுறையில் மாற்றிக்கொள்வதற்கு பெயர்தான் ரோமர் 8ல் பவுல் விளக்கும் 'மாம்சத்தை அழிப்பது' என்பதற்கு அர்த்தம்.*

***(2)** வேதத்தை அன்றாடம் தவறாமல் வாசித்து, ஜெபித்து, சபை வாழ்க்கைக்கு இடம் கொடுத்து வைராக்கியத்தோடு கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும் (3:16). பவுல் 3:16ல் சொல்லுவது சபை ஆராதனை மட்டுமல்ல சபை வாழ்க்கை சம்பந்தமானது. உங்களுடைய சொந்த வாழ்கையை, குடும்ப வாழ்க்கையை இந்த உலகத்தில் நீங்கள் கிறிஸ்துவின் சபையில் இருந்தே வாழ வேண்டும். சபையில்லாமல் வாழுகிறவன் கிறிஸ்துவின் சபையை உதாசினம் செய்கிறான். சபைக்கு ஒப்புக்கொடுத்து வாலிபர்கள் விசுவாசத்தோடு வாழ்க்கை நடத்தவேண்டும். சபையில் இருந்து வேத அறிவில் வளர வேண்டும். வாலிப வயதில் வேத அறிவை வளர்த்துக்கொள்ளாவிட்டால் நீங்கள் எப்படி பின்னால் குடும்பம் நடத்தி மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் வேதம் சொல்லிக்கொடுக்கப் போகிறீர்கள். வேதமே தெரியாமல் கணவனாகவோ, மனைவியாகவோ இருந்து என்ன பிரயோஜனம்? குடும்பத் தலைவனுக்கும், குடும்பப் பெண்ணுக்கும் இருக்கவேண்டிய வேதஅறிவை நடைமுறைக்குப் பயன்படுகிற அளவுக்கு வாலிப காலங்களில் வளர்த்துக்கொள்ளாவிட்டால் உங்கள் எதிர்கால வாழ்க்கை கிறிஸ்துவை எந்தவிதத்திலும் மகிமைப்படுத்த முடியாது.*

*அத்தோடு, வாலிபர்களாகிய நீங்கள் சபையில் பெரியவர்கள், சிறியவர்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து மற்றவர்கள் மதிக்கும்படி நடந்துகொள்ள வேண்டும். சபை வேலைகளில் ஈடுபாடு காட்டவேண்டும். சபைக்காரியங்களில் ஊக்கத்தோடு பங்குபெற்று முன்னின்று நடத்தவேண்டும். அவற்றை அசட்டையாக செய்துவிட்டு செய்யாமல் போனதற்கோ அல்லது அரைகுறையாக செய்ததற்கோ சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. நொண்டிச் சாக்கு சொல்லுவது புறஜாதிப் பண்பாடு. அது கிறிஸ்தவனுக்கு அழகல்ல.*

*(3) திருமணமானவராக இருந்தால் திருமண வாழ்க்கை, பிள்ளை வளர்ப்பு வேதபூர்வமாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். (எபேசி 3:18–21). உங்கள் பெற்றோருக்குத்தான் உங்களை வளர்க்கத் தெரியவில்லை. அவர்கள் அவிசுவாசிகளாக இருக்கலாம். பெயர் கிறிஸ்தவர்களாக இருக்கலாம் அல்லது கிறிஸ்தவர்களாக இருந்தும் போலிப்பண்பாட்டைத் தொடர்ந்தவர்களாக இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் இதிலிருந்தெல்லாம் உங்களுக்கு கிறிஸ்து விடுதலை தந்திருந்தால் உங்கள் பெற்றோர் வாழ்ந்த வளர்ந்த முறையில் நீங்கள் தொடராது உங்களுடைய குடும்பத்தை வேத அடிப்படையில் உண்மையோடு நடத்தவேண்டிய பெருங்கடமை உங்களைச் சார்ந்திருக்கிறது. அன்பான கணவனாகவும், கீழ்ப்படிவுள்ள மனைவியாகவும் இருந்து பிள்ளைகளுக்கு வேதத்தைப் போதித்து வளர்க்க வேண்டிய பெருங்கடமை உங்களுக்கு இருக்கிறது.*

*திருமணமாகாத வாலிபராக இருந்தால் யாரோ தகுந்த காலத்தில் திருமணம் செய்துவைப்பார்கள் என்று அதில் எந்த அக்கறையும் காட்டாமல் இருந்து வளர்வது கிறிஸ்தவ இளைஞனுக்கு அடையாளமல்ல. எனக்குத் தெரியும், பண்பாடு அப்படித்தான் உங்களை சிந்திக்க வைக்கிறது என்று. வாலிப வயதை அடைந்து தொழில் செய்ய ஆரம்பித்துவிட்டாலே திருமணம் என்ற பேச்சு நம்மினத்தில் உடனடியாக எழும். அந்த விஷயத்தில் நீங்கள் அசட்டையாக இருந்துவிடுவதை இயேசு கிறிஸ்து விரும்பவில்லை. அதை வேதபோதனைகளின்படி அணுகி அதில் ஈடுபட வேண்டும் என்றுதான் இயேசு எதிர்பார்க்கிறார். ஆதியாகமம் 1–3 வரையுள்ள பகுதிகள், எபேசியர் 5–6 அதிகாரங்கள், கொலோசெயர் 3, 1 பேதுரு 3:1–7 வரையுள்ள வேதப்பகுதிகளைக் கவனமாக ஆராய்ந்து பார்த்து கிறிஸ்தவ திருமண வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் எப்படி ஈடுபட வேண்டுமென்று சிந்தித்துப் பார்த்து அதற்குரிய தகுதிகளை வளர்த்துக்கொண்டு ஈடுபட வேண்டும் என்று கர்த்தரின் வேதம் எதிர்பார்க்கிறது. தொழிலும், உங்கள் வயதும் மட்டும் திருமணத்திற்கான தகுதிகளல்ல. அது இரண்டும் எல்லோருக்கும் இருக்கலாம், ஆனால், கிறிஸ்தவ திருமண வாழ்க்கைக்கு அவை மட்டும் போதாது. ஒருத்திக்கு வாழ்க்கை கொடுக்கும் அளவுக்கு மனவளர்ச்சி, அறிவு வளர்ச்சி, சரீர வளர்ச்சி, ஆவிக்குரிய வளர்ச்சி அனைத்தையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும் என்று கிறிஸ்து எதிர்பார்க்கிறார். இந்தவகையில் உங்களை வளர்த்துக்கொள்ளவே வாலிப நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் வாலிப நாட்களை வீணாக்கிக்கொள்ளக்கூடாது. இதேமுறையில்தான் ஒரு கிறிஸ்தவ பெண்ணும் தன்னுடைய வாலிப நாட்களை திருமணத்திற்காகத் தயார் செய்துகொள்ள வேண்டும். பெற்றோர் காட்டுகிற யாருக்காவது கழுத்தை நீட்டுகிற கிறிஸ்தவ பெண்ணாக நீங்கள் இருந்துவிடக்கூடாது. முக்கியமாக கிறிஸ்தவரல்லாத எவரையும், பெயர் கிறிஸ்தவர்களாக இருப்பவர்களையும் நிச்சயம் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. அப்படி செய்வது உங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்வதற்கு மட்டுமே உதவும். நிலைமை அப்படி இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி அவிசுவாசிகளை*

*திருமணம் செய்துவிட்டு ஜெபம் பண்ணுவதில் பிரயோஜனம் இல்லை. அவிசுவாசிகளை திருமணம் செய்வது கர்த்தருடைய கட்டளையை மீறுவது என்பதை நாம் முதலில் உணரவேண்டும்.*

*(4) வேலை நமக்கு அவசியந்தான், பணமும் அவசியந்தான். அதையெல்லாம்கூட கிறிஸ்துவின் மகிமைக்காகவே அடைய வேண்டும். கிறிஸ்துவை மகிமைப்படுத்தாத கல்வி, வேலை, பணம், குடும்பம் அனைத்தும் வீணே. பவுல் கொலோசெயர் 3:22ல் அதைத்தான் விளக்குகிறார். நீங்கள் கிறிஸ்தவராக இருந்தால் எங்கே வேலை செய்கிறீர்களோ அந்த இடத்தில் கிறிஸ்தவ சாட்சியோடு மேலதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்து வேலை செய்யவேண்டும். உங்களுக்கு மேலிருக்கிறவர் அவிசுவாசியாக இருந்தாலும் அவர்களுக்கு மதிப்புக்கொடுத்து உங்களுடைய கடமையை விசுவாசத்தோடு செய்ய வேண்டும். தானியேலை நினைத்துக்கொள்ளுங்கள். அவிசுவாச அரசன், அதிகாரிகளுக்கு அவன் விசுவாசமாக கர்த்தருக்குள்ளிருந்து பணிசெய்தான். அவிசுவாசிகளிடம் பணி செய்தாலும் தேவனுக்கு பயந்து கபடமில்லாத இருதயத்தோடு அவருக்குப் பணிசெய்ய வேண்டும். அவிசுவாசிகள் ஓய்வுநாளில் வேலை செய்யும்படியாக கட்டாயப்படுத்துவார்கள். கர்த்தரை நம்பி அந்தக் காரியத்தில் ஈடுபடக்கூடாது. அதை ஏன் நீங்கள் செய்ய முடியாதென்பதை தேவபயத்தோடு அவிசுவாசிகளுக்கு விளக்க வேண்டும். எந்த நிலையிலும் உங்கள் சாட்சியை அவர்களுக்கு முன் இழந்துவிடக்கூடாது. கிறிஸ்து மகிமையடையும்படியாக வேலை செய்ய வேண்டும். விசுவாசத்தோடு, சோம்பேறித்தனமில்லாமல், அவிசுவாசியைவிடத் திறமையாக கிறிஸ்தவனாக வேலை செய்தால் ஏன் அவிசுவாசி நம்மை வெறுக்கப்போகிறான்? தானியேல் அப்படி வேலை செய்யவில்லையா?*

*கிறிஸ்தவராக இருக்கும் நீங்கள் ஏன் உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ளக்கூடாது? சராசரியாக வாழவும், சராசரியாக வேலை செய்யவும், சராசரி மனிதனாக சிந்திக்கவும், சராசரி மனிதனாக செயல்படவுமா கிறிஸ்து உங்களுக்கு இரட்சிப்பை அளித்திருக்கிறார். சராசரி மனிதனாக இருப்பதற்கு நாம் வெட்கப்பட வேண்டும். படிப்பில் அக்கறை காட்டாது 40% மார்க் கிடைத்தால் போதுமென்றிருப்பதற்காக வெட்கப்பட வேண்டும். சராசரிப் படிப்புள்ளவனாக தீமோத்தேயு இருக்கவில்லை. பவுல் பெரிய கல்விமான், கமாலியேலிடம் கற்றுத் தேரிய கல்விமான். பேதுரு மீன் தொழில் செய்தவனாக இருந்தபோதும் அறிவில்லாதவன் என்று வேதம் சொல்லவில்லை. அவருடைய அறிவை அவருடைய நிருபங்களில் பார்க்கிறோம். இது வானத்தில் இருந்து அவர் மேல் அற்புதமாக விழுந்த அறிவல்ல. பேதுரு நிச்சயம் அக்கறைகாட்டி கஷ்டப்பட்டு படித்திருக்கிறார். வாலிபர்கள் இன்றைக்கு பட்டத்துக்காக மட்டும் படிக்கிறார்கள். பணத்தைக் கொண்டுவரும் ஒரு தொழிலுக்காக மட்டும் ஏனோதானோவென்று படிக்கிறார்கள். அது கர்த்தருக்குப் பிடித்தமில்லாதது. அறிவை வளர்த்துக்கொள்ள படிக்க வேண்டும். கிறிஸ்தவ சிந்தனையாளனாக வர படிக்க வேண்டும். ஆவிக்குரிய*

சிந்தனைகள் வளர கல்வி நிச்சயம் அவசியம். எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். வாசிப்பவற்றை ஆராய்ந்து சிந்திக்கப் படிப்பு அவசியம். தொழிலுக்காக மட்டும் படிப்பதை நிறுத்துங்கள்.

சராசரி மனிதனாக இருப்பதில் என்ன தவறு என்று கேட்கிறீர்களா? சராசரி மனிதனாக இருப்பது கிறிஸ்துவுக்கு மதிப்பை அளிக்காது. கிறிஸ்தவன் திறமைசாலியாக, 'வெட்டிக்கொண்டு வா' என்றால் 'கட்டிக்கொண்டு' வருகிறவனாக இருக்க வேண்டும். அதற்கான வல்லமையை கிறிஸ்து மீட்பின் மூலம் நமக்குத் தந்திருக்கிறார். கிறிஸ்தவன் மட்டுமே உழைப்பில் உண்மையுள்ளவனாக, சிறந்தவனாக இருக்க முடியும். ஏன் தெரியுமா? உழைப்பதற்காகவே மனிதன் உருவாக்கப்பட்டிருந்தாலும், கிறிஸ்தவன் மட்டுமே உழைப்பை நீதியாக கர்த்தருக்கு செய்யக்கூடியவனாகவும் இருப்பதால்தான். கிறிஸ்து அவனை உயர்த்தியிருக்கிறார். இத்தனையை ஆண்டவர் நமக்கு செய்து தந்திருந்தும் எந்த முயற்சியும் செய்யாமலும், உழைக்காமலும், திறமைகளை வளர்த்துக்கொள்ளாமலும் இருப்பது கிறிஸ்தவனுக்கு அழகல்ல. அவிசுவாசி வெட்கப்படுமளவுக்கு சிந்தனையிலும், செயலிலும் கிறிஸ்தவன் உயர்ந்தவனாக இருக்க வேண்டும். அந்த முறையில் வேலை செய்கிறீர்களா? கிறிஸ்துவை வேலை மூலம் உயர்த்துகிறீர்களா? அல்லது வெறும் பணத்துக்காக மட்டும் வாழ்கிறீர்களா? எந்தவிதமான வாலிபர் நீங்கள்? நீங்களே மேலதிகாரியாக இருந்தால் உங்களுக்குக் கீழிருப்பவர்களை நீங்கள் மரியாதையோடு நடத்த வேண்டும். அவர்களை அநீதியாக நடத்தக்கூடாது (4:1).

வாலிபர்களே! நீங்களே எதிர்காலத்து சந்ததிகள். கிறிஸ்துவுக்குள் நீங்கள் வளரும்விதத்தில்தான் இருக்கிறது உங்களுடைய எதிர்காலம். வாலிப காலங்களை அசட்டை செய்துவிடாதீர்கள். வருங்காலத்தை மனதில் வைத்து அக்காலத்தில் நீங்கள் ஏற்று நடத்த வேண்டிய பொறுப்புக்களுக்காக இப்போதே உங்களைத் தயார்செய்துகொள்ளுங்கள். கடந்து போய்க்கொண்டிருக்கின்ற வாலிப காலங்கள் மீண்டும் திரும்ப வராது. இழந்தது இழந்ததுதான். இந்தக் காலங்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளத் தவறினால் அது உங்களைத்தான் பாதிக்கும். கிறிஸ்து கொடுத்திருக்கும் அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் கிறிஸ்துவை எல்லாக் காரியங்களிலும் மகிமைப்படுத்த இப்போதே உங்களைத் தயார்செய்துகொள்ளுங்கள்.

"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களில் உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி . . . நீ உன் இருதயத்தில் இருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு;" (பிரசங்கி 11:9,10). "நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை . . ." (பிரசங்கி 12:1), "தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்." (பிரசங்கி 13:13).

# பெற்றோரின் கடமைகள்

- ஜே.சீ. ரைல் -

*பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். - நீதி 22:6*

வேதவசனங்களில் தேர்ந்த கிறிஸ்தவர்கள் எல்லோருமே இந்த வசனத்தை நன்றாக அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். நமக்குப் பழக்கப்பட்ட ஒரு இனிமையான பாடலைப்போல அது உங்களுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இந்த வசனத்தை நீங்களே அநேக தடவை கேட்டிருப்பீர்கள், படித்திருப்பீர்கள், இதைக் குறித்துப் பேசியுமிருப்பீர்கள். இதை மேற்கோளாகக்கூட காட்டியிருப்பீர்கள். இல்லையா? ஆனால், இதன் பொருளுக்கு எந்தளவுக்கு மதிப்புக்கொடுத்து பின்பற்றியிருக்கிறீர்கள்? இந்த வசனத்தில் அடங்கியுள்ள ஆழமான வேத போதனையை நன்றாக அறிந்து வைத்திருப்பவர்கள் கொஞ்சப்பேரே. இந்த வசனம் சுட்டிக் காட்டுகின்ற கடமையை நடைமுறையில் செயல்படுத்துகிறவர்கள் எத்தனை பேர் என்று பார்ப்போமானால் அது நமக்கு அதிர்ச்சியைத் தருவதாயிருக்கும். என்ன, வாசகர்களே, நான் கூறுவது உண்மைதானே?

இந்த விஷயம் இதுவரை யாருமே அறிந்திராத புதிய விஷயம் என்று சொல்வதற்கில்லை. உலகம் எவ்வளவு பழமையானதோ அந்தளவுக்கு பழமை வாய்ந்த விஷயம் இது! உலகம் தோன்றி ஏறக்குறைய ஆறாயிரம் ஆண்டுகள் கடந்து போயிருக்கின்றன. அது நமக்குக் கற்றுந்தந்திருக்கும் அனுபவபாடங்கள் ஏராளம்! இப்போது நாம் பலவிஷயங்களைக் கற்றுக்கொள்ளுவதற்கான ஆர்வம் அதிகரித்துள்ள காலப்பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகமெங்கும் புதிய புதிய பள்ளிகளும், கல்வி நிறுவனங்களும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. படிக்கும் பிள்ளைகள் எல்லோருக்கும் புதிய புதிய கல்வி கற்பிக்கும் முறைகளும், புதுப்புது பாடத்திட்டங்களும் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. இவ்வளவும் இருந்தபோதும் பிள்ளைகளை நடக்க வேண்டிய வழியிலே நடத்துவதற்கான எந்தத் திட்டமும் உருவானதுபோல் தெரியவில்லை. ஏனென்றால், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது யாருமே கடவுளோடு இணைந்து நடக்கிறவர்களாகத் தெரியவில்லையே.

அப்படி இருப்பதற்கு நாம் என்ன காரணத்தைக் காட்ட முடியும்? இந்த வசனத்தில் காணப்படுகிற கடவுளின் கட்டளை, மதித்துப் பின்பற்றப்படவில்லை என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? ஆகவேதான், இந்த வசனத்தில் காணப்படுகின்ற கடவுளின் வாக்குத்தத்தமும் நிறைவேறாமலேயே இருக்கிறது.

இதை வாசிக்கிறவர்களே! இந்த வசனத்தை வைத்து நீங்கள் உங்கள் இருதயங்களை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். பிள்ளைகளை சரியான வழியில் நடத்துவதைக் குறித்து கர்த்தரின் ஊழியன் சொல்லுகிற இந்த புத்திமதியைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இந்தப் போதனை உங்கள் ஒவ்வொருவருடைய இருதயத்திற்குள்ளும் புகுந்து உங்கள் வீட்டிற்குள்ளும் இது நுழைய வேண்டும். ஒவ்வொருவரும் நல்ல மனசாட்சியோடு, "இவ்விஷயத்தில் நான் செய்ய வேண்டியவைகளை செய்திருக்கிறேனா?" என உங்களுக்குள்ளேயே கேட்டுக்கொள்ளுங்கள்.

இவ்விஷயத்தில் ஏறக்குறைய எல்லோருக்குமே பங்கு இருக்கிறது. இதில் ஏதோவொருவிதத்தில் பங்கேற்காதவர்களே இல்லை என்று சொல்லலாம். பெற்றோர்கள், தாதிகள், ஆசிரியர்கள், ஞானத்தகப்பன்மார், ஞானத்தாய்மார், மாமாக்கள், அத்தைகள், சகோதரர்கள், சகோதரிகள் ஆகிய எல்லோருக்கும் இதில் பங்கிருக்கிறது. இந்தப் பட்டியலில் ஒருசிலரைத் தவிர, ஏறக்குறைய மற்ற எல்லாருமே ஏதாவதொரு வகையில் பிள்ளைகளைப் பெற்றோர்கள் வளர்க்கின்ற விஷயத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெற்றோருக்கு ஆலோசனை கொடுத்தோ, அல்லது ஒரு சில பிள்ளைகளின் வளர்ப்பு முறையில் உதவி செய்யும் விதத்தில் ஆலோசனை தந்தோ கருத்துத் தெரிவித்தோ இருக்கலாம். ஆகவே, எல்லோருமே பிள்ளைகளைப் பெற்றோர் வளர்க்கும் விஷயத்தில் ஏதாவதொரு விதத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ செல்வாக்கு செலுத்தும் சூழ்நிலை இருப்பதால் நான் சொல்லப்போவதை எல்லோருமே நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இதில் சம்பந்தப்பட்டிருக்கிற அனைவருமே தங்கள் தங்கள் கடமையை முழுமையாக செய்யாமல் போய்விடுகின்ற ஆபத்து இருக்கின்றது. இந்த விஷயத்தில்தான் மனிதர்கள் தாங்கள் விடுகின்ற தவறுகளைவிட பக்கத்து வீட்டுக்காரர்கள் விடுகின்ற தவறுகளைக் கவனமாகப் பார்க்கின்றவர்களாக இருக்கிறார்கள். தங்கள் நண்பர்கள், அவர்களுடைய பிள்ளைகளை சரியாக வளர்க்கவில்லையென்று குற்றஞ்சாட்டுகின்ற இவர்கள் தங்கள் நண்பர்கள் விடுகின்ற அதே தவறைச் செய்தே தங்களுடைய பிள்ளைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களின் குடும்பங்களில் காணப்படும் தூசியைக் தெளிவாகப் பார்க்கிற இவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்திலுள்ள பெருந்தூண்களைப் போன்ற தவறுகளைக் கவனியாமல் போகிறார்கள். மற்றவர்கள் விடுகின்ற தவறுகளைத் தூரத்தில் இருந்து கழுகுக் கண்களோடு உடனடியாக கவனிக்கிற இவர்கள், தங்கள் குடும்பத்தில் அன்றாடம் செய்து கொண்டிருக்கிற தவறுகளைக் கவனிப்பதில் வவ்வாலைப் போலக் குருடராக இருக்கிறார்கள். தங்கள் சகோதரரின் குடும்பத்துக்கு நல்ல புத்திமதிகளை அளிக்கிற இவர்கள், தங்கள் சொந்த பிள்ளைகளின் விஷயத்தில் முட்டாள்களைப்போல நடந்து கொள்கிறார்கள். நாம் எதையாகிலும் சந்தேகிக்க வேண்டுமானால் நமது சொந்தத் தீர்மானங்களைக் குறித்து சந்தேகிப்பதை மட்டுமே வழக்கமாகக் கொள்ள வேண்டும். இதையும் மனதில் வைத்திருப்பது நலமாயிருக்கும்.

பிள்ளைகளை சரியான விதத்தில் வளர்ப்பதைக் குறித்து நான் சில ஆலோசனைகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். அவைகளை பிதாவாகிய தேவனும், குமாரனாகிய கடவுளும், பரிசுத்த ஆவியாகிய கடவுளும் ஆசீர்வதிப்பாராக. ஏற்ற வேளையில் கூறப்பட்ட புத்திமதியாகும்படி அருள்புரிவாராக. அவைகள் எளிமையாகவும், சாதாரணமாகவும் தோன்றுவதால் அவைகளை ஏற்க மறுத்து விடாதீர்கள். அவைகளில் புதிய விஷயம் எதுவும் சொல்லப்படவில்லையென்பதற்காக அவற்றை அலட்சியப்படுத்தி விடாதீர்கள். உங்களுடைய பிள்ளைகளை பரலோகத்துக்குரியவர்களாக வளர்க்க நீங்கள் ஆசைப்படுவீர்களானால், இந்த ஆலோசனைகளை சாதாரணமானதாக எண்ணி ஒதுக்கி விடாதீர்கள்.

### 1. முதலாவதாக, பிள்ளைகளை சரியானவிதத்தில் நீங்கள் வளர்க்க வேண்டுமானால், அவர்களுடைய விருப்பத்தின்படி அல்லாமல், அவர்கள் நடக்கவேண்டிய வழியில் அவர்களை வளர்க்கவேண்டும்.

பிள்ளைகள் பாவத்தை செய்யக்கூடிய நிலைமையிலேதான் பிறந்திருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். அவர்களுடைய வழியை அவர்களே தீர்மானித்துக்கொள்ளும்படி நீங்கள் விட்டுவிடுவீர்களானால் அவர்கள் நிச்சயமாக தவறான வழியைத்தான் தெரிந்துகொள்ளுவார்கள்.

ஒரு தாய் தனக்குப் பிறக்கின்ற குழந்தை பெரியவனாகும்போது உயரமாகவா, குட்டையாகவா, ஒல்லியாகவா, குண்டாகவா, புத்திசாலியாகவா, அறிவற்றவனாகவா இருப்பான் என்று கூற முடியாது. இவை எல்லாவற்றையும யாரும் தீர்மானிக்க முடியாது. தோற்றத்தில் அவன் எப்படி வேண்டுமானாலும் மாறலாம். ஆனால், அந்தத் தாய் ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூறலாம்: அவனுக்குள்ளாக பாவத்தை நாடுகிற ஒரு கெட்டுப்போன இருதயம் இருக்கிறது என்பதே அந்த உண்மை. தவறு செய்வது நமக்கு இயல்பாகவே வரும். “பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்“ (நீதிமொழிகள் 22:15) என்று சாலமோன் சொல்லுகிறார். “தன் இஷ்டத்துக்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்” (நீதிமொழிகள் 29:15). நமது இருதயங்கள் பூமியில் நாம் நடந்துபோகும் நிலத்தைப் போன்றவை. நிலத்தை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டால் அது நிச்சயமாகக் களைகளைத்தான் தோற்றுவிக்கும்.

ஆகவே, நாம் ஞானத்தோடு நடந்துகொள்ள வேண்டும். உங்களுடைய பிள்ளையை அவனுடைய சித்தத்தின்படி போகும்படியாக விடுவது ஞானமான செயல் அல்ல. அவனுக்காக நீங்கள் சிந்திக்க வேண்டும். அந்தப்பிள்ளைக்காக நீங்கள் தீர்மானங்களை எடுக்க வேண்டும், எடுத்த தீர்மானங்களின்படி நடக்க வேண்டும். ஒரு குருடனுக்கோ, பலவீனமானவனுக்கோ உதவி செய்யும்போது எப்படி நடந்துகொள்ளுவீர்களோ அப்படி உங்கள் பிள்ளையின் விஷயத்திலும் நடந்துகொள்ள வேண்டும். அந்தப் பிள்ளை ஆசைப்படுவதையெல்லாம்

கொடுத்து அதைக் குட்டிச்சுவராக்கிவிடாதீர்கள். அந்தப் பிள்ளை விருப்பப்படுவதையெல்லாம் நல்ல ஆலோசனையாக ஒருபோதும் எடுத்துக்கொள்ளக்கூடாது. தன்னுடைய சிந்தனைக்கும், சரீரத்திற்கும், ஆவிக்கும் எந்தெந்த விஷயங்கள் நலமானவை என்று அந்தப் பிள்ளையால் தீர்மானிக்க முடியாது. உங்களுடைய பிள்ளை என்ன உணவருந்த வேண்டும், எதைக்குடிக்க வேண்டும், என்ன உடை உடுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை நீங்கள் அதன் கையில் விட்டுவிடக்கூடாது. உங்களுடைய பிள்ளையை வளர்க்கும் விஷயத்தில் நீங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு தீர்மானமும், நடவடிக்கையும் தொடர்ச்சியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்கின்ற காரியங்கள் பிள்ளை வளர்ப்புக்கு உதவாது. அந்தப் பிள்ளையின் சிந்தனையில் நீங்கள் பதிய வைக்க வேண்டிய விஷயங்களிலும் தொடர்ச்சி இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ அடிப்படையில் பிள்ளை வளர்ப்பின் இந்த முதல் கொள்கையை உங்களால் கடைப்பிடிக்க முடியாதென்றால் அதற்குமேல் இந்த ஆக்கத்தை வாசிப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. சுய சித்தத்தின் அடிப்படையிலான பிடிவாதம்தான் குழந்தையின் மனதில் முதலாவதாக தோன்றுகிற விஷயம். அதற்கு எதிர்த்து நிற்பதுதான் உங்களுடைய கடமையின் முதலாவது படியாக இருக்கவேண்டும்.

## 2. மென்மையோடும், அன்போடும், பொறுமையோடும் பிள்ளைக்குப் பயிற்சி கொடுங்கள்.

உங்கள் பிள்ளைக்கு செல்லம் கொடுத்துக் கெடுக்கும்படியாக நான் சொல்லவில்லை. நீங்கள் உங்கள் பிள்ளையை நேசிக்கிறீர்கள் என்பதை அவன் அறிந்து கொள்ளும்படி செய்யுங்கள்.

நீங்கள் அவனை வழிநடத்துகிற சகல காரியத்திலும் அன்பாகிய நூல் இழையோட வேண்டும். அன்பு, சாந்தம், பொறுமை, விடாமுயற்சி, இரக்கம், குழந்தைத்தனமான அவனுடைய துன்பங்களிலும் சந்தோஷங்களிலும் பங்கெடுத்துக்கொள்ளுதல் ஆகிய குணாதிசயங்களைக் கடைப்பிடித்து பிள்ளைகளுக்குப் பயிற்சி அளித்தால் அந்தப் பிள்ளைகள் உங்களுக்குப் பணிவார்கள். இந்தக் காரியங்கள் மூலமாகவே உங்களுடைய பிள்ளைகளின் இருதயத்திலும் நீங்கள் இடம்பிடிக்க முடியும்.

எதற்கும் பணிந்து நடப்பதைக் காட்டிலும், விலகி ஓடுவதே பெரியவர்களிடத்திலும் பெரும்பாலும் காணப்படுகின்ற குணமாயிருக்கிறது. கட்டாயப்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதென்பது நமது மனதோடு படிந்துவிட்டதொன்றாயிருக்கிறது. வலுக்கட்டாயமாக கீழ்ப்படிதலுக்கு உட்படுத்தப்பட்டோமானால், அதற்கு விலகி ஓடுவதும், எதிர்ப்புத் தெரிவிப்பதும் நமக்கு வாடிக்கையாக இருக்கிறது. குதிரைகளை பழக்குவிப்பவர்களின் வசமுள்ள இளங்குதிரையைப் போல நாம் இருக்கிறோம். அந்த இளங்குதிரையை மென்மையாக நடத்தினால் அது மெதுவாக இணங்கி வரும். அப்போது அதன் கழுத்தில் கயிறை மாட்டி

அதனை நன்கு பழக்கப்படுத்த முடியும், அதை வலுக்கட்டாயப்படுத்தினால், அதைக் வழிக்குக் கொண்டு வருவதற்கு அதிக நாட்கள் ஆகும்.

நம்முடைய மனதைப் போலத்தான் பிள்ளைகளுடைய மனதும் உருவாக்கப்பட்டுள்ளது. கடுமையாகவும், கொடூரமாகவும் அவர்களிடம் நடந்து கொண்டால் அவர்கள் ஒருபோதும் உங்களிடம் வரவே மாட்டார்கள். அவர்கள் தங்களுடைய இருதயத்தை அடைத்துக் கொள்வார்கள். நீங்கள் பிறகு என்ன செய்தாலும் அவர்கள் இருதயத்தைத் திறக்க வழி தெரியாமல் சோர்ந்து போவீர்கள். நீங்கள் உண்மையாகவே அவர்களை நேசிக்கிறீர்கள் என்றும், அவர்களுக்கு நன்மை செய்யவும் அவர்களை சந்தோஷப்படுத்தவும்தான் விரும்புகிறீர்கள் என்பதையும் அவர்கள் அறியும்படிச் செய்வீர்களானால் அவர்களை உங்கள் வசப்படுத்திக்கொள்ளலாம். நீங்கள் அவர்களுக்கு தண்டனை தருவதுகூட அவர்களுடைய நன்மைக்காகத்தான் என்றும், அவர்களுடைய ஆத்தும நன்மைக்காக நீங்கள் உங்கள் இருதயத்தின் இரத்தத்தையே சிந்துகிறீர்கள் என்றும் அவர்களுக்கு உணர்த்திவிட்டீர்களானால் அவர்கள் மீண்டும் உங்களோடு ஒட்டிக்கொள்வார்கள். அவர்கள் கவனத்தைக் கவர்ந்துகொள்ள வேண்டுமானால், தண்டிப்பதையும் அன்போடும் இரக்கத்தோடும்தான் செய்ய வேண்டும்.

புத்திசாலித்தனமே நமக்கு இந்தப் பாடத்தைக் கற்றுத் தரக்கூடும். பிள்ளைகள் பலவீனமும், மென்மையுமானவர்கள். ஆகவே அவர்களிடம் பொறுமையோடும் கரிசனையோடும் நடந்துகொள்ள வேண்டும். நுட்பமான இயந்திரத்தை மிகவும் கவனமாகக் கையாளாவிட்டால் அது கெட்டுப்போய்விடுவதைப் போல, பிள்ளைகளையும் கடினமாக நடத்தினால் அது அவர்களுக்குத் தீமையையே விளைவிக்கும். புதிதாகத் துளிர்த்த இளஞ்செடிகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தண்ணீர் ஊற்ற வேண்டும்; ஆனால், அடிக்கடியும் ஊற்ற வேண்டும். பிள்ளைகளும் இளஞ்செடிகளைப் போன்றவர்களே.

எல்லாவற்றையும் நாம் பிள்ளைகளிடத்தில் உடனடியாக எதிர்பார்க்கக் கூடாது. பிள்ளைகளின் நிலை இன்னதென்று நாம் உணர்ந்து, அவர்களால் கற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கே நாம் அவர்களுக்கு கற்பிக்க வேண்டும். அவர்களுடைய மனம் உலோகக் கட்டியைப் போன்றது. ஒரே அடியில் அதை உபயோகமுள்ள பாத்திரமாக மாற்றிவிட முடியாது. சிறிது சிறிதாகத்தான் அதை உருவாக்க முடியும். அவர்களுடைய புரிந்துகொள்ளும் தன்மை, குறுகிய வாயை உடைய குடத்தைப் போன்றது. அதில் ஞானமாகிய பானத்தை மெதுவாகத்தான் இறக்க முடியும். ஒரேயடியாக அதில் கொட்ட முனைந்தால், முழுவதும் வெளியில் சிந்தி வீணாகிவிடும். "வார்த்தை வார்த்தையாக, கற்பனையின்மேல் கற்பனையாக, பிரமாணத்தின்மேல் பிரமாணமாக, இங்கே கொஞ் சமும் அங்கே கொஞ்சமுமாக" கொடுப்பதே நமது வேலையாக இருக்க வேண்டும். ஆயுதங்களைக் கூர்மையாக்க உபயோகப்படும் சாணைபிடிக்கும் இயந்திரக்கல் ஆரம்பத்தில் மெதுவாகத்தான் தன் வேலையை செய்யும்.

*ஆனால், அடிக்கடி சாணைபிடித்தபின் அந்தக் கல் பதப்பட்டு, வேகமாகத் தன் பணியை செய்யும். பிள்ளைகளை பயிற்சி தந்து வளர்ப்பதில் நமக்குப் பொறுமை தேவை, அதில்லாமல் ஒரு பிரயோஜனமும் இல்லை.*

*அன்பிற்கும் மென்மைக்கும் ஈடு இணை எதுவுமில்லை. ஒரு போதகர், சத்தியத்தை இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக தெளிவாகவும், அதிகாரத்தோடும், சாக்குபோக்கு சொல்ல முடியாத விதத்திலும் பேசலாம். ஆனால், அவர் அதை அன்போடு கூறவில்லையென்றால் அவரால் அதிகமான ஆத்தும ஆதாயம் செய்ய முடியாது. அதுபோல நீங்கள் உங்கள் பிள்ளைகளிடம் அவர்களுடைய கடமைகளை விளக்கலாம். கட்டளையிடலாம், பயமுறுத்தலாம், தண்டிக்கலாம், காரணம் காட்டலாம். ஆனால், உங்கள் செயலில் அன்பு இழையோடாமலிருந்தால் உங்களுடைய முயற்சிகள் யாவும் வீணாய்த்தான் போகும்.*

*வெற்றிகரமான கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பின் மாபெரும் இரகசியம் அன்புதான். கோபமும் கடூரமுமாக பிள்ளைகளை நடத்தினால் ஒருவேளை அவர்கள் பயந்து உங்களுக்குக் கீழ்ப்படியலாம். ஆனால் நீங்கள் சரியாகத்தான் நடக்கிறீர்களா என்று அவர்கள் உங்களை சந்தேகிக்கத் தொடங்கிவிடுவார்கள். நீங்கள் அடிக்கடி கோபம் கொண்டீர்களானால், பிள்ளைகளிடமிருந்து மரியாதையை பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விடும். சவுல், யோனத்தானிடம் பேசியது போல (1 சாமு 20:30) ஒரு தகப்பன் தன் பிள்ளைகளிடம் பேசுவானெனில், அந்தப் பிள்ளைகளின் மனதை அவனால் ஒருபோதும் கவர முடியாது.*

*பிள்ளைகளின் அன்பை தக்கவைத்துக்கொள்ள எப்போதும் பிரயாசப் படுங்கள். பிள்ளைகள் உங்களைக் கண்டு பயப்படும்படியாக நடந்து கொள்வது ஆபத்தானது. உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நடுவே மனஇறுக்கமோ, இயல்பாக பேச முடியாத நிலையோ ஏற்படுவது சரியல்ல. பயத்தினால் இந்நிலை ஏற்பட்டுவிடும். பயமானது, வெளிப்படையாகப் பழகுவதைத் தடை செய்கிறது. பயம், ஒருவனை ஒளித்துக் கொள்ளச் செய்யும். மாய்மாலத்தை உண்டாக்கும். அநேகம் பொய்களைப் பேசச் செய்யும். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெய சபைக்கு எழுதிய இவ்வசனத்தில் பேருண்மை நிரம்பியிருப்பதை கவனியுங்கள்: "பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி (மனம் தளர்ந்து), அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்" (3:21). பவுல் கூறுகிற இந்த புத்திமதியை அலட்சியமாக எண்ணிவிடாதீர்கள்.*

## 3. பிள்ளையை சரியானபடி வளர்க்கும் பெரும் பொறுப்பு உங்கள் கையில்தான் இருக்கிறது என்கிற எண்ணம் எப்போதும் உங்கள் மனதில் இருக்கட்டும்.

*கிருபையே எல்லாவற்றைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது. ஒரு பாவியின் இருதயத்தை கிருபையானது ஆட்கொள்ளும் போது அது என்னவித மாற்றங்களை ஏற்படுத்துகிறதென்று பாருங்கள். சாத்தானின் கோட்டையை அது தகர்க்கிறது. குன்றுகளையெல்லாம் சமமாக்கி*

பள்ளங்களை நிரப்புகிறது. கோணலானவைகளை நேராக்குகிறது. மனிதனை புதுசிருஷ்டியாக்குகிறது. சொல்லப்போனால் கிருபையால் செய்ய முடியாதது எதுவுமேயில்லை.

மனிதனின் இயற்கை சுபாவமும்கூட மிகவும் உறுதியானதுதான். அது கடவுளுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக எந்தளவுக்குப் போராடுகிறது என்று பாருங்கள். பரிசுத்தமாக நடக்க எடுக்கும் முயற்சிகளுக்கு எப்படி எதிர்த்து நிற்கிறது என்பதைக் கவனியுங்கள். மரணமடையும் அந்த கடைசி நொடிவரைக்கும் நமக்குள்ளேயே இருந்து கொண்டு இடைவிடாமல் போரிட்டுக் கொண்டேயிருக்கிறது. ஆம், இயற்கை சுபாவமும் உறுதியானதுதான்.

ஆனால் இயற்கை சுபாவத்துக்கும், கிருபைக்கும் அடுத்தபடியாக பலமுள்ளதாய் இருப்பது கல்விதான். நமக்கு ஆரம்பகாலத்தில் கடவுளின் வழியில் கற்பிக்கப்பட்டிருக்கிற நற்பழக்கவழக்கங்கள் நம்மில் நிலைத்திருக்கின்றன. நாம் எவ்விதமாக வளர்க்கப்பட்டிருக்கிறோமோ அந்தவிதமாகத்தான் நாம் இருப்போம். ஆரம்ப வயதில் நமக்கு கற்பிக்கப்பட்ட பழக்கவழக்கங்களின்படியாகவே நம்முடைய குணங்கள் உருவாகின்றன.

நம்மை வளர்த்தவர்களைப் பொறுத்து பெரும்பாலும் நமது குணநலன்கள் தோன்றுகின்றன. நமது இரசனைகள், விருப்பு வெறுப்புகள், குறிக்கோள்கள் இவை யாவற்றையும் அவர்களிடமிருந்தே பெற்றிருக்கிறோம். ஏறக்குறைய நமது வாழ்நாள் முழுவதும் அவை நம்மோடு ஒட்டிக்கொண்டே இருக்கின்றன. தாயோ அல்லது தாதிகளோ எப்படிப் பேசுகிறார்களோ அந்தவிதமாகவே பேசக்கற்றுக்கொண்டு நாமும் கொஞ்சமும் யோசிக்காமல் பேசிவருகிறோம். அதேபோல் அவர்களுடைய பழக்கவழக்கங்களும், வழிமுறைகளும், விருப்பங்களும் நம்மைத் தொத்திக்கொள்ளுகின்றன என்பதில் சந்தேகமேயில்லை. நாம் எந்தளவுக்கு நம்மை வளர்த்தவர்களால் பாதிக்கப்பட்டு, என்னென்ன காரியங்கள் அவர்களுடைய செல்வாக்கால் நம்மில் பதிந்து காணப்படுகின்றன என்பதைக் காலம் மட்டுமே நமக்கு சொல்ல முடியும். கல்விமானாகிய லொக்கி (Locke) என்பவர் சொல்லியிருக்கிறார், ‘நாம் சந்திக்கின்ற அத்தனை மனிதர்களிலும் காணப்படும் நல்லதோ கெட்டதோ, பயனுள்ளதோ பயனில்லாததோ அனைத்திலும் பத்தில் ஒன்பது அவர்கள் பெற்றுக்கொண்ட கல்வியிலும், வளர்ப்பு முறையிலும் இருந்தே வந்திருக்கின்றது.’

இது, கடவுள் ஏற்படுத்தியிருக்கும் தயவுள்ள ஆசீர்வாதங்களில் ஒன்று. உங்களுடைய குழந்தைக்கு தான் கற்கின்றவற்றை பதியவைத்துக் கொள்ளக்கூடிய ஈரப்பதமுள்ள களிமண் போன்ற மனநிலையை அவர் அருளியிருக்கிறார். நீங்கள் சொல்லுவதையெல்லாம் நம்பக்கூடியதான மனநிலையை அப்பிள்ளையின் ஆரம்ப வளர்ச்சிக் கால நாட்களில் கொடுத்திருக்கிறார். நீங்கள் கூறுகிற புத்திமதியையெல்லாம் அப்பிள்ளை அப்போது ஏற்றுக்கொள்ளும். முன்பின் அறியாதவர்கள் கூறுவதை

*நம்புவதைக் காட்டிலும் பெற்றோர் கூறுவதையே பிள்ளைகள் நம்பும் ஆரம்பப் பருவம் அது. உங்களுடைய குழந்தைகளுக்கு நன்மை ஏற்படும்படியாக அக்காலங்களை உபயோகித்துக் கொள்ளும் பொன்னான வாய்ப்பை அவர் உங்களுக்குத் தந்திருக்கிறார். அந்த வாய்ப்பை நழுவ விட்டுவிடாதீர்கள், அலட்சியப்படுத்திவிடாதீர்கள். அதைக் கைநழுவ விட்டுவிட்டீர்களானால் திரும்பவும் பெறவே முடியாது.*

*சில பெற்றோர்கள் மனதில் கொண்டிருப்பதுபோன்ற மோசமான கற்பனைக்கு நீங்கள் ஆளாகாதிருங்கள். அதாவது, பிள்ளைகளின் வளர்ச்சி குறித்து பெற்றோர் ஒன்றுமே செய்ய முடியாதென்றும், அந்தப் பிள்ளைகளை தாமே வளரும்படி அப்படியே விட்டுவிடவேண்டுமென்றும், கடவுளின் கிருபையைப் பெறும்படியாக மட்டும் காத்திருக்க வேண்டுமென்றும், வெறெதையும் செய்யாமல் சும்மாயிருக்க வேண்டும் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட பெற்றோர் பிலேயாமின் மனநிலையைக் கொண்டிருந்து, தங்களுடைய பிள்ளைகள் நீதியுள்ளவர்களாக வாழ்ந்து மரிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால், அப்படி அவர்கள் வாழ அவர்கள் ஒன்றையுமே செய்யப்போவதில்லை. அவர்கள் அதிகமாக ஆசைப்படுகிறார்கள், ஆனால், ஒன்றையுமே அடைவதில்லை. பிசாசு இந்தமாதிரியான எண்ணங்கள் உங்களுக்கு இருப்பதைப் பார்த்து சந்தோஷப்படுவான். சோம்பேறித்தனங்களையும், கிருபையின் சாதனங்களை அலட்சியப்படுத்துவதையும் பார்க்கும்போது அவன் சந்தோஷமடைவான்.*

*உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஆத்மீக மனமாற்றத்தைக் கொடுக்க முடியாது என்பதை நான் அறிவேன். மறுபடியும் பிறக்கிறவர்கள் மனிதனுடைய விருப்பத்தினால் அல்ல, கடவுளின் சித்தத்தினாலேயே பிறக்கிறார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். அதே சமயத்தில், “பிள்ளையை நடக்க வேண்டிய வழியிலே நடத்து” என்று வெளிப்படையாகக் கட்டளையிட்டிருப்பதையும் நான் அறிவேன். கர்த்தருடைய கிருபையைக் கொண்டு செய்ய முடியாத எந்தக் கட்டளையையும் கடவுள் மனிதனுக்குக் கொடுப்பதில்லை. எனக்குத் தெரியும் நமது கடமை கர்த்தருடைய கட்டளைகளை விவாதித்து தர்க்கம் செய்வதல்ல; அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பது மட்டுமே. அவற்றை நிறைவேற்றி முன்னோக்கிப் போகின்றபோதுதான் கடவுள் நம்மை சந்திக்கிறார். நாம் அவருக்குக் கீழ்ப்படியும்போதே அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். கானாவூர் கலியாணத்திலே வேலையாட்கள் நடந்து கொண்டதைப் போலத்தான் நாமும் நடக்க வேண்டும். கர்த்தர், கற்ஜாடிகளைத் தண்ணீரினால் நிரப்பச் சொன்னார். நிரப்புவதுதான் நமது வேலை. அதைத் திராட்சை ரசமாக்கும் பணியை கர்த்தரிடம் விட்டுவிடுவது நல்லது.* *(இனியும் வரும்)*

மொழியாக்கம்: வினோதா சுரேந்தர் — மொழியமைப்பு: ஆசிரியர்

**அட்டைப் படத்தில் நாம் பார்ப்பது தமிழ்நாட்டில் கரூர் மாவட்டத்திலுள்ள வீரியபாளையத்தில் நடந்த சுவிசேஷக் கூட்டத்தில் மக்கள் அமர்ந்திருக்கும் காட்சி.**

**சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்கள் தமிழகத்திலுள்ள கீழ் வரும் ஐந்து முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

| எண் | புத்தகப் பெயர் | ஆசிரியர் | ரூ.பை. |
|---|---|---|---|
| 1. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை | A.N. மார்டின் | 25.00 |
| 2. | கர்த்தரின் வேதம் | ஆர். பாலா | 35.00 |
| 3. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ஆர். பாலா | 15.00 |
| 4. | பிரசங்கிகளும் பிரசங்கமும் | ஆர். பாலா | 55.00 |
| 5. | சிறுவர்களுக்கான வேத உபதேசம் | ஆர். பாலா | 20.00 |
| 6. | குடும்ப ஆராதனை | ஆர். பாலா | 20.00 |
| 7. | தாம்பத்திய உறவில் நெருக்கம் | அலன் டன் | 75.00 |

திரு. K. அருள் செல்வம்,
4/630, கிருபை இல்லம்,
ஆண்டவர் நகர், நாமக்கல் 637002.
கைப்பேசி 9443798315

திரு. டேவிட் பிரகாசா,
14 சுந்தரம் 3வது தெரு, PN புதூர்,
கோயமுத்தூர் 641041.
கைப்பேசி 9500748128

போதகர் S.D. ஜெரால்டு,
(கிருபை சபை)
5B/9/8 - தன்ராஜ் ஸ்டோர்,
சுப்ரமணியபுரம், விசாலபாகம்
2வது தெரு, மதுரை 625011.
கைப்பேசி 9994874077

போதகர் T. அண்ணாதுரை,
(கிருபை சுவிசேஷ சபை)
வீரியபாளையம் (PO),
பஞ்சப்பட்டி (via),
K.R. புரம் (TK),
கரூர் 639119.
கைப்பேசி 9789741732

போதகர் M. ஜேம்ஸ்
(கிருபை சீர்திருத்த சபை)
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர்,
அயனாவரம்,
சென்னை 600023.
கைப்பேசி 9445671113;
9444347829

ஸ்ரீலங்காவிலுள்ளவர்கள் திருமறைத்தீபம் இதழைப் பெற கீழுள்ள முகவரியோடு தொடர்புகொள்ளவும்:

கிருபை வேதாகம சபை, 19 இராஜசிங்க வீதி, கொழும்பு, ஸ்ரீலங்கா
தொலைப்பேசி: 2503519

ஸ்ரீலங்காவிலுள்ளவர்கள் சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்களைப் பெற கீழுள்ள முகவரியோடு தொடர்புகொள்ளவும்:

திரு. மில்டன் மஸ்கிறெங்ஞு,
25 ஷூ ரோடு, கொழும்பு 13, ஸ்ரீலங்கா.
தொலைப்பேசி: 2345654; கைப்பேசி 0722818296

# திருமறைத்தீபம் இணைய தளம்

**திருமறைத்தீபம் (PDF/Unicode)**

**தமிழ் ஆடியோ, வீடியோ பிரசங்கங்கள்**

**கிறிஸ்தவ இலக்கியங்கள்**

**இறையியல் பூங்கா**




**புதிய ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள் வெளியிடப்பட்டுள்ளது. கேட்டுப் பயனடையுங்கள்.**













**இத்தளம் உங்களுக்குப் பயனளிக்கும் என்று நம்புகிறோம். இது பற்றிய உங்கள் கருத்துக்களையும் எங்களுக்கு அறிவியுங்கள். அது தளத்தை மேலும் உங்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைக்க எங்களுக்குத் துணை புரியும்.**

**http://www.biblelamp.me (or) www.biblelamp.org**

---




## புதிய வெளியீடு

போதகர் அல்பர்ட் என். மார்டின் பிரசங்கித்த "பிரியாவிடைப் பிரசங்கங்கள்" தற்போது

## "அழிவில்லா ஆத்மீக ஆலோசனைகள்"

என்ற பெயரில் புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ள தமிழக முகவரிகளில் இப்புத்தகத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். தபாலில் பெற விரும்புபவர்கள் தபால் கட்டணம் குறித்த தகவல்களை பத்திரிகையிலுள்ள கைப்பேசி எண்களில் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் வேண்டுவோர் கூடுதல் பிரதிகளுக்கான விலையாக ரூ.75/- (ஒரு புத்தகத்தின் விலை) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

---

தபாலில் பெற விரும்புபவர்கள் உங்களுடைய பெயர், முழு முகவரியோடு உங்களுடைய தொலை பேசி எண்ணையும் தவறாமல் குறிப்பிடுங்கள். - ஆசிரியர்

# திருமறைத்தீபம்

மலர் 19 ஏப்ரல் - ஜூன் 2013 இதழ் 2

1. காலத்தால் அழியாத கர்த்தரின் கட்டளைகள்
2. சொல்ல வேண்டியவிதத்தில் சொல்லுவோம் சுவிசேஷம்
3. வாலிப நாட்களை அலட்சியம் செய்யாதீர்கள்!
4. பெற்றோரின் கடமைகள் - ஜே.சீ. ரைல்

---




ரூ.50


## புதிய வெளியீடு

"கிறிஸ்தவ திருச்சபை வரலாறு"
(பாகம் 1)

முதன் முறையாக கிறிஸ்தவ திருச்சபை வரலாறு இலகுவான தமிழில், படங்களோடு தெளிவான விளக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது.

முதல் பாகமாக திருச்சபை வரலாற்றில் மறுமலர்ச்சி காலம் வரையுள்ள நிகழ்வுகளை இந்நூலில் வாசித்து பயன்பெறலாம்.

---




ரூ.50

## மறு வெளியீடு

வாசகர்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க

"ஆதிசபையின் அற்புத வரங்கள்"

என்ற புத்தகம் மறுபதிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

1 கொரிந்தியர் 12-14 வரையுள்ள வேதப்பகுதி வேதப்பூர்வமாக ஆராயப்பட்டு இன்றைய கால நடைமுறை விளக்கங்களோடு புத்தகமாக வெளிவருகிறது.

பத்திரிகையிலுள்ள தமிழக முகவரிகளில் இப்புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தபால் கட்டணம் தனி.